கோகுலம்

GOKULAM

டிசம்பர் '85 ரூ. 2.



கட்டடக் கலைஞர் 2011 கி.பி!

உங்கள் குழந்தைக்கு உள்ளார்ந்த திறமைகள் சில உண்டு. ஆனால் இந்த ஆற்றல்கள் அவன் வளர வளர மலர்ந்து பிரகாசிக்குமா ? நீங்கள் அவனுக்கு அத்யாவசியமான கல்வியை, வாழ்வின் மிகத் தேவையான துவக்கத்தை அளித்து, அவனை போற்றி வளர்க்கும் இலட்சியங்களை எட்டுவதற்கு உதவி செய்வீர்களா ?

அவனுடைய வருங்காலத்திற்கு திட்டமிடுங்கள். எல்ஐஸியுடன் உங்கள் சேமிப்பைத் திட்டமிடுவதன் மூலம். உங்கள் குழந்தையின் உயர் கல்வி, திருமணம் அல்லது தொழிலில் ஈடுபடுவது போன்று எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட தேவைகளுக்குத் தக்க பாலிஸிகள் இருக்கின்றன.

இபபோதே உங்கள் எல்ஐசி ஏஜண்ட்டை அணுகுங்கள். பாதுகாப்பான வருங்காலத்திற்கு திட்டமிட அவர் மகிழ்ச்சியுடன் உதவி செய்வார்.

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும்.




லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன் ஆப் இந்தியா

ஆயுள் இன்ஷுரன்ஸுக்கு மாற்று ஏதும் கிடையாது.

NPS

கோகுலம்



உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

மலர் 3 இதழ் 11

1985 டிசம்பர் இதழ்

தனிப் பிரதி ரூ. 2/—

ஆண்டுச் சந்தா ரூ. 24/—

அருமைச் சிறுவர் சிறுமியரே,

நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியரும் பல பெரியவர்களும் தங்களின் இனிய தீபாவளி வாழ்த்துக்களை அன்புடன் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

''சிறுவருக்காக, தமிழிலே அதிகமான கதைகளை எழுதியவர் யார்?'' என்று ஒரு கேள்வி கேட்டால், அதற்கு 'தங்கமணி' என்பதுதான் விடையாக இருக்கும். ஆம், ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், பல நெடுங்கதைகளையும் எழுதியவர் திரு தங்கமணி! புத்தகங்கள்.....? 200க்கு மேல் இருக்கும்! 'அதிசய உலகில் ஆலிஸ்' கதையை எழுதிய லூயி கரால் போல, குட்டிக் குட்டிக் கதைகளாகப் பல கட்டுக் கதைகளை எழுதிய ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் போல இவரும் ஒரு பிரும்மச்சாரி! சிறுவருக்கு எழுதுவதிலே சிந்தனையெல்லாம் செலுத்தி வரும் ஒரு முழுநேர எழுத்தாளர்! இந்த ஆண்டு இவரது மணி விழா ஆண்டு. இந்த இதழில் இவரது தொடர்கதை ஆரம்பமாகிறது.



தொடர்கதையின் பெயரைப் பார்த்தவுடனே ''என்ன இது! பூதம், பிசாசுக் கதைகளை வெளியிட்டு எங்களைப் பயமுறுத்தப் பார்க்கிறீர்களா?'' என்று கேட்கத் தோன்றுகிறதா? இந்தக் கதையைத் தொடர்ந்து படியுங்கள். படித்து முடித்ததும், 'ப்பூ, பூதமாவது, பிசாசாவது!' என்று கூறுவதோடு நில்லாமல், இது போன்ற வதந்திகளை முறியடித்து, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் உங்கள் உள்ளத்திலே பொங்கி எழும்.

இந்த இதழில் இரண்டு புதுப்பகுதிகளைக் காணப் போகிறீர்கள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா? நீங்கள் அனைவரும் நோய் நொடியின்றி நீடூழி வாழ இராஜபாளையம் டாக்டர் கு. கணேசன், M.B.B.S. அவர்கள் எழுதிய கட்டுரை பயன்படும்.

உலகத்தில் எத்தனையோ விசித்திரமான நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறுகின்றன. அவற்றில், சிலவற்றைத் திரட்டி '(வி)சித்திரச் செய்திகள்' என்ற தலைப்பில் உங்களுக்கு மிகவும் அறிமுகமான ஓவியர்—எழுத்தாளர் ஆழி அவர்கள் தருகிறார்.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




இரா.சுவாமிநாதன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஆர்.சுரேந்திரன்




ஆர்.ஜே.ஜெல்குமார்



விதி




அ.இளங்கோவன்



வி.மீனாட்சி

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஷ்யாம் சுந்தர்



செ.சுமதி



ப.ஹரிகரன்

மேலட்டை வண்ணப்படம்:
யோகா

மின்மினிக் கதைகள்

நாய்க்கடி

ஒரு வெறிநாய் ஒரு சிறுவனைக் காலிலே கடித்துவிட்டது. அவன் அலறித் துடித்துக் கொண்டிருந்தான். கடித்த இடத்திலிருந்து இரத்தம் கொட கொட என்று கொட்டியது.

அப்போது அங்கு வந்த ஒரு பாட்டி நடந்ததை அறிந்தாள். உடனே, 'இந்த நாய்க்கடி சீக்கிரம் குணமாக வேண்டுமானால், ஒரே ஒரு வழிதான் உண்டு. ஒரு ரொட்டியை வாங்கி வரச் சொல்லி, அதை உன் காலில் வழிகிறதே ரத்தம் அதிலே தோய்த்து, உன்னைக் கடித்ததே அந்த நாய்க்குக் கொடு. உடனே குணமாகிவிடும்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

சிறிது நேரத்தில் அங்கு வந்தார் அவனுக்குத் தெரிந்த ஒரு பெரியவர். சிறுவன் அவரிடத்திலே, நாய் கடித்த விஷயத்தைக் கூறி, ''தாத்தா, தாத்தா எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்ய வேணும். எனக்கு உடனே ஒரு ரொட்டி வேணும். வாங்கிக் கொண்டு வருவதோடு, என்னைக் கடித்ததே அந்தக் கறுப்பும் வெள்ளையும் கலந்த சொறி பிடித்த நாய், அதையும் தேடிப் பிடித்து இந்தப் பக்கமாக விரட்டி விடுங்கள்'' என்று கெஞ்சினான்.

''ரொட்டி எதற்கு? அந்த நாய் எதற்கு?'' என்று பெரியவர் கேட்டார். பாட்டி சொன்ன வைத்தியத்தைக் கூறினான் பையன். உடனே அவர், ''ரொட்டியை ரத்தத்திலே தோய்த்து உன்னைக் கடித்த அதே நாய்க்குக் கொடுக்கப் போகிறாயா? பேஷ், பேஷ்!'' என்று கூறிச் சிரித்தார்.

தாத்தா ஏன் சிரிக்கிறார் என்பது புரியாமல் விழித்தான் சிறுவன். 'ஏன் தாத்தா சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நீ இப்படிச் செய்தவுடனே என்ன நடக்கும் தெரியுமா? இந்த ஊரிலுள்ள எல்லா நாய்களும் உன்னைத் தேடி வந்து கடிக்க ஆரம்பித்துவிடும்! ஒவ்வொரு நாய்க்கும்தான் ரொட்டி கிடைக்குமல்லவா? அதுவும் சாதாரண ரொட்டியா? உன் ரத்தத்தில் தோய்த்த ரொட்டியல்லவா?'' என்று கூறிப் பலமாகச் சிரித்தார்.



எலிப்படை


"நம் எதிரிகளாகிய பூனைகளுடன் நாம் போர் தொடுக்க வேண்டும். பூனைகள் ஒழிந்தால்தான் நமக்கு நிம்மதி" என்று எலிகள் கூடி முடிவு செய்தன. பெரிய படை போலத் திரண்டன. போருக்குப் புறப்பட்டன. பூனைகள் இருக்குமிடத்தைத் தேடிச் சென்றன.

எலிகளைக் கண்ட பூனைகளுக்குக் கொண்டாட்டம். உடனே அவை வேகமாகப் பாய்ந்து வந்து எலிகளைத் தாக்கின. சில எலிகளைப் பிடித்து விழுங்கி விட்டன. பல எலிகளைக் கொன்றுவிட்டன. மிஞ்சியிருந்த எலிகள் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று தலைதெறிக்க ஓடிவிட்டன.

"பத்துப் பதினைந்து பூனைகள் கூட இல்லை, நாமோ நூற்றுக் கணக்கில் இருந்தும் இப்படி ஆகிவிட்டதே!" என்று வருந்தியது ஓர் எலி.

உடனே ஒரு கிழட்டு எலி, "நம்மிலே சிலரைத் தளபதிகளாகத் தேர்ந்தெடுப்போம். தளபதிகளின் கட்டளைப்படி கட்டுப்பாடாகச் சென்று பூனைகளுடன் போர் தொடுத்தால், வெற்றி நமக்குத்தான்" என்றது.

தளபதிகளாகச் சில தைரியசாலி எலிகளைத் தேர்ந்தெடுத்தன. மற்ற எலிகளுக்கும் தளபதிகளுக்கும் வித்தியாசம் தெரிய வேண்டாமா? ஒவ்வொரு



தளபதியின் தலையிலும் குச்சிகளால் செய்த ஒரு குல்லாவை மாட்டின. பிறகு, பூனையுடன் போர் செய்யப் புறப்பட்டன.

இந்தத் தடவையும் எலிகளைக் கண்டதும் பூனைகள் வேகமாகப் பாய்ந்தோடி வந்தன. பூனைகளைப் பார்த்ததுமே, எலிகளின் தைரியமெல்லாம் பறந்தோடிவிட்டன. நடுநடுங்கி, வந்த வழியிலே ஓட்டம் பிடித்தன! பூனைகள் விடவில்லை; துரத்தின.

சாதாரண எலிகள் அங்கங்கே இருந்த வளைக்குள் புகுந்து தப்பித்துக் கொண்டன. ஆனால், தளபதி எலிகளோ, தலையில் குல்லா இருந்ததால் வளைக்குள் நுழைய முடியாமல் தவித்தன. குல்லாக்களைக் கழற்றுவதற்குள், பூனைகள் நெருங்கி வந்து அவற்றைப் பிடித்துக் கடித்துத் தின்றுவிட்டன. அப்புறம், பூனைகள் மேல் போர் தொடுக்கும் எண்ணத்தை அடியோடு கைவிட்டன எலிகள்!

பெரிய துரோகி!

ஆடு மேய்ப்பவன், தினமும் ஆடுகளை மேய்ப்பதற்காகக் காட்டுக்கு ஓட்டிக் கொண்டு போவான். அவனுடன் அவன் பிரியமாக வளர்த்து வந்த ஒரு நாயும் செல்லும்.



அந்தப் பக்கமாக ஓர் ஓநாய் அடிக்கடி வரும். அது சமயம் பார்த்து ஏதாவது ஓர் ஆட்டைத் தூக்கிச் சென்று தின்றுவிடும். ஆடு மேய்ப்பவனும் நாயும் எவ்வளவோ கவனமாக இருந்தும், ஆடுகள் குறைந்து கொண்டே வந்தன.

ஆடு மேய்ப்பவனுக்கு வயது அதிகமாகிவிட்டது. அடிக்கடி களைப்பு ஏற்பட்டது. ஆகையால் அவன் தன் நாயை அழைத்து, ''வெயில் நேரத்தில் என்னால் காவல் காக்க முடியவில்லை. நீதான் ஓநாய் வராமல் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறிவிட்டு ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கினான். தினமும் அவன் இப்படித் தூங்கியதால், நாய்க்கு ஓர் ஆசை ஏற்பட்டது. 'குட்டி ஆடுகளை நாமே அடித்துத் தின்றுவிட்டு, ஓநாய் தின்றுவிட்டதாகக் கூறிவிடலாம்' என்று முடிவு செய்து, வாரத்திற்கு ஓர் ஆட்டுக்குட்டியாகத் தின்றது.

ஆனால், ஒருநாள் இந்த விஷயம் ஆடு மேய்ப்பவனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவனுக்கு அபாரமான கோபம் வந்துவிட்டது. நாயைத் தடியால் அடி அடி என்று பலமாக அடித்தான். அதன் கழுத்தில் சுருக்குக் கயிற்றை மாட்டி அதைத் தூக்கிலே போடப் போனான்.

அப்போது அந்த நாய், ''ஐயா, நான் கொன்றது ஏழெட்டு ஆடுகளைத்தான். ஆனால், ஓநாய் என்னைப் போல் பலமடங்கு ஆடுகளைக் கொன்றிருக்குமே! அதை விட்டுவிட்டு எனக்குத் தண்டனை கொடுக்கிறீர்களே!'' என்றது.


''நீதான் பெரிய துரோகி. உன்னை என் பிள்ளை போல் பிரியமாக வளர்த்தேன். உன்னை நம்பி ஆடுகளைப் பாதுகாக்கச் சொன்னேன். ஆடுகளைக் காப்பாற்ற வேண்டிய நீயே இப்படித் திருடித் தின்று எனக்குத் துரோகம் செய்துவிட்டாயே! ஓநாயை விடப் பெரிய துரோகி நீதான்'' என்று கூறி அதைத் தூக்கிலே போட்டுவிட்டான்.

தீராத பகை

ஒரு குடியானவன் வீட்டுக்குச் சிறிது தூரத்தில் ஒரு புற்று இருந்தது. அதில் ஒரு நல்ல பாம்பு வசித்து வந்தது. ஒருநாள் அது, அந்தக் குடியானவனின் அருமைக் குழந்தையைக் கடித்துவிட்டது. மருந்து கொடுத்தார்கள்; மந்திரித்தார்கள். பலனில்லை; குழந்தை இறந்துவிட்டது!

இறந்து போன குழந்தையை நினைக்கும் போதெல்லாம், குடியானவனுக்கு அந்தப் பாம்பின் மீது மிகுந்த கோபம் வரும். 'பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன். என் குழந்தையைக் கொன்ற அந்தப் பாம்பைக் கொன்றால்தான் என் மனசுக்கு நிம்மதி ஏற்படும்' என்று முடிவு செய்தான்.

சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள், பாம்பு வெளியிலே வந்து மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்ததைக் குடியானவன் கண்டான்.



உடனே ஒரு கோடரியை எடுத்து வந்து, அதைக் குறி பார்த்து எறிந்தான். கோடரி பாம்பின் வாலில் பட்டதால், வாலின் நுனி மட்டும் தனியாகத் துண்டிக்கப் பட்டது. ஆனால், பாம்பு சாகவில்லை; துடிதுடித்துத் தப்பிச் சென்றுவிட்டது.

உடனே குடியானவனுக்குப் பயம் வந்துவிட்டது. 'தப்பிச் சென்ற இந்தப் பாம்பு இனி என்னை சும்மாவிடாது. சமயம் பார்த்துக் கடித்துவிடும். அதை எப்படியாவது சமாதானப்படுத்த வேண்டும். என்ன செய்யலாம்?' என்று யோசித்தான்.

தினமும் ஓர் ஆளாக்குப் பால் வாங்கிவந்து, அந்தப் புற்றிலே ஊற்றினான். இரண்டு மூன்று நாட்கள் ஆனதும், அந்தப் பாம்பு புற்றுக்கு வெளியே தலையை நீட்டிப் பேசத் தொடங்கியது:

''ஏ குடியானவனே, நீயோ உன் அன்புக் குழந்தையை இழந்துவிட்டாய். நானோ என் அருமை வாலை இழந்துவிட்டேன். என்னைப் பார்க்கும் போதெல்லாம், உனக்கு உன் குழந்தை நினைவுதான் வரும். அதேபோல், உன்னைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என் வாலின் நினைவுதான் வரும். பாலை ஊற்றிப் பகையை மாற்ற முடியுமா? இது வீண் வேலை'' என்று கூறியது.

குடியானவன் பதில் பேசவில்லை. குடிசைக்குத் திரும்பி விட்டான்.

கருத்து: ஈசாப்

நாய்க்கு அனுமதி



பாரிஸ் ஓட்டல் ஒன்றில் இப்படி ஒரு அறிவிப்பு:

''நாங்கள் நாய்கள் தங்க அனுமதிக்கிறோம்! காரணம், அவை திரைச்சீலைகளை 'ஷு' வுக்கு பாலிஷ் போடப் பயன்படுத்துவதில்லை! ஓட்டல் ஸ்பூன்களையும் பெட்ஷீட்களையும் திருடுவதில்லை.''

தகவல்: சம்பத்குமாரி.

ஆதாரம்: 'HERITAGE.'

அண்ணனின் அறிவுரை



ஸ்ரீ குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

தண்டபாணியின் அண்ணன் சரவணன் இராணுவத்தில் பணியாற்றுகின்றார். அவர் விடுமுறைக்கு வந்திருந்தார். தன்னுடைய தம்பிக்குப் பல பரிசுகள் வாங்கி வந்திருந்தார். அவைகளை எடுத்துக் கொண்டு தண்டபாணியின் அறைக்குச் சென்றார். அறை இருந்த அலங்கோலத்தைக் கண்டு அவருக்கு வருத்தமாக இருந்தது. அறை குப்பை கூளமாக இருந்தது. புத்தகங்கள் அறை முழுவதும் இறைந்து கிடந்தன. ஒரு பொருளாவது இருக்க வேண்டிய இடத்தில் இல்லை.

அவர் தண்டபாணியை அழைத்தார். அவனிடம் கூறத் தொடங்கினார்:

''தம்பி இந்த உலகத்தைப் பார்த்தாயா? உலக அமைப்பே ஒரு ஒழுங்குக்குள் கட்டுப்பட்டு நடக்கிறது. காற்று வீச வேண்டிய காலத்தில் வீசுகிறது. மழை உரிய காலத்தில் பெய்கிறது. இரவு பகல் ஒழுங்காக வந்து போய்க் கொண்டு இருக்கின்றன. அமாவாசை பௌர்ணமி எல்லாம் குறித்த நாளில் வருகின்றன.

''இவைகளின் இயக்கத்தில் ஒரு சிறிது தாமதம் ஏற்பட்டாலும் உலகம் துன்பப்படும். அவைகள் இறைவன் கட்டளைக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன.

''நமது இராணுவத்தை எடுத்துக் கொள்வோம். அது ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டு இயங்கி வருவதால் தான் நமது நாட்டின் பாதுகாப்பு சிறப்பாக இருக்கிறது.

''அது போல நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தன் கடமையை ஒழுங்கு முறையோடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டின் முன்னேற்றம் பெரிதும் தடைப்படும்.

''நீ உன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை. அதை நினைக்கும் பொழுது எனக்கு வருத்தமாக இருக்கிறது. நீ நல்லவனாக இருக்கலாம். படிப்பில் வல்லவனாக இருக்கலாம். கடமைகளில் நீ ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால், ஒரு சிறிதும் பயனில்லை. ஓர் ஆள் பார்க்க அழகாக இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய இதயம் பலவீனமாக இருக்குமேயானால் என்ன பயன்? அதுபோலப் புறத்தோற்றத்தில் கெட்டிக்காரனாக இருந்து, உரிய கடமைகளை ஒழுங்கு முறையுடன் செய்யவில்லை என்றால் ஒரு பயனும் இல்லை.



இலக்கியத்தில் உங்கள் ஊர் இருக்கிறதா?

கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை எழுதிய 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலின் கதாநாயகர் பஞ்சகல்யாணிப் பிள்ளையின் ஐந்தாவது மனைவியின் பெயர் வீரம்மாள். அவர் எங்கள் ஊராகிய நல்லூரைச் சேர்ந்தவர். 'நல்லூர்' குமரி மாவட்டத்தில் சுசீந்திரத்துக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் உள்ள ஒரு சின்ன கிராமம்.

இதுபோல், உங்கள் கிராமத்தின் பெயர் எந்த இலக்கியத்திலாவது இருக்கிறதா?

—ஆயில்யன், சீர்காழி.



அடிபடாத காரணம்?

மணி: ஒரு தடவை நான் இருபதடி உயரமுள்ள ஏணியிலிருந்து விழுந்திட்டேன்.

சோமு: நல்ல அடி பட்டிருக்குமே!

மணி: ஒன்றுமில்லை. அப்போது நான் ஏணியின் முதல்படியில்தானே நின்றுகொண்டிருந்தேன்?

—ஏ. வி. தேவன்.

"உன் அறையிலும் இந்த வீட்டிலும் நீ படிக்கும் பள்ளியிலும் ஒவ்வொரு பொருளும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கவேண்டும். ஒருபொருளைப் பயன்படுத்தியவுடன் அதைத் திரும்ப அந்த இடத்தில் வைத்துவிட வேண்டும். இருக்குமிடம் எதுவாக இருந்தாலும் அந்த இடம் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

"வாழ்க்கையில் நியமம் இருக்க வேண்டும். செய்ய வேண்டிய காரியங்களை செய்ய வேண்டிய காலங்களில் கட்டாயம் செய்ய வேண்டும். செய்ய வேண்டிய வேலைகளை உரிய காலங்களில் செய்யாவிட்டாலும் கேடுவரும். செய்யக் கூடாதவைகளைச் செய்தாலும் கேடு வரும். ஆகவே, எச்சரிக்கையுடன் எச்செயலையும் செய்ய வேண்டும்.

"இதற்கொரு காலப் பட்டியலைத் தயாரித்து வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நாள் இரவும், மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைத் தீர்மானித்துக் கொண்டு எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். மறுநாள் அதன்படி செயல்படலாம்.

ஒரு செயலைச் செய்யும் முன், நன்கு ஆலோசித்துத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். செய்யத் தொடங்கியபின் பின்வாங்காமல் உறுதியோடு செயல்பட வேண்டும். விடாமுயற்சி எப்பொழுதும் செயலில் இருக்க வேண்டும்.

கடமையைச் செய்யும் பொழுது சில இன்பங்களை விட வேண்டியிருக்கும். ஆனால், அந்த இன்பம் கடமையைச் செய்து முடிந்த பிறகு கிடைக்கும் இன்பத்தை விட குறைவாகவே இருக்கும்.

தம்பி, ஒழுங்குமுறை என்பது அறை, வீடு, பள்ளி எல்லா இடங்களிலுமே இருக்க வேண்டும்."

மேற்கண்டவாறு சரவணன் புத்திமதி கூறினார். தண்டபாணியின் மனத்தில் அவை ஆழமாகப் பதிந்தன. அன்று மாலையே அவன் அறை ஒழுங்கு முறையோடு இருந்தது.

திருக்குறள்:

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.



என் குழந்தைப் பருவம்

-எம். பக்தவத்சலம்

பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் 80 ஆண்டுகளுக்கு முன்பு அனபாய சோழனிடம் முதல் அமைச்சராக இருந்தார்.

முதலமைச்சராயிருந்த சேக்கிழார் பரம்பரையில் வந்தவர்தான் நம் தமிழக முதலமைச்சராயிருந்த எம். பக்தவத்சலம் அவர்கள். வக்கீலுக்குப் படித்துப் பட்டம் பெற்றிருந்த இவர், விடுதலைப் போரில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றவர்.

தமிழகத்திலுள்ள பாடல் பெற்ற பல கோயில்களைப் புதுப்பிக்கவும், கோயில்களில் திருப்பாவை – திருவெம்பாவை ஒலிக்கவும், பெரிய கோயில்களில் நூல் நிலையங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்தவர்; சித்த மருத்துவக் கலைக்குப் புத்துயிரளித்தவர். அரசு அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும், கல்லூரிகளிலும் தமிழ் முழங்கத் திட்டமிட்டுச் செயலாற்றியவர். சிறந்த நிர்வாகி எனப் பெயர் பெற்றவர்.

என்னுடைய பிறப்பு, வளர்ப்புப் பற்றிய விவரங்கள் விசேஷமானவை அல்ல. என்றாலும், அவையும் சிறுவர்களைச் சிந்திக்க வைக்குமென்றே நம்புகிறேன்.

நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே என் மாமன்மார் வீட்டில்தான். அவர்கள் இரண்டு சகோதரர்கள். சகோதரிகளும் இருந்தனர்.

என் மாமாக்களின் ஊர் பூந்தமல்லிக்கு அடுத்த நாசரத் பேட்டை. என் தந்தையாருடைய ஊர் பொன்னேரிக்கு அடுத்த மீஞ்சூர். என் தந்தையை நான் அபூர்வமாகவே பார்ப்பேன். மீஞ்சூரில் எப்போதாவது எங்கள் வீட்டில் பூசை போடுவார்கள். அப்போது வீட்டிற்குப் போவேன்.

காஞ்சிபுரத்தைப் போல மீஞ்சூரிலும் வரதராசப் பெருமாள் கோயில் ஒன்றும், ஏகாம்பரநாதர் கோயில் ஒன்றும் என் குடும்பத்தினர் கட்டி வைத்து, அதற்கு மானியமும் விட்டிருந்தார்கள். அதனால், கோயில்களில் எப்போதும் நெருக்கடிகள் ஏற்பட்டதில்லை. பூசைகள் -காலாகாலத்தில் நடந்து வந்தன. நாங்களே பரம்பரை தர்ம கர்த்தாக்களாக இருந்து வந்தோம்.





என் குழந்தைப் பருவத்தில் நாசரத்பேட்டையில் ஒரே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம்தான் இருந்தது. அதை நடத்தியவர் ஒரு தெலுங்கர். அவர் தெலுங்கும், தமிழும் கற்றுக் கொடுப்பார்.

அக்காலத்தில் எங்கள் கிராமத்தாரில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இருந்தார்கள். கையெழுத்துப் போடக் கூடத் தெரியாது! கைரேகைதான் வைப்பார்கள். அரிசிச் சோற்றை அவர்கள் பார்ப்பதே அரிது! கேப்பைதான் முக்கிய உணவு. எனக்கும் என் பெரிய தாயார் மகனுக்கும் சேர்த்து மிகவும் சிறப்பாக அட்சராப்பியாசம் நடந்தது. எழுதவும் படிக்கவும் முதல் முதலாகக் கற்றுக் கொள்வதைத்தான் அட்சராப்பியாசம் என்பார்கள். அட்சராப்பியாசம் மிகவும் கோலாகலமாக நடந்தது. அன்று இரவு ஒரு பல்லக்கில் நாங்கள் அமர்ந்து ஊர்வலமாகச் சென்றது கூட இன்னும் என் நினைவில் இருக்கிறது.

அட்சராப்பியாசம் நடந்தாலும் நாங்கள் பள்ளிக்கூடம் சென்று ஆரம்பப் பாடங்களைக் கற்கவில்லை. எங்களுக்கென்று ஓர் ஆசிரியரை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர் தினமும் வீட்டுக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார்., பள்ளிக்கூடம் போகாத போனாலும், படிப்பில் இருந்த ஆர்வத்தினால் நன்கு படித்தேன்., ஆசிரியரும் மிக நன்றாகச் சொல்லிக் கொடுத்தார். காலை முதல் மாலை வரை எங்களோடு இருந்து, கல்வி போதிப்பார்.

அவ்வாறு படித்த காலத்தில் ஒருநாள் ஆசிரியரிடம் அனுமதி கேட்டுப் புறக்கடைப் பக்கம் சென்றேன். அங்கு சாரை சாரையாக எறும்புகள் செல்வதைக் கண்டேன். சற்று தூரத்தில் வெந்நீர் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. சிறு பிள்ளை விளையாட்டு என்று சொல்வார்களே, அப்படி நான் உடனே அடுப்பின் அருகே ஓடினேன். ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்து வந்து எறும்புகளைச் சுட்டேன். அவை துடிதுடித்துச் செத்தன. பிறகு, ஆசிரியரிடம் வந்தேன். ஆசிரியருக்கு நான் எறும்புகளைக் கொன்ற விஷயம் தெரியாது.

அதுவரை என் மீது எந்தவிதமான தவறையும் எங்கள் ஆசிரியர் கண்டுபிடித்துக் கோபித்துக் கொண்டதில்லை. ஆனால், அன்று ஏதோ ஒரு தவறைக்கண்டுபிடித்து அவர் என்னைக் கோபித்துக் கொண்டார். நான் ஒன்றும் அறியாத எறும்புகளைக் கொன்றேனே, அதற்குத் தண்டனையாகத்தான் ஆசிரியர் கோபித்துக் கொள்வதாக என் மனத்தில் உடனே பட்டது. அன்று முதல் யாருக்கும் எந்தவிதமான இம்சையும் செய்வதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டேன்.

ஆரம்பப் பள்ளியில் சேராமல் வீட்டிலிருந்து படித்தே நான் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொண்டதால், என்னை ஆறும் வகுப்பில் சேர்க்க நினைத்தார்கள். ஊரிலே பள்ளிக்கூடம் இல்லை. சென்னையில் ஏதேனும் ஒரு பள்ளியில் சேர்க்கலாம் என்றால், ஹாஸ்டலில் சேர்க்க வேண்டும். ஹாஸ்டலில் இருந்து படிக்க எங்கள் வீட்டாருக்கு விருப்பமில்லை. அதனால்,

சென்னை புரசைவாக்கத்திலிருந்த எங்கள் வீட்டிலிருந்து கொண்டே நான் பள்ளிக்குச் சென்று வர ஏற்பாடு செய்தார்கள். புரசைவாக்கத்திலுள்ள லூதர் மிஷன் ஸ்கூலில் ஆறும் வகுப்பில் சேர்த்தார்கள். என் பெரிய தாயார் மகனும் அங்கு சேர்ந்தான்.


அது மிஷன் ஸ்கூல். அப்போது, அங்கிருந்த சிலர், அம்மன் கோயிலில் நடைபெறும் விழாக்களைக் கேலி செய்து பேசுவார்கள். எங்களுக்கு அம்மனிடம் மிகுந்த பக்தி இருந்த போதிலும், அவர்களுக்கு என்ன பதில்சொல்வது என்று தெரியவில்லை.

என் தம்பி (என் பெரியம்மா மகன்) ஏழாவது வகுப்பிலும் நான் எட்டாவதிலும் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு நாள் என் தம்பிக்கு வகுப்பறையிலே காய்ச்சல் ஏற்பட்டது. உடனே வீட்டிற்கு அழைத்துச் சென்றோம். அவன் காய்ச்சல் குணமாகவில்லை. இறந்து போய் விட்டான்!


அவன் இறந்த அதிர்ச்சியில் எங்கள் வீட்டில் யாருக்குமே நிம்மதியில்லை. அதனால், எந்தப் பள்ளியிலும் சேர்ந்து படிக்காமல் வீட்டிலேயே இரண்டரை ஆண்டுகள் இருந்தேன். என் மாமா கோயில் வேலை, கிராம வேலை ஆகியவற்றை மிகுந்த சிரத்தை எடுத்துப் பார்ப்பார். அவருடன் கூடவே இருந்து, அவருக்கு ஏற்படும் பிரச்னைகளையெல்லாம் தெரிந்து கொண்டேன்.

இரண்டரை ஆண்டுகள் சென்ற பிறகு, என் மாமன்மார் எப்படியாவது என்னைத் திரும்பவும் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். என்னை மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் ஒன்பதாவது வகுப்பில் சேர்த்தார்கள். படித்ததை மறக்காமல் இருந்ததாலும், கேட்ட கேள்விகளுக்குச் சரியான முறையில் பதில் சொன்னதாலும், எட்டாவது வகுப்பில் படித்துத் தேறாத என்னை ஒன்பதாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார்கள். 'அதுமுதல் உயர்நிலைப் பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, எந்தப் பரீட்சையிலும் தவறியதில்லை. நான் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து பிரசிடென்ஸி கல்லூரியில் சேர மனுப் போட்டேன். அந்தக் காலத்திலும் சிபாரிசு வேண்டியிருந்தது. ஆனால், எனக்கு எந்தவிதமான சிபாரிசும் இல்லை. என் தகுதியை அடிப்படையாக வைத்தே என்னைச் சேர்த்துக் கொண்டார்கள்.

பிரசிடென்ஸி கல்லூரியில் சேர்ந்த பிறகு, கிராமத்தில் பெரியம்மை வந்து சிலரது உயிர்களைக் கொள்ளை கொண்டு விட்டது. அதில் என் தாயாரும், சகோதரியும் மறைந்து விட்டார்கள். ஆனால், இந்த முறை என் படிப்பு பாதிக்கப்படவில்லை. சென்னையிலிருந்து கொண்டே பிரசிடென்ஸி கல்லூரியில் தொடர்ந்து படித்தேன். பி. ஏ. பட்டம் பெற்று, அதற்கு மேலும் சட்டப் படிப்பு படித்து பி. எல். பட்டம் பெற்றேன். பரீட்சைகளிலெல்லாம் நான் வெற்றி பெற்றேன் என்றாலும், தேச விடுதலைப் போரில் என் கவனம் திரும்பியது. அட்வகேட் ஆனதும் அத்தொழிலில் நான் அதிகமாக ஈடுபடவில்லை. இதற்கு முக்கிய காரணம் என் சின்ன மாமா முத்துரங்க முதலியார்தான். அவர் தீவிரமாகத்







வித்தியாசம்

''உனக்கும் உங்க அண்ணனுக்கும் என்ன வித்தியாசம்...!''

''நான் ஆப் ட்ராயர் போட்டிருக்கேன். என் அண்ணன் முழு ட்ராயர் போட்டிருக்கான்...!''

—பவித்ரா.

தேசத்தொண்டில்ஈடுபட்டார். சிறைக்குச் சென்றார். தமிழ்நாடு காங்கிரசின் தலைவராகவும் இருந்தார். அவரைப் பின்பற்றி நானும் தேசத் தொண்டில் ஈடுபட்டேன்.

நான் சிறு குழந்தையாக இருந்த போது, ஒருவர் சாப்பிடுவதை வேறொரு சாதியினர் பார்க்கக்கூடாது என்பார்கள். ஆனால், ஏன் பார்க்கக் கூடாது என்று நான் நினைப்பேன். 65 ஆண்டுகளுக்கு முன்பு, காந்திஜியின் திட்டமான தீண்டாமை விலக்கை நடத்தி வைக்க வேண்டுமென விரும்பினேன். ஆனால், செல்வாக்குப் படைத்த பலர் என்னிடத்தில் அபிமானம் உள்ளவர்களென்றாலும், தீண்டாமை விலக்குக்கு ஒப்புக்கொள்ளவில்லை.

மாணவப் பருவத்திலே எனக்கு சுதந்திரப் போரில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. கடற்கரையில் திலகர் கட்டத்தில் பெரிய கூட்டங்கள் நடக்கும். கோகலே மண்டபத்திலும் டாக்டர் பெசண்ட் அம்மையார், அருண்டேல் போன்ற தலைவர்கள் பேசுவார்கள். அவர்களது பேச்சைக் கேட்க நானும் சில மாணவர்களும் மாலை 4 மணிக்கே சென்று முதல் வரிசையில் உட்கார்ந்து கொள்வோம்.

அக்காலத்தில் மாணவர் இயக்கத்தை அடக்க ஆட்சியாளர்கள் ஓர் உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவுப்படி மாணவர்கள் கூட்டங்களுக்குச் செல்லக் கூடாது; தேசத் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கக் கூடாது. ஆயினும், அதை மீறி மாணவர்கள் கூட்டங்களுக்குச் செல்வார்கள்; பேச்சுக்களைக் கேட்பார்கள். அந்த உத்தரவு ஏட்டளவில்தான் இருந்தது.

பாரதியின் பேச்சையும் ஒரு முறை கேட்டிருக்கிறேன். பாரதியார் பேச்சுக்கு இடை இடையே உணர்ச்சி ததும்பப் பாடினார். பாரதியாரை நேரில் பார்த்ததையும், அவர் பேச்சையும் பாட்டையும் கேட்டதையும் பெருமையாக நினைக்கிறேன்.

அடுத்த இதழில்...




வள்ளல் நா.மகாலிங்கம் எழுதும்

என் குழந்தைப் பருவம்

குழந்தை இலக்கியப் போட்டியில்
ஏ.வி.எம். பதக்கப் பரிசு பெற்றவர்கள்

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில், சிறுகதைக்குரிய முதற் பரிசான தங்கப் பதக்கத்தை, நல்லாசிரியர் திரு நெல்லை ஆ. கணபதியும், இரண்டாம் பரிசான வெள்ளிப் பதக்கத்தை திருமதி இந்திரா அனந்த கிருஷ்ணனும், நாடகத்திற்குரிய முதற் பரிசான தங்கப் பதக்கத்தை திருமதி எஸ். விஜயலட்சுமியும், இரண்டாவது பரிசான வெள்ளிப் பதக்கத்தை திரு தங்கசிவராசனும் பெறுகிறார்கள்.



சிறுகதை
முதற் பரிசு



நெல்லை ஆ. கணபதி
சைதை

நாடகம்
முதற் பரிசு



எஸ். விஜயலெட்சுமி,
பெங்களூர்



இரண்டாம் பரிசு
இந்திரா அனந்தகிருஷ்ணன்,
புது டில்லி,



இரண்டாம் பரிசு
தங்க சிவராசன்,
பாண்டிச்சேரி

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* ஆட்டு மயிரிலிருந்து கம்பளி செய்கிறார்கள். இதேபோல் வேறு மிருகங்களின் மயிர் பயன்படுமா?

—தே. சூரியமூர்த்தி, திருவாரூர்.

ஒட்டகம், லாமா, கவரிமான் போன்ற மிருகங்களின் உரோமமும்பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும் செம்மறி ஆட்டு உரோமத்தில்தான் பெரும்பாலும் கம்பளி ஆடைகள் நெய்யப்படுகின்றன.


* நம் தமிழ்நாட்டு விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவின் முழுப் பெயர் என்ன? அவர் எந்த ஊரில் பிறந்தார்?

—வெ. குணசேகரன், மண்டபம்.

முழுப்பெயர் கோபாலதுரைசாமிநாயுடு. பிறந்த ஊர் கோவை மாவட்டத்திலுள்ள கலங்கல் என்னும் சிற்றூர்.

* மோகனதாஸ் காந்தியும் ராஜீவ்காந்தியும் உறவுக்காரரா?

—சி. கோமதி, குமாரபாளையம்.





இருவர்பெயரின் பின்னாலும்காந்தி என்று இருப்பதால்தானே இந்த சந்தேகம். ஆனால், இருவரும் உறவினர் அல்லர், இந்தியர் என்ற உறவைத் தவிர. ராஜீவின் அப்பா பெயர் பெரோஸ் காந்தி. கணவர் பெயரின் பின்பகுதியிலுள்ள 'காந்தி'யைத் தம் பெயருடன் சேர்த்துக் கொண்டார் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி. இந்நாள் பிரதமரும் தந்தையின் பெயரிலுள்ள பின்பகுதியைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்!

* நம் உடம்பில் முக்கியமான உறுப்பு எது?

—வே. கருப்பையா, திண்டிவனம்.

'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்' என்பார்கள். சிரசு (தலை) முக்கியம்தான். அதைவிட முக்கியமான உறுப்பு தலைக்குள்ளே இருக்கும் மூளைதான்!

நாம் சிந்தனை செய்வதற்கும், படித்தவற்றை நினைவில் வைத்துக் கொள்வதற்கும் உதவுவதுமூளைதான். அன்பு, அச்சம்போன்ற உணர்ச்சிகள் தோன்றும் இடமும் மூளைதான். மூளை நன்றாக வேலை செய்யாத போனால், நாம் பார்ப்பது, கேட்பது, வாசனை அறிவது, சுவைப்பது, உணர்வது எதிலுமே அர்த்தமிருக்காது.

* 'சீனக் கடல்' என்று ஒரு கடல் இருக்கிறதாமே, எங்கே இருக்கிறது?

—ப. திருமுகம், தங்கச்சிமடம்.

பசிபிக் சமுத்திரத்தின் ஒரு பகுதிதான் சீனக் கடல். ஜப்பானுக்கும் மலேசியாத் தீபகற்பத்தின் தென் முனைக்கும் இடையிலுள்ள பகுதியைத்தான் அப்படி அழைக்கிறார்கள். சீனாவும், மற்றும் சில நாடுகளும் இதைச் சூழ்ந்திருப்பதால், 'சீனக் கடல்' என்கிறார்கள்.

* தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் குருவாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிறந்த ஊர் எது?

—வே. சண்முகம், கள்ளிக்கோட்டை.

திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்திலுள்ள எண்ணெய்க் கிராமம்.

* லிப்ட் (Lift) எப்போது கண்டுபிடிக்கப் பட்டது?

—டி. மனோகர், திருநெல்வேலி—1.



மின்சாரத்தால் இயங்கும் லிஃப்டை 1880 ல் முதல் முதலாக ஜெர்மனியில்தான் அமைத்தார்கள். ஆயினும், 2000 ஆண்டு களுக்கு முன்பே ரோமானியர்கள் பயன் படுத்தியதாகக் கூறுகிறார்கள். 17 ஆம் நூற் றாண்டில் வேலாயர் (Velayer) என்ற பிரெஞ்சுக்காரர் 'பறக்கும் நாற்காலி' என்ற ஒரு லிப்டை அமைத்து, அதை அடிமைகளையும் மிருகங்களையும் கொண்டு இயக்கி வந்தாராம்.

* மோட்டார்ப் படகு பெட்ரோலில் மட்டும் தான் ஓடுமா...? இல்லை...?

—மு. ராஜாமணி, சிவகங்கை.



பெட்ரோல், டீசல், மின்சாரம் இந்த மூன்றில் எதில் வேண்டுமானாலும் ஓடும்.

* சுருக்கு எழுத்து முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

— வி. கார்த்திகேயன், சென்னை—4.

சர் ஐசக் பிட்மன் (Sir Isaac Pitman) என்ற ஆங்கிலேயர்தான். ஆனால், அவருக்கு முன்னரே மார்க்கஸ் டல்லியஸ் டைரோ என்ற ரோமானியர் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தார். ஆனால், அந்த முறையில் குறியீடுகள் இல்லை. சொற்களைக் குறுக்கி எழுதி வந்தார்கள். அந்த முறையை மாற்றி, டிமத்தி பிரைட் என்ற ஆங்கிலேயர் குறியீடுகளைக் கொண்டு எழுதும் முறையைக் கண்டுபிடித்தார். ஆனாலும், ஐசக் பிட்மன் சுருக்கெழுத்து நூலை வெளியிட்ட பிறகுதான், சுருக்கெழுத்து முறை உலகம் முழுவதும் பரவியது.

* பறந்து திரியும் ஈசல் பூச்சியின் முகமும் கறையான் முகமும் ஒரே மாதிரி இருக்கின்றன. இரண்டும் ஒரே இனமா?

—தா. பூதலிங்கம், நாகர்கோவில்.

கறையான்தான் இறக்கை முளைத்ததும் ஈசல் பூச்சி ஆகிறது. அதனால்தான், இரண்டின் முகங்களும் ஒரே மாதிரி இருக்கின்றன.

* கவிஞர் கண்ணதாசன் எழுதிய முதல் பாட்டு எது என்று கூற முடியுமா?

—த. ருக்மிணி, கந்தர்வகோட்டை.



ஓ, முடியுமே! 1944 ல் 'அவள்' என்ற தலைப்பில் எழுதிய பாட்டுத்தான் அது! அந்தப் பாட்டு பிறந்தது எங்கே தெரியுமா? 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் பிறந்த ஊரான இராயவரத்திற்கும், இராமச்சந்திரபுரம் என்ற ஊருக்கும் இடையிலே உள்ள ஓர் ஒற்றைப் பனை மரத்தின் அடியிலேதான்!

* கம்பர் பாடிய இராமாயணத்தில் உள்ள பாடல்கள் எத்தனை?

— அ. விவேக், காரைக்குடி.

மொத்தம் 12,000 பாடல்களால் ஆனது கம்ப ராமாயணம்.

* உலகிலேயே பெரிய பரிசு நோபல் பரிசு என்கிறார்களே, அதன் மதிப்பு என்ன?

—கோ. வில்வராஜ், திருத்தணி.

18 லட்சம் ஸ்விடிஷ் குரோனர் — அதாவது 2.25 லட்சம் அமெரிக்க டாலர். ஓர் அமெரிக்க டாலர் என்பது 12 இந்திய ரூபாய்க்குச் சமம். அப்படியென்றால், நோபல் பரிசுத் தொகை 2.25 X 12 = 27 லட்ச ரூபாய்!

* மரவட்டைக்கு மொத்தம் எத்தனை கால்கள்?

—மா. வெங்கடேச மூர்த்தி, குரோம்பேட்டை.

மரவட்டையை சாதாரணமாக ஆயிரங்காலி அதாவது ஆயிரம் கால்களை உடையது என்பார்கள். ஆனால், அதன் உடம்பிலுள்ள ஒவ்வொரு வளையத்திலும் இரண்டு ஜோடிக் கால்களே இருக்கும்.

* டில்லி எத்தனை ஆண்டுகளாக நம் தேசத் தலைநகராக இருக்கிறது?

— இரா. நாராயணசாமி, சிங்காநல்லூர்.

74 ஆண்டுகளாக 1911 ம் ஆண்டில் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது.

* ஒயில் கும்மி என்று ஒரு கும்மி இருக்கிறதே, அதைப் பற்றி...?

— எஸ். ராமநாதன், மதுரை—2.

ஒயிலாட்டத்தைத்தான் ஒயில் கும்மி என்கிறார்கள். சாதாரணமாகக் கும்மி ஆட்டத்தில் பெண்கள்தான் ஆடுவார்கள். ஆனால், ஒயில்

கும்மியில் ஆண்களே ஆடுவார்கள். அவர்கள் தலையில் தலைப்பாகை இருக்கும்; கையில் கைக்குட்டை இருக்கும். இரு வரிசையாக நின்று கொண்டு ஆடுவார்கள். ஒரு வரிசையில் 6 பேர் இருந்தால், எதிர் வரிசையிலும் 6 பேர் இருப்பார்கள். பொங்கல் சமயத்தில் இந்தக் கும்மி மிகச் சிறப்பாக நடைபெறும்.

*** சென்ற கோடை விடுமுறையில் கல்கத்தா சென்றிருந்தேன். அங்கு வங்காளிகள் வீட்டிலே சமையலுக்கு கடுகு எண்ணெயை உபயோகப்படுத்துவதைக் கண்டேன். வேறு யாரேனும் கடுகு எண்ணெயை உபயோகிக்கிறார்களா?**

—எம். கதிர்வேலு, சென்னை—8.



வங்காளத்தில் மட்டுமல்ல; அஸ்ஸாமிலும் சமையலுக்குக் கடுகு எண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள்.

*** ஒரு பத்திரிகையில் 'பொன் மொழிகள் என்ற தலைப்பில், 'பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ, அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே!' என்று போட்டு அதன் கீழே 'கன்பூஷியஸ்' என்று அச்சிட்டிருந்தது. கன்பூஷியஸ் என்பவர் யார்?**


—என். தேவாம்சம், பாண்டி.

இவர் சீன தேசத்துப் பெரியார். புகழ் பெற்ற தத்துவஞானி. இவரது பழமொழிகளை அன்றாடம் சீனமக்கள் பயன்படுத்துகிறார்கள். சீனாவில் இவருக்குப் பல இடங்களில் நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. இவருடைய சீனப்பெயர் குங்பூ—ஷே. லத்தீன் மொழியில் அதையே கன்பூஷியஸ் என்கிறார்கள்.

*** 'மகாத்மா காந்தியைப் போல, ரவீந்திர நாத தாகூரும் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் தான் என்று ஒரு பெரியவர் ஒரு கூட்டத்தில் பேசினார். தாகூரும் பாரிஸ்டர் பட்டம் பெற்றவரா?**

—ஆர். கோபு, பாண்டிச்சேரி.

இல்லை. பாரிஸ்டர் பட்டம் பெற வேண்டுமென்று நினைத்துத்தான், தாகூருடைய தந்தை அவரை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். ஆனால், தாகூர் படிப்பு முடியுமுன்பே திரும்பி



வந்துவிட்டார். அவருடைய கவனமெல்லாம் கதை எழுதுவதிலும் கவிதை எழுதுவதிலுமே சென்றதால், படிப்பைத் தொடரவில்லை.

*** இலங்கைத் தீவின் அகலம் என்ன? நீளம் என்ன?**

—வி. சுப்பு, வேதாரண்யம்.

இலங்கைத் தீவின் நீளம் 270 மைல். அகலம் 140 மைல்.

*** கங்கை நதிக் கரையில் உள்ள புண்ணிய ஸ்தலங்கள் என்ன, என்ன?**

—பி. சோமநாதன், பழவேற்காடு.

காசி, ஹரித்துவாரம், அலகாபாத் மூன்றும் மிக முக்கியமான புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலங்கள்.


*** தமிழக அரசு இப்போது எத்தனை குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குகிறது?**

—ப. நவநீதம், பெருங்களத்தூர்.

85 லட்சம் குழந்தைகளுக்கு.

*** முந்திரி நம் நாட்டுக்கே சொந்தமா? அல்லது வேறு நாட்டிலிருந்து வந்ததா?**


—பி. பானுமதி, சென்னை—33.





அது அமெரிக்காவில்தான் முதன் முதலில் விளைந்தது. 400 ஆண்டுகளுக்கு முன்பு அதை பிரேசிலிலிருந்து போர்ச்சுகேசியர் இந்தியாவுக்குக் கொண்டு வந்தார்கள்.


பீமன்-அனுமன் பலப்பரீட்சை


கதை: ஆனந்தி படம்: வினு










அப்போது பீமன் அங்கு வர...
அற்புதமான வாசனை! தெய்வீக மணம்!
இந்தப் பக்கமிருந்து தான் வருகிறது... போய்ப் பார்ப்போம்.
சற்று தூரம் செல்ல ஒரு பெரிய சிவந்த மலர் காற்றில் பறந்து வந்து திரௌபதி எதிரே விழுந்தது!
ஆகா! என்ன அழகு!
மலரைக் கண்டு திரௌபதி முகம் மலர்ந்தது.
எத்தனை மணம்!
என்ன மலர் இது? பெயர் என்னவாயிருக்கும்?
எதுவானாலும் உன் முகத்தை வெகு நாட்களுக்குப் பிறகு மலரச் செய்த மலர் இது!



தேவலோகத்தில் பூப்ப தாகத்தான் இருக்கட்டுமே கொண்டு வரமாட்டேனா என்ன? உன் முகத்தில் மகிழ்ச்சி காண்பதென்றால் அது ஒன்றும் பெரிய காரியமில்லை.
பீமன் விடை பெற்றான். பாஞ்சாலி ஆசிரமம் திரும்பினாள்... தர்மர் ரிஷிகளுடன் பேசிக் கொண்டிருந்தார்...
ரிஷிகளுடனிருந் தால் போதும் இவருக்கு... வேத வேதாந்த விசாரணையி லேயே சந்தோஷம் அடைந்து விடுவார்...
புதிய மணத்தால் கவரப்பட்டு தருமர் எழுந்து வந்தார்...
பாஞ்சாலி! இந்த அபூர்வ மலர் உனக்கு எப்படி கிடைத்தது? பீமன் எங்கே?
காற்றில் பறந்து வந்து விழுந்தது. இன்னும் நிறையப் பறித்து வரப் போயிருக்கிறார் உங்கள் தம்பி!
பீமன் மாவீரன்தான் என்றாலும் தனியாகப் போயிருக்கிறானே... கவலையாய் இருக்கிறது!
திரௌபதி சிரித்தாள்...
பாசம் இப்படி உங்களைக் கூட ஆட்டி வைக்கிறதே!




மலரின் மணம் வந்த திசையில் சென்று கொண்டேயிருந்தான் பீமன்...
வெகுதூரம் வந்து விட்டேன். அந்த மலர் வனத்தைக் காணவில்லை. மாலை நேரமாகிவிட்டது...
சங்கை எடுத்து ஊதினான் பீமன். காட்டு மிருகங்கள் பயந்து ஓடின.
தன் பயணத்தைத் தொடர்ந்தான் பீமன்...
இரண்டு மலைகளைக் கடந்து விட்டேன்... இன்னும் அகப் படவில்லையே... இதோ இந்த மலையிலும் ஏறிப் பார்த்து விடலாம்...
மலை உச்சியில் பீமனை எதிர் பார்த்துக் காத்திருந்தார் ஆஞ்சநேயர்...
அட குரங்கு ஒன்று குறுக்கே படுத்துத் தூங்குகிறதே! இதை அலற அடிக்கிறேன்!
சங்கெடுத்துப் பலமாய் ஊதினான் பீமன்...
பூம், பூம், பூம், பூம்!
ஆஞ்சநேயர் கண் விழித்தார்; ஆனால் அசையவில்லை...
ஏண்டாப்பா, அமைதியான இந்த இடத்தில் ஏன் இப்படி ரகளை பண்ணுகிறாய்?
என் சங்கை ஊதுவது என் இஷ்டம், நீ யார் கேட்பதற்கு?
பூம் பூம்




பீமன் மீண்டும் சங்கு ஊதி...
பூம் பூம்! பூம் பூம்!
இங்குள்ள முனிவர்கள் மிருகங்களிடம் கருணை காட்டுவார்கள். நீ பயமுறுத்துகிறாயே... இந்த இடத்துக்கு நீ புதுசோ? யாரப்பா நீ?
ஏ! வானரமே! நான் பீமன்! வழி விடு!
அப்படியா! சரி. உன்னிடம் கருணையால் சொல்கிறேன்... இதற்குமேல் நீ போக முடியாது. பழங்கள் தருகிறேன். இளைப்பாறித் திரும்பு!
பீமனுக்குத் தன்னையறியாமல் அந்தக் குரங்கினிடம் ஒரு மரியாதை ஏற்பட்டது. இருப்பினும்...
மனிதனைப்போல் பேசும் குரங்கே என் வீரத்தையும் பலத்தையும் அறியாமல் பேசுகிறாய்!
நான் வாயுவின் பிள்ளை! இதை விடப்பயங்கரமான காடுகளில் அலைந்திருக்கிறேன்...


பீமன் தங்கள் கதையையும் அர்ச்சுனன் தவம் செய்யப் போயிருப்பது குறித்தும் அனுமானிடம் கூறினான். பிறகு...
சரி சரி வழியை விடு!
அவசியம் போய்த்தான் ஆக வேண்டுமா?
கண்டிப்பாக. ஒரு குரங்கு குறுக்கிடுவதால் பயந்து திரும்பி விடுவேனென்று நினைத்தாய்?
அப்படியானும் என்னைத் தாண்டிப் போயேன்!
கிழக்குரங்கே! வயதானவர்களைத் தாண்டக் கூடாது. அதனால் தான் தயங்குகிறேன். உன்னைத் தாண்டுவது ஒரு சிரமமா? என் அண்ணன் அனுமான் சமுத்திரத்தையே தாண்டியவராயிற்றே!
அதென்ன கதை?
அனுமனின் வீர தீரப் பிரதாபங்களை மிகுந்த உற்சாகத்தோடு வர்ணித்தான் பீமன். புன்னகையுடன் கேட்டுக் கொண்டார் மாருதி.
பீமன் அனுமானுக்கு ராமாயணம் முழுவதையும் கூறினான். ஒன்றுமே தெரியாதவர் போல் கேட்டுக் கொண்டார் அனுமான்!


ராமகாதையை பீமன் கூறி முடித்ததும்...
அண்ணன் பெருமை முடிந்ததா? இன்னும் பாக்கியிருக்கா? அனுமான் பிறக்கும் போதே யானை பலத் துடன் பிறந்தான் என்பாய் போலிருக்கே!
அப்படியா!
இதென்ன வானரமாய் இருந்துகொண்டு ஆஞ்சநேயரைப் பற்றி ஒன்றுமே அறியாதவனாய் இருக்கிறாயே? அவர் வாயு புத்திரனாக்கும்!
பீமன் அனுமானிடமே அனுமனின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைக் கூறினான்!
ஹும் அதை விடவும் பலசாலி! அவர் சின்னக் குழந்தையாய் இருந்தபோதே ஆகாயத்தில் தாவினார்!
அஞ்சனாதேவிக்குப் பிறந்தவர் ஆஞ்சநேயர். ஒருநாள் குழந்தையைக் குகையில் விட்டு விட்டு அம்மா வெளியே போயிருந்தாள்...
கண்விழித்த குழந்தைக்கு ராப்பசி. செக்கச் செவேல் என்று சூரியோதயமாக...
அதோ பெரிய பழம்!
பழத்தைப் பறிக்க ஆகாயத்தில் தாவினார் ஆஞ்சநேயர்... அன்று ராகுவும் சூரியனை விழுங்க வந்து கொண்டிருந்தான். (சூரிய கிரகணம்)


குழந்தை ஆஞ்சநேயர் அதட்டவும் ராகு பயந்து ஓடி விட்டான்!
போட்டிக்கு வரியா? ஹூம்! ஜாக்கிரதை!
இந்திர சபைக்கு ராகு ஓடி வந்தான்...
மோசம் போனேன். சூரியனை விழுங்க ஒரு சிறு பிள்ளை பாய்ந்து செல்கிறான்... என் கடமையைச் செய்ய முடியவில்லை... விரட்டி விட்டான்!
இந்திரன் அந்தப் பிள்ளையைத் தடுக்க ஐராவதத்தை அனுப்பினான்...
ஆ! இதோ ஒரு வெள்ளை யானைக் குண்டுப் பழம்! இதை முதலில் பறித்து விட்டுப் பிறகு அந்தச் சிவப்புப் பழத்தைப் பறிக்கிறேன்!
ஐராவதம் பயந்து ஓடிற்று. சூரியன் குழந்தைக்காகத் தன் உஷ்ணத்தைத் தணித்துக் கொண்டார். இந்திரன் கோபமுற்று...
இந்தக் குழந்தை இயற்கை நியதிகளையே மாற்றி விடும்! வஜ்ராயுதத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான்!



வஜ்ராயுதம் தாக்கக் குழந்தை ஆஞ்சநேயன் உதய பர்வதம் மீது விழுந்தான்.
தன் குழந்தை அசையாது கிடக்கக் கண்டு வாயு துக்க மடைந்து அசைவற்று நின்றான். வாயு உலவாததால் சகல உயிர்களும் தவித்தன.
பிரம்மா வாயுவிடம் ஓடி வந்தார்.
வருந்தாதே வாயு! உன் புதல்வன் சிரஞ்சீவி. மயக்கம் தெளிவான். இவனை யாராலும் வெல்ல முடியாது!
தேவர்கள் அனுமனுக்கு வரங்கள் தந்தனர். வாயு மீண்டும் உலகம் வாழ உலவத் தொடங்கினார்.
அனுமனே! விசுவரூபம் எடுக்கும் ஆற்றலை உனக்களிக்கிறேன்!
அனுமன் குறும்புகள் பல செய்து காட்டில் வளர்ந்தான். ஒரு சமயம் சூரியனை நோக்கித் தவமிருந்தான்.
வேத சாஸ்திரங்கள் பயில, தாங்களே எனக்குக் குருவாக இருக்க வேண்டும்.



சூரியன் பிரத்யட்சமாகி...
நான் ஒரு கணமும் நிற்காமல் போய்க் கொண்டிருப்பவன். எப்படி பாடம் சொல்ல முடியும்?
நான் தங்கள் எதிரில் தங்கள் வேகத்துக்கு ஈடு கொடுத்து, பின்னோக்கி நடந்தவாறே தங்கள் உபதேசங்களைக் கேட்டறிவேன்!
பீமன் கதையை முடித்தான்
என் அண்ணா சூரிய பகவானிடம் நேரில் பாடம் கேட்டவர். அவர் வலிமையை இப்போதாவது புரிந்து கொண்டாயா? அதில் பாதி திறமையாவது எனக்கு இராதா?
இருக்கும்! இருக்கும்!
ஒப்புக் கொண்டாயா? சரி, இப்போதாவது மரியாதையாக வழி விட்டு நகர்ந்து செல்!
அப்பனே! எனக்கு வயசாகி விட்டதல்லவா? தன்னால், என்னுடைய வாலை அப்படி நகர்த்தி வைத்து விட்டு நீ போய் வா.
பீமன் அலட்சியமாக இடது கையால் வாலை நகர்த்த முயன்றான்...
வாலை நகர்த்தக்கூட உனக்குச் சோம்பலா, சரி நானே... அட இதென்ன அசைக்க முடியவில்லையே!




பீமன் இரு கரங்களாலும் வாலை நகர்த்த முயன்றான். வியர்வை கொட்டியது. மூச்சு வாங்கியது. முடியவில்லை...
இதென்ன அதிசயம்!
இது சாமானியக் குரங்கு அல்ல என்று உணர்ந்தான் பீமன். கர்வம் அடங்கினான்.
சுவாமி! நான் ஜம்பமாகப் பேசியதை மன்னிக்க வேணும்... தாங்கள் யார்?
நான் உன் அண்ணன். என்னை அனுமன் என்பார்கள்...
அண்ணா! தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். இனி எங்களுக்கு வெற்றி நிச்சயம்!
அர்ஜுனன் கொடியில் இருந்து கொண்டு நான் எனது ஹூங்காரத்திலேயே எதிரிகள் கதிகலங்கும்படி செய்வேன்!
அனுமனை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்தான் பீமன். மேலே சென்றான்.
அதோ! திரௌபதி கேட்ட பூக்கள்! அந்த நதியில்... ஆயிரக் கணக்கில்!
மலர்களைப் பறிக்கப் போன பீமனை ராக்ஷஸர்கள் தடுத்தனர்.
மானிடனே! இது குபேரன் ஆளும் பிரதேசம். உனக்கு மலர்கள் வேண்டுமானால் அவரிடம் அனுமதி கேள்!


இந்தப் பூக்கள் இயற்கையாக ஆற்றில் தாமாகப் பூத்தவை. நதி அனைவருக்கும் சொந்தம். மேலும் நான் அரச குலத்தவன் யாசிக்க மாட்டேன்.
அடட மானிடா! அத்தனை திமிரா உனக்கு!
பீமனை ராட்சதர்கள் ஆயுதங்களால் தாக்கினார்கள்.
பீமன் இரண்டு மூன்று பேரைக் கையால் அறைந்தே தண்ணீரில் மூழ்கடித்தான்.
அக்கரை சேர்ந்து ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி அதனைத் தன் ஆயுதமாகக் கொண்டு தாக்கினான்...
ராக்ஷஸர்கள் சிதறி ஓடினார்கள்.
ஹ ஹ ஹா!


ராக்ஷஸக் காவலர்கள் குபேரனிடம் முறையிட்டார்கள்.
அரசே! ஆபத்து! ஒரு மானுடன் அட்டகாசம் பண்ணுகிறான்! காவலர்களைக் கொல்லுகிறான்! ஆற்றைக் கலக்கி மலர்களைப் பறிக்கிறான்!
குபேரன் சிரித்தான்.
வெகு அழகு! ஒரு மனிதனுக்குப் பயந்து ஓடி வந்தீர்களா?... ஹாஹா... அந்த மானுடன் பீமனாகத்தான் இருக்க வேண்டும். வேண்டிய அளவு பூக்களைப் பறித்துக் கொள்ளச் சொன்னேன் என்று போய்க் கூறுங்கள்!
பீமன் ஒரு தென்னை மட்டையை வெட்டி கூடை பின்னிக் கொண்டான். ஏராள மலர்களைப் பறித்துக் கூடையை நிரப்பினான்...
இதற்கிடையில் பதரிகாசிரமத்தில் பீமன் திரும்பி வரத் தாமதமானதால் தருமர், திரௌபதி முதலானோர் கவலை அடைய, நகுலன் யோசனை...
அண்ணா! கடோத்கசனை அழைப்போம். அவன் உதவியுடன்தான் பீமனைத் தேட முடியும்.
தருமர் கடோத்கசனை நினைத்த மாத்திரத்தில் அந்த மாயாவி எதிரே நின்றான்.
தந்தையே வணக்கம்!
உன் தந்தையைக் காணோம். தேட வேண்டும்...


பீமனைக் காதலித்து மணந்தவள் இடும்பி என்ற அரக்கி. கடோத்கசன் பீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தவன். இப்பொது தன் தாய் திரௌபதியைத் தூக்கிக் கொண்டான். நினைத்த மாத்திரத்தில் மாயமாய்த் தோன்றிய அவனது வீரர்கள் மற்றவர்களைத் தூக்கிக் கொண்டனர்.
வெகு வேகமாக வெகு தூரம் அலைந்து திரிந்து பீமனைத் தேடினார்கள்...
ஒரு நகரம் ஒளிமயமாய்த் தூரத்தில் தெரிய...
அதோ! அது குபேரனின் அழகாபுரி!
அழகாபுரியை நெருங்கவும் சகாதேவன்...
அண்ணா! அதோ ஆற்றங்கரையில் பாருங்கள்!
ஆம்! பீமன் தான்!
பீமனேதான்!
அவர்களைக் கண்டு பீமன் அதிசயித்தான்.
அட! நீங்கள் எப்படி இங்கே...
எல்லாம் கடோத்கசன் உதவியால் தான்!


பீமன் திரௌபதியிடம் திரும்பி...
பூக்கள் போதுமா?
இந்த அபூர்வ மலர்களை யெல்லாம் கண்ணனின் திருவடிகளுக்கே சமர்ப்பிக்கிறேன்...
திரௌபதி, பீமனிட மிருந்த மலர்களெல்லாம் மாய மாய் மறைந்தன. அப்போது குபேரன் செய்தி அறிந்து வந்தான்...
வரவேணும் வரவேணும்!
நீங்கள் எல்லோரும் சில நாட்கள் என் விருந்தினராகத் தங்கிச் செல்ல வேண்டும்.
நன்றி அப்படியே செய்கிறோம்.
பாண்டவர்கள் சில தினங்கள் குபேரனின் அளகாபுரியில் சந்தோஷமாக இருந்தார்கள்.
ஒரு நாள் தருமர்...
குபேரரே! நாங்கள் விடை பெற வேண்டும். அளகாபுரிக்கு அப்பால் சென்று பார்க்க எண்ணுகிறோம்...
அப்போது அசரீரி கேட்டது...
வேண்டாம்! திரும்பி பதரிகா-சிரமத்துக்கே செல்லுங்கள்! சீக்கிரத்தில் அர்ஜுனனைக் காண்பீர்கள்!


தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறச் சென்ற அர்ச்சுனன் திரும்பும் நாள் நெருங்கி விட்டதை உணர்ந்து அனைவரும் குபேரனிடம் விடை பெற்றனர்.
சென்று வாருங்கள். இங்கு சில நாள் உங்களை உபசரிக்க முடிந்ததில் பெருமை அடைகிறேன்!
தருமன், பீமன், நகுல சகதேவர்கள், திரௌபதி ஆகியோரை பதரிகாசிரமத்தில் சேர்ப்பித்து விட்டு கடோத்கசன்...
தந்தையே! போய் வருகிறேன். வேண்டும் போது நினையுங்கள், தோன்றுவேன்.
துவாரகையில் கண்ணன் கழுத்தில் ஸௌகந்திக மலர் மாலையொன்று திடீரென்று தோன்றியதும் அருகிலிருந்த ருக்மிணியும் ஸத்யபாமாவும் அதிசயித்து மகிழ்ந்தனர்.

யூகோஸ்லாவியக் கதை

எலுமிச்சையாரும் அவருடைய படை வீரர்களும்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

ஒரு செழிப்பான தோட்டம். பச்சைப் பசேலென்ற பயிர்கள். கண்ணுக்கு விருந்தான காய்கள், கனிகள். அந்தத் தோட்டத்தின் நடுவில் ஓர் எலுமிச்சை மரம். அதன் தாழ்ந்த கிளையில் ஓர் எலுமிச்சையார் மெதுவாகக் காற்றில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார். அவருடைய மனத்தில் எண்ணங்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன.

"சே! இந்த ஊரில் எவ்வளவு அநியாயம்! எவ்வளவு கொடுமை! இந்தப் பாழும் மனிதர்கள் எங்கே என்னைப் பறித்துச் சாப்பிட்டு விடுவார்களோ என்று சதா பயந்து சாக வேண்டியிருக்கிறது. இங்கே காத்துக் காத்து என் முன்னோர்கள் அடைந்த சோக முடிவையே நானும் அடையப் போவதில்லை. வெளியே உலகம் விரிந்து கிடக்கிறது. என்னிடம் இளமையும், தைரியமும், அறிவும் நிரம்பி இருக்கின்றன. ஒரு சிறந்த எதிர்காலத்தை நான் சிருஷ்டிக்கப் போகிறேன்" என்று எண்ணிக் கொண்டே எலுமிச்சையார் சிந்தனையில் ஆழ்ந்தார்.

"ஒருவன் எவ்வளவுதான் தைரியசாலியாக இருந்தாலும், தனியாகப் பயணம் செய்வது ஆபத்து. நம்பிக்கையான சில நண்பர்களையும்கூட அழைத்துப் போனால்தான் பாதுகாப்பாக இருக்கும்" என்று எலுமிச்சையார் தீர்மானித்தார். எனவே, அந்தத் தோட்டத்தில் வாழ்ந்த அவருடைய நண்பர்களான வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மிளகாய், மிளகு ஆகியோரை அழைத்தார். அவர்கள் ஓடி வந்து எலுமிச்சையாரைச் சூழ்ந்தனர்.

"நண்பர்களே! இந்தத் தோட்டத்தில் நமக்குச் சுதந்திரமோ, சந்தோஷமோ சிறிதும் இல்லை. இங்குள்ள மனிதர்கள் பேராசை பிடித்தவர்கள். நம் எல்லோரையும் பிடித்து விழுங்கி வருகின்றனர். நம்முடைய முடிவு பயங்கரமானது. அதை அறிந்தும் நாம் கோழைகளாக வாழ்ந்து வருகிறோம். இங்கு நமக்கு வர இருக்கும் ஆபத்திலிருந்து தப்பிக்கவும், நமது தலைவிதியை மாற்றி அமைக்கவும் நாம் ஏதாவது செய்தாக வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்!" என்று கிளையில் அமர்ந்தவாறே எலுமிச்சையார் கேட்டார்.

"உங்கள் கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் நீங்கள் தான் ஒரு சரியான வழியைச் சொல்ல வேண்டும்" என்று நண்பர்கள் ஒரே குரலில் பதிலளித்தனர்.

"நாம் ஒரு படையைத் திரட்டுவோம்! ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்போம்! புதிய உலகை நோக்கிப் புறப்படுவோம்! இந்தக் கொடியவர்களை

தோள் மீது அமரும் தோழன்!



புகைப்படம்: எம். நடராஜன்

விட்டுவிட்டு நாம் நல்லவர்களை நாடிப் போவோம்!'' என்று எலுமிச்சையார் காரசாரமாகப் பேசினார்.

வெங்காயமும், மற்ற நண்பர்களும் உற்சாகமாகக் கைதட்டி அவருடைய பேச்சை வரவேற்றனர். எலுமிச்சையாரையே தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

அன்தக்கேட்டதும் எலுமிச்சையார் கிளையிலிருந்து தரைக்குத் தாவினார். அவர்களுக்கு மனமார நன்றி சொன்னார். ''அக்கிரமத்திற்கு அடிபணியாதீர்கள்! கொடுமையைக் கண்டு கொதித்து எழுங்கள்! வெற்றி நமதே!'' என்று வீராவேசமாக முழக்கமிட்டார். தலைவர் ஆனபின் அவருடைய குரலிலும், நடையிலும் ஒரு புதிய கம்பீரம் கலந்திருந்தது.

எலுமிச்சையார் உள்பட அந்தக் கூட்டத்தில் இருந்த அனைவருமே இளையவர்கள். அவர்களுக்கு அந்த பூமியில் எந்தவிதமான பந்தமோ, பாசமோ இருக்கவில்லை. ஆகவே, அவர்கள் வரிசையாக வீர நடை போட்டு அந்தத் தோட்டத்தைவிட்டு வெளியேறினர். அவர்கள் தோப்புக்களையும், புல்வெளிகளையும் கடந்து ஒரு நெடுஞ்சாலையை அடைந்தனர். அச்சாலை வழியாக வெகு தூரம் நடந்தனர்.

மாலை நேரம். இருள் பரவியது. அவர்கள் களைத்துப் போயினர். ஆந்தையின் அலறலும், மிருகங்களின் உறுமலும் அருகில் கேட்டன. அச்சத்தால் அந்த வீரர்களின் உடம்பு நடுங்கியது. இரவை எங்கே கழிக்கலாம் என்று அவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். ''அதோ! சாலையின் எதிரே ஒரு குடிசை தெரிகிறது!'' என்றார் எலுமிச்சையார்.

''அந்தக் குடிசைக்கே போவோம்!'' என்று படை வீரர்கள் ஆமோதித்தனர்.

அவர்கள் கவனமாகச் சாலையைக்

கடந்தனர். நேராகக் குடிசையிலிருந்த சமையல் அறைக்கு ஓடினர். அங்கு ஓர் அலமாரி திறந்திருந்தது. தட்டுகள் காலியாக இருந்தன. அவர்கள் வேகமாக மேல் தட்டுக்குச் சென்று அங்கே நெருக்கி அடித்துக் கொண்டு ஒரு மூலையில் அமர்ந்தனர்.

படபடப்பு அடங்கியதும் அவர்கள் அந்த அறையைச் சுற்றித் தங்கள் பார்வையை ஓட்டினர். எரியும் அடுப்பின் மங்கலான வெளிச்சம் அந்த அறை முழுவதும் பரவி இருந்தது. அது ஓர் ஏழை விவசாயியின் குடிசை என்று தெரிந்தது.

சிறிது நேரத்தில் குடிசையின் வாசலில் காலடிச் சத்தம் கேட்டது. எலுமிச்சையாரும், வீரர்களும் அலமாரியின் இருட்டு மூலைக்கு உருண்டு சென்று ஒளிந்தனர். விவசாயியின் மனைவி ஒரு சுள்ளிக் கட்டைச் சுமந்து வந்தாள். சுள்ளிகளை அடுப்பில்போட்டாள். அடுப்புநன்றாகஎரிந்தது. அவள் சமைக்கத்தொடங்கினாள். அடுப்புக்கு மேலிருந்த சங்கிலியின் கொக்கியில் அவள் ஒரு கெட்டிலைத் தொங்கவிட்டாள். அதில் நீரை நிரப்பிச் சோள மாவைப் போட்டாள். சோளக் கூழ் தான் அவர்களுடைய வழக்கமான சாப்பாடு.


வயலில் வேலையை முடித்துவிட்டு அவளுடைய கணவனும், அவனுடைய சகோதரர்களும் குடிசையின் உள்ளே நுழைந்தனர். கை, கால் கழுவி, மாலை வணக்கம் சொல்லிவிட்டு அவர்கள் சாப்பிட அமர்ந்தனர். அவர்களுக்கு நல்லபசி. கூழின் மணம் அந்தக் குடிசை முழுவதும் இருந்தது.

விவசாயியின் மனைவி கெட்டிலைக் கீழே இறக்கினாள். கூழை ஒரு பெரிய தட்டில் ஊற்றினாள். ஒரு மர அகப்பையால் அதைக் கிண்ணங்களில் ஊற்றிக் கொடுத்தாள்.

"இது நோன்பு மாதம். ஆகையால் நாம் இறைச்சியைச் சேர்த்துக் கொள்வதில்லை. இந்த வெறும் கூழைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு எனக்கு அலுத்து விட்டது. இதில் கொஞ்சம் பூண்டாவது சேர்த்தால் ருசியாக இருக்கும்" என்றான் கணவன்.

வீட்டில்பூண்டு இல்லை என்று தெரிந்திருந்தாலும், கணவனைத் திருப்தி செய்வதற்காக மனைவி உடனே எழுந்தாள். ஒருவேளை அலமாரியின் மூலை முடுக்குகளில் சில பூண்டுகள் இருக்கலாம் என்று எண்ணி அவள் மேல் தட்டில் கையை விட்டுத் துழாவினாள்.

"இதோ இருக்கே!" என்று சொல்லிக் கொண்டே எலுமிச்சையாரின் படையைச் சேர்ந்த அந்த வெள்ளைப் பூண்டை அவள் வெளியே எடுத்தாள். மேசை மேல் வைத்து அந்தப் பூண்டின் தலைமேல் தன் முரட்டுக் கையால் ஓங்கி அடித்தாள். பாவம், பூண்டு



வீரன்! துண்டு துண்டாக உடைந்து போனான். பூண்டின் உடம்பிலிருந்த வெள்ளைச் சட்டையை அவள் உரித்து எறிந்தாள். பிறகு அவள் பூண்டை ஓர் உரலில் இட்டு உலக்கையால் குத்தினாள். தன் நண்பனுக்கு நேர்ந்த கதியைக் கண்டு எலுமிச்சையாரும், படைவீரர்களும் வெலவெலத்துப் போயினர்.

அவளுடைய கையில் அகப்பட்டதுமே பூண்டு வீரன் மயக்கமுற்று வீழ்ந்தான். மயக்கம் தெளிந்தபோது, தான் உரலில் கிடப்பதையும், உலக்கையால் அடிபடுவதையும் உணர்ந்தான். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தன் முழு சக்தியையும் திரட்டி அவன் போராடினான். ஒரு பலத்த நெடியை அறையெங்கும் பரப்பினான். ஆனால் ஒன்றும் பயனளிக்கவில்லை. அவன் போராடிக்கொண்டே உயிரை விட்டான்.

அவள் உரலில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றினாள். பிறகு அந்தப் பூண்டு நீரை எடுத்துக் கூழில் தெளித்தாள். ''கூழ் பிரமாதம்!'' என்று பாராட்டிக் கொண்டே எல்லோரும் குடித்தனர்.

விவசாயியின் கடைசித் தம்பி ஆடுகளை மேய்த்து வந்தான். அன்று ஆடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டு அவன் சற்றுத் தாமதமாக உணவருந்த வந்தான். அந்த இடையன் கூழைவாங்கிக் கொண்டு யோசித்தான். ''என்ன வேண்டும்?'' அவள் கேட்டாள். ''கடித்துக் கொள்ள ஒரு வெங்காயம் வேணும். இருக்குமா?'' என்று தயக்கத்தோடு கேட்டான்.

அவள் மறுபடியும் அலமாரிக்குச் சென்றாள். மேல் தட்டில் கையை விட்டு ஓரங்களில் தேடினாள். அந்த வெங்காயம் கிடைத்தது. அதை இறுகப் பற்றி இடையனின் கையில் கொடுத்தாள்.

எதிரியின் கையில் சிக்கியதும் வெங்காய வீரன் நெளிந்து வளைந்தான். தப்பிக்க முயன்றான். ஆனால் பாவம், முடியவில்லை. இடையன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கத்தியை எடுத்தான். வெங்காயத்தை நான்கு துண்டுகளாக நறுக்கினான். வெங்காயத்தின் இளஞ் சிவப்புக் கோட்டு கந்தல் கந்தலாகிக் கீழே விழுந்தது. அந்த நிலையிலும் வெங்காய வீரன் தன் உயிருக்காகத் துணிச்சலோடு போராடினான். அவன் இடையனின் கண்ணைக் குத்தினான்; நாக்கைக் கடித்தான். இடையனுக்குக் கண் அரித்தது. கண்ணீர் பெருகியது. புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அவன் கூழையும், வெங்காயத்தையும் மாற்றி மாற்றி உண்டான். சகோதரன் வெள்ளைப்பூண்டைப்போலவே வெங்காயத்தின் வாழ்க்கையும் சோகமாக முடிந்தது.

சற்று நேரத்தில் விவசாயியும், தம்பிகளும் உறங்கினர். விவசாயியின் மனைவியும் அடுப்பை அணைத்துவிட்டுத் துயிலில் ஆழ்ந்தாள். அவர்களுடைய குறட்டை ஒலி மட்டும் கேட்டது. மற்ற சப்தங்கள் அடங்கின.

பாக்கியிருந்த படை வீரர்களின் பயம் தணிந்தது. அவர்கள் எலுமிச்சையாரின் முகத்தை நோக்கினர். அவர் அவர்களை அருகில் வருமாறு சைகை காட்டினார். ''வீரர்களே! நம்முடைய கெட்ட காலம் நாம் இந்த எளிய குடிசைக்கு வந்துள்ளோம். இந்த விவசாயிகள் மிகவும் கொடியவர்கள். இவர்கள் கல்லையும், மண்ணையும்கூடச் சாப்பிட்டு விடுவார்கள் போல் இருக்கிறது. வெள்ளைப் பூண்டுக்கும், வெங்காயத்திற்கும் வந்த முடிவு நமக்கும் வர வேண்டாம். அதற்குள் நாம் இங்கிருந்து ஓடிப் போவோம்'' என்று அவர் ரகசியமாகப் பேசினார். மிளகாய் வீரனும், மிளகு வீரனும் மௌனமாகத் தலையை ஆட்டினர்.

விவசாயிகள் நன்றாகத் தூங்கினர். ஆனால் அந்த வீரர்களுக்கு இரவு முழுவதும் சரியாகத் தூக்கம் வரவில்லை. அவர்கள் புரண்டு, புரண்டு படுத்தனர். பிறகு, அதிகாலை இருளிலேயே அவர்கள் அந்தக் குடிசையை விட்டுத் திருட்டுத்தனமாக வெளியேறினர். ''இனிமேல் குடிசைகளுக்குள் நுழையவே கூடாது'' என்ற தீர்மானத்தோடு அவர்கள் நெடுஞ்சாலை வழியே நடந்தனர். பயணத்தை நிம்மதியாகத் தொடர்ந்தனர்.

பொழுது புலர்ந்தது. எலுமிச்சையாரும், வீரர்களும் ஒரு நகரத்தின் எல்



லையை அடைந்தனர். அகன்ற சாலையும், அழகிய சோலையும், தெள்ளிய ஓடையும், மெல்லிய பாலமும், வண்ண ஊற்றும், கிண்ண மலர்களும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. அத்தகைய அழகுச் சூழலில் வாழும் மக்கள் முரடர்களாகவும், இரக்கம் இல்லாதவர்களாகவும் இருக்க மாட்டார்கள் என அந்த வீரர்கள் நம்பினர். விரைவில் அவர்கள் ஒரு பெரிய மாளிகையின் வாசலை அடைந்தனர். அதன் செல்வச் செழிப்பு அவர்களைப் பிரமிக்க வைத்தது.

“இந்த மாளிகை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதன் சொந்தக்காரர் ஒரு பெரிய கோடீசுவரராக இருக்க வேண்டும். எல்லாப் பொருள்களும் இவரிடம் தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த எளிய குடிசைவாசிகளைப் போல இவர், 'பசி, பசி' என்று அலைய மாட்டார். அப்படியே பசி வந்தாலும், வீரர்களான நம்மை விழுங்கவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு நிச்சயமாக வராது. நம் சொந்த வீட்டில் இருப்பதைப் போலவே இந்த வீட்டில் நாம் சுதந்திரமாக வாழலாம் என்று எண்ணுகிறேன். நீங்களும் சரி என்றால் உள்ளே போகலாம், வாருங்கள்!” என்று எலுமிச்சையார் யோசனை சொன்னார். மிளகாயும், மிளகும் சரியென்று ஒப்புக் கொண்டனர்.

அந்த மூன்று வீரர்களும் மெதுவாக அடிமேல் அடி வைத்து மாளிகையின் தோட்டத்தையும், முன் கதவையும் கடந்தனர். பிறகு மாடிப்படி ஏறிச் சென்றனர். பழக்கத்தின் காரணமாக அங்கிருந்த ஓர் அலமாரியில் நுழைந்து ஒளிந்து கொண்டனர்.

சிறிது நேரத்தில் நாலைந்து வேலைக்காரர்கள் புடைசூழ ஒரு சமையல்காரன் அங்கே தோன்றினான். “அடுப்பு மூட்டு! கோழியை அறு! சமையல் பண்ணு....!” என்று அவன் மற்றவர்களை விரட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் சுறுசுறுப்பாகச் சமையலில் ஈடுபட்டனர். கோழி, முட்டை, காய்கறி — இப்படிப் பல விஷயங்கள் பிரமாதமாகத் தயாராகிக் கொண்டிருந்தன. “மிளகாய் எங்கே?” சமையல்காரன் கர்ஜித்தான்.

வில்லிலிருந்து விடுபட்ட அம்பென ஒரு வேலைக்காரன் விரைந்தான். அலமாரியைத் திறந்தான். கையை நுழைத்தான். மிளகாய் வீரனையும், வேறு சில மிளகாய்களையும் பற்றினான்.

மிளகாய் வீரன் தனக்கு வந்த ஆபத்தை உணர்ந்தான். அதுவரையில் பச்சையாக இருந்த அவனுடைய உடம்பு பயம் மிகுதியால் சிவப்பாக மாறியது. வேலைக்காரன் மிளகாயை அம்மியில் வைத்து அரைத்தான்.

மிளகாய் வீரன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் காரமான நெடியை எங்கும் பரப்பினான். வேலைக்காரனின் மூக்கைத் துளைத்தான். கையில் எரிச்சலை ஊட்டினான். இருந்தாலும், வேலைக்காரன் மிளகாயைச் சிவப்பு நிறப் பொடியாக அரைத்து எடுத்தான். மேலும், தும்மிக் கொண்டே அவன் மிளகாய்ப் பொடியை வாணலியில் போட்டு வறுத்து எடுத்தான். மிளகாயின் ஆயுள் முடிந்தது.

அலமாரியிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எலுமிச்சையாரும், மிளகு வீரனும் வெட வெட வென நடுங்கினர். பச்சையாக இருந்த எலுமிச்சையார் பயந்து போய் மஞ்சளாக மாறினார். பசுமையாக இருந்த மிளகு வீரன் தலைமுதல் கால் வரையில் கறுப்பாக மாறினான்.

சாப்பாட்டு நேரம். எஜமானருக்காகச் சாப்பாட்டு மேசை சீர் செய்யப்பட்டது. தட்டு, கரண்டி, உப்பு, ஊறுகாய், ஒயின் பாட்டில், பிராந்தி பாட்டில் முதலியவற்றை வேலைக்காரர்கள் வரிசை வரிசையாக மேசை மேல் பரப்பினர். ஒரு வேலைக்காரன் அலமாரியிலிருந்த எலுமிச்சையாரை வெளியே எடுத்தான். மேசையின் நடுவே இருந்த பிராந்தி வடி கட்டும் தங்கக் கிண்ணத்தின் மேல் அதை வைத்தான்.

அந்த உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்ததும் எலுமிச்சையாரின் பயம் நீங்கியது. அவருக்குப் புதிய உற்சாகம் பிறந்தது. தன்னைப் பாராட்டுவதற்காகவே அந்த உயரமான ஆசனத்தை அளித்திருக்கிறார்கள் என்று அவர் நம்பினார். பெருமையோடு நாலாபுறமும் நோக்கினார்.

எஜமானருக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் வைத்தாயிற்று என்று கடைசி முறையாக ஒரு வேலைக்காரன் சாப்பாட்டு மேசையை ஆராய்ந்தான். ''மிளகு வைக்கவில்லையே!'' என்று சொல்லிக் கொண்டே அலமாரியைத் திறந்தான். நமது மிளகு வீரனோடு இன்னும் கொஞ்சம் மிளகையும் சேர்த்து எடுத்து அம்மியில் வைத்து நசுக்கினான்.


மிளகு வீரன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போராடினான். காரமான நெடியைப் பரப்பினான். வேலைக்காரனின் மூக்கில் புகுந்து இருமலையும், தும்மலையும் உண்டாக்கினான். ஆனாலும், வேலைக்காரன் மிளகை நன்றாகப் பொடி செய்தான். அதை ஒரு கிண்ணத்தில் நிரப்பி மேசை மேல் வைத்தான். முழுதாக இருந்த மிளகு வீரன் தூளாக மாறி உயிர் துறந்தான். அந்தக் கிண்ணத்திலேயே அமைதி அடைந்தான்.

பருத்த சரீரத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டே எஜமானர் சாப்பாட்டு அறைக்குள் நுழைந்தார். மேசையின் முன்னால் அமர்ந்தார். அவர் முதலில் எலுமிச்சையாரைக் கையில் எடுத்து முகர்ந்து பார்த்தார். மீண்டும் அதே இடத்தில் வைத்தார். எலுமிச்சையாருக்கு ஒரே குஷி. தனக்கு ஏதோ விசேஷ கௌரவம் கிடைத்து விட்டதாக அவர் கருதினார். பாவம், அந்தச் செய்கையின் உண்மையான அர்த்தம் எலுமிச்சையாருக்குப் புரியவில்லை.

எஜமானர் சிறிது உப்பை எடுத்துச் சூப்பில் போட்டார். மீண்டும் எலுமிச்சையாரைக் கையில் எடுத்தார். தன் உள்ளங் கைகளுக்கு இடையே வைத்து நன்றாக அழுத்தித் தேய்த்தார். எலுமிச்சையாருக்கு உடம்பு வலித்தது. இருந்தாலும், எஜமானர் முரட்டுத் தனமாகத் தன்னிடம் அன்பு செலுத்துகிறார் என்று எண்ணி அவர் மகிழ்ந்தார்.

திடீரென ஒரு கத்தி பளபளத்தது. எலுமிச்சையார் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டார். எலுமிச்சையாருக்கு வாழ்வா, சாவா என்ற போராட்டம். எஜமானரின் கண்ணில் அவர் சாறித் துப்பினார். அவர் அதை லட்சியம் செய்யவே இல்லை. அவருக்கு நல்ல பசி. எலுமிச்சைத் துண்டுகளை இரு கைகளிலும் எடுத்து அவர் சூப்பில் பிழிந்தார். கடைசிச் சொட்டு வரையில் பிழிந்த பிறகு சக்கையை வேலைக்காரன் கையில் கொடுத்தார். அவன் அதைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தான்.

தங்க ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்த எலுமிச்சையார் சிறிது நேரத்திற்குள்ளாகவே சாறு இழந்து குப்பைத் தொட்டியில் எறியப்பட்டார்!



மேலே தெரியும் காட்சி பாரதியாரின் பாடலில் உள்ள சில வரிகளை நினைவுபடுத்துகின்றன அல்லவா? அவை எந்த வரிகள்?

விடை 56-ஆம் பக்கம்.

நடை ராமன்

நடையில் தொடங்கும் ராமன் கதை
நடையில் முடியும் ராமன் கதை!

நடப்ப தற்குக் கஷ்டம் என்று
தள்ளு வண்டி வாங்கினான் — ராமன்
தள்ளு வண்டி வாங்கினான்.

தள்ளு தற்குக் கஷ்டம் என்று
சைக்கிள் வண்டி வாங்கினான் — ராமன்
சைக்கிள் வண்டி வாங்கினான்.

மிதிப்ப தற்குக் கஷ்டம் என்று
மோட்டார்சைக்கிள்வாங்கினான்—ராமன்
மோட்டார் சைக்கிள் வாங்கினான்.


உதைப்ப தற்குக் கஷ்டம் என்று
மோட்டார் வண்டி வாங்கினான் — ராமன்
மோட்டார் வண்டி வாங்கினான்.

ஓட்டு தற்குக் கஷ்டம் என்று
ஓட்டு நர் அமர்த்தினான் — ராமன்
ஓட்டு நர் அமர்த்தினான்.

சோம்ப லாக இருந்த தாலே
தொப்பைபெருத்துப்போனதாம்—ராமன்
தொப்பைப் பெருத்துப் போனதாம்!

தொப்பை குறையச் செய்வ தென்ன?
தினமும் நிறைய நடக்கிறான் — ராமன்
தினமும் நிறைய நடக்கிறான்!

நடையில் தொடங்கும் ராமன் கதை,
நடையில் முடியும் ராமன் கதை!







என் கதையைக் கேளுங்கள்

-ஒட்டகம்

நீங்கள் வாழை மரத்தைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசுகிறீர்கள். வாழை மரத்தின் இலை, பூ, காய், பழம், தண்டு, கிழங்கு, பட்டை, நார் எல்லாம் உங்களுக்கு உபயோகப்படுவதால்தானே அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் கூடத்தான் வாழையைப் போல் பலவிதத்திலும் உதவி வருகிறேன்.


பாலைவனத்தில் சாமான் தூக்கவும், சவாரி செய்யவும் என்னைத்தான் அரேபியர்கள் பயன்படுத்துகிறார்கள். என் பாலைக் கறந்து குடிக்கிறார்கள். அதிலே பாலடைக் கட்டி செய்து, பல நாள் கெடாமல் வைத்திருக்கிறார்கள். என் உரோமத்தில் கயிறு திரிக்கிறார்கள். துணி நெய்கிறார்கள். இவை மட்டுமா? ஓவியர்கள் உபயோகப் படுத்துகிறார்களே தூரிகை, அதற்கும் என் உரோமம் உதவுகிறது. என் சாணத்தைக் கூட அரேபியர்கள் விடுவதில்லை. வறட்டி தட்டி எரிக்கிறார்கள். அரேபியர்களில் சில பொல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என் இனத்தவரைக் கொன்று, மாமிசத்தையும் தின்று விடுகிறார்கள்!

செத்த பிறகும் கூட நாங்கள் உபயோகப்படுகிறோம். எங்களுடைய தோலைப் பதனிட்டு, பைகள், குல்லாக்கள் செய்கிறார்கள். தந்தத்தைப் போல் எங்களுடைய எலும்பிலும் பல சாமான்கள் செய்கிறார்கள்.

என் முதுகைப் பாருங்கள். எனக்கு ஒரே ஒரு திமில்தானே இருக்கிறது? சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் இருக்கும். ஆனால், அவற்றை நான் பிறந்த அரேபியப் பாலைவனத்திலே காண முடியாது. சைனாவிலும் சைபீரியாவிலுமே காணலாம். அவை எங்களை விடக் குள்ளமாகவும், குண்டாகவும் இருக்கும். கால்களும் குட்டையாக இருக்கும். அங்கெல்லாம் மலைகள் அதிகம். கால்கள் குட்டையாக இருப்பதால், மலைமேல் ஏறுவது சுலபம். ஆனால், எங்களைப் போல் மணல் வெளியில் நடப்பதற்குக் குட்டைக் கால்களை விட நெட்டைக் கால்கள்தான் வசதியாயிருக்கின்றன. அதனால்தான், எங்களுடைய கால்கள் நெட்டையாயிருக்கின்றன.

எங்களுடைய உரோமத்தைவிட அவைகளின் உரோமம் அடர்த்தியாயிருக்கும். காரணம், அவை வசிக்கும் இடங்களில் அடிக்கடி குளிர் காற்று வீசும். வறண்ட பாலைவனத்தில் வசிக்கும் எங்களுக்கு அவ்வளவு அடர்த்தியான உரோமம் எதற்கு?

என் இனத்தவரை அரேபியாவில் மட்டுமல்ல; வட ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள சில வறண்ட பிரதேசங்களிலும் காணலாம். உங்கள் தேசத்தில் கூட என் இனத்தைச் சேர்ந்த சிலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் வண்டி இழுக்கிறார்கள். சிலர் வயலை உழுகிறார்கள். கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கவும் சிலர் உதவுகிறார்கள்.



நான் பாலைவனத்தில் வசிப்பதாகச் சொன்னேன் அல்லவா? பாலைவனம் என்றால் உங்களுக்குத்தான் தெரியுமே! இங்கு உயரமான கட்டடங்களைப் பார்க்கவே முடியாது. பசுமையான வயல்களைப் பார்ப்பதே அபூர்வம். இங்கு மழை எப்போதாவதுதான் பெய்யும். சில இடங்களில் 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மழை பெய்வதுண்டு!

என்னுடைய எஜமானர் பெயர் அப்துல்லா. அவருக்குச் சொந்தமாக வீடு கிடையாது. கூடாரம்தான் அவருடைய வீடு. அவரும் அவருடைய குடும்பத்தாரும் பாலைவனத்திலே ஓரிடத்தில் நிலையாகத் தங்க மாட்டார்கள். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் ஓரிடத்தில் கூடாரம் போடுவார்கள். பிறகு, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு வேறு ஓரிடத்திற்குப் போவார்கள். இப்படி இடம் விட்டு இடம் போவதற்கு நான்தான் மிகவும் உதவியாயிருப்பேன். அவர்களுடைய கூடாரம், சாமான்கள், கம்பளிகள் எல்லாவற்றையும் நான்தான் சுமந்து செல்வேன்.

பாலைவனத்தில் என்னைப் போல் எவராலுமே நடக்க முடியாது. அதனால்தானே என்னைப் 'பாலைவனக் கப்பல்' என்கிறீர்கள்? முதுகிலே 600, 700 பவுண்டு எடையைச் சுமந்துகொண்டு ஒரு நாளுக்கு 25 அல்லது 30 மைல் தூரங்கூட நடப்பேன். அதற்கு மேல் என்றால் முடியாது. வீண் தொந்தரவு செய்தால் விழுந்து படுத்துக் கொள்வேன்!

என் எஜமானர் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் புறப்படுவதற்கு முன்னால், என் திமிலை ஒரு பார்வை பார்ப்பார். அது 'கொழு கொழு' என்று இருந்தால், "சரி, கவலையில்லை; நீண்ட தூரம் போகலாம்" என்று முடிவு கட்டுவார். புறப்படுவதற்கு முன்பு, மோட்டார் காரில் பெட்ரோல் இருக்கிறதா என்று பார்க்கிறீர்களே, அப்படித்தான்!

பாலைவனத்தில் எனக்கு அபூர்வமாகவே உணவு கிடைக்கும். கடற்கரை ஓரத்தில் அல்லது ஆற்றங்கரை அருகேதான் மரம் செடி கொடிகளைக் காண முடியும். அங்கேதான் மக்களும் வீடு கட்டிக்கொண்டு நிரந்தரமாக வசிப்பார்கள். அங்கு என் எஜமானர் வியாபாரத்திற்காகச் செல்வதுண்டு. அப்படிப் போகும்போது, அங்கு ஏராளமாக உணவு கிடைக்கும். நிறைய நிறையச் சாப்பிடுவேன். தேவைக்கு அதிகமாகவே சாப்பிட்டு வைப்பேன். நான் தேவைக்கு மேல் சாப்பிட்டது எவ்வளவு என்பதை, என்னுடைய திமிலைப் பார்த்தே கண்டுபிடித்து விடலாம். கொழுப்பாக அது அங்கே இருக்கும்.

பாலைவனத்தில் செல்லும்போது பல நாட்களுக்கு உணவு கிடைக்காது. அப்போது என் திமிலில் இருக்கும் கொழுப்பு உதவியாயிருக்கும். எனக்கு வேண்டிய சத்து அங்கிருந்து கிடைக்கும். நாள் ஆக ஆக, திமில் சிறுத்துக் கொண்டே வரும். கடைசியில் அது தொய்ந்து போய் முதுகோடு ஒட்டிக் கிடக்கும்.

தண்ணீர் கிடைக்கும்போதும் இப்படித்தான் செய்வேன். அளவுக்குமேல் குடித்துவிடுவேன். என் வயிற்றிலே தேன்கூடு போல் பல அறைகள் உள்ளன. அந்த அறைகளிலே தண்ணீர் தேங்கி நிற்கும். அந்த அறைகளிலிருந்து தேவையான தண்ணீரை எடுத்துக் கொள்வேன். இதனால், பல நாட்கள் தண்ணீ குடிக்காமலே என்னால் காலம் தள்ள முடிகிறது.

வறண்ட பாலைவனத்தில் சில முட்

செடிகள் வளர்வதுண்டு. அந்தச் செடிகளைப் பார்த்தால் நான் விட மாட்டேன். ''அடடே, அதிலுள்ள முட்கள் நாக்கைக் குத்திவிடுமே! வாயைக் கிழித்துவிடுமே!'' என்று கவலைப்படுகிறீர்களா? கவலைப்படாதீர்கள். அந்த முட்கள் எங்களை ஒன்றுமே செய்வதில்லை. குள்ளமாக அங்கே ஒரு முள் செடி இருக்கிறது. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? ஒட்டக முள்செடி! எங்களுக்குப் பிரியமான செடியாக இருப்பதால்தான் அதற்கு அப்படிப் பெயர் வைத்துவிட்டார்கள்!

ஆடு மாடுகளைப் போல் நானும் அசை போடும் மிருகம்தான். கிடைக்கும் உணவை அப்படியே விழுங்கிவிடுவேன். பின்னர் சாவதானமாக, விழுங்கிய உணவை வாய்க்குக் கொண்டு வந்து பற்களால் நன்றாக மென்று தின்பேன்.

எனக்கு நீந்தத் தெரியாது. ஓடும் தண்ணீரைக் கண்டாலே பயம்தான்! நான் என்ன, தண்ணீர்க் கப்பலா? பாலைவனக் கப்பல்தானே! பாலைவனத்தில் தண்ணீரைக் கடக்க வேண்டிய தேவையே வருவதில்லை.

பாலைவனத்தில் பகல் நேரத்திலே வெயில் மிகமிக அதிகம். பாலைவனத்தில் பல ஆண்டுகளாக வாழும் என் எஜமானர் கூட நடுப்பகலில் வெளியே தலைகாட்ட மாட்டார். அவரும், அவர் குடும்பத்தாரும் கூடாரத்திற்குள்ளே தங்கியிருப்பார்கள். ஆனால், நான் சூரியனுக்குப் பயப்படுவதே இல்லை. கடுமையான வெயிலில் கூட நான் வெட்டவெளியில்தான் படுத்திருப்பேன்.

பாலைவனத்தில் அடிக்கடி சூறாவளி வீசும். அந்தக் காற்று மணலை வாரி வாரி இறைக்கும். அப்போது நான் தரையிலே கழுத்தை நன்றாக நீட்டிப் படுத்துக் கொள்வேன். கண்களையும், மூக்கையும் இறுக மூடிக் கொள்வேன்.

''கண்களை மூடுவதற்குத்தான் கண் இமைகள் இருக்கின்றன. மூக்கை எப்படி மூட முடியும்?'' என்றுதானே கேட்கிறீர்கள்? என் மூக்கைக் கூர்ந்து பாருங்கள். அது அகலமாகவோ அல்லது வட்டமாகவோ இருக்கிறதா? இல்லையே! உண்டியல் பெட்டியில் ஓட்டை இருப்பது போலத்தான் என் மூக்கும் இருக்கிறது! அதனால் மணற் காற்று வீசும் போது மூக்கை நான் இறுக மூடிக் கொண்டுவிடுவேன். ஒரு தூசு கூட என் மூக்குக்குள்ளே நுழைய முடியாது!

மணற் காற்று அடிக்கும்போது, என் எஜமானர் என்ன செய்வார், தெரியுமா? தலை முதல் கால் வரை போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு, என் பக்கத்திலே வந்து கால்களை முடக்கிப் படுத்துக் கொள்வார். காற்று நின்றதும் எழுந்து போர்வையில் உள்ள மண்ணைத் தட்டி விடுவார்.,

அரேபியாவில் அடிக்கடி ஒட்டகப் பந்தயம் நடக்கும். அதில் கலந்துகொள்ளும் ஒட்டகங்களுக்குப் 'பந்தய ஒட்ட




கங்கள் என்று பெயர். ஆனால், குதிரையைப் போல் அவைகளால் வேகமாக ஓட முடியாது. அதிகமாகப் போனால், மணிக்குப் பன்னிரண்டு மைல் வேகம் போகும்.

அரேபியாவில் 'ஒட்டகச் சண்டை ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும்.. எனக்கு இதிலெல்லாம் பழக்கமில்லை. ஆனாலும், எனக்குத் தெரிந்த சில நண்பர்கள் நன்றாகச் சண்டை போடுவார்கள்.. இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறும் ஒட்டகத்தின் எஜமானருக்குப் பரிசு கிடைக்கும். என்ன பரிசு தெரியுமா? ஒரு கழுதைதான் பரிசு!

குதிரைச் சவாரி செய்யும்போது, நீங்கள் கால்கள் இரண்டையும் இருபுறமும் தொங்க விடுகிறீர்கள். ஆனால், எங்கள் மேல் அப்படி உட்கார்ந்து சவாரி செய்ய மாட்டார்கள். திமிலில் அமர்ந்து கால்கள் இரண்டையும் பிடரியில் வைத்துக் கொள்வார்கள்.

என் முதுகில் ஏறிச் சவாரி செய்ய உங்களுக்கும் ஆசையிருக்கிறதா? இதோ நான் தயார். ஆனால், குதிரைச் சவாரி போல் இந்தச் சவாரியும் சுகமாக இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள்! மிகவும் அசௌகரியமாயிருக்கும். இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்து நான் செல்வதால், புதிதாகச் சவாரி செய்பவர்களுக்கு மயக்கம் கூட வந்துவிடும்! "மயக்கம் வந்தால் வரட்டுமே!" என்கிறீர்களா? சரி, வாருங்கள். தங்கள் வரவு நல்வரவாகுக!

ஓவியராகலாம்





பழைய கதை: புதிய பாடல்

பத்துப் பேர் போதும்

குழந்தைக் கவிஞர்

வளையம் ஒன்றைத் தலை வழியாக
மாட்டினன் ஒருவன் சர்க்கஸிலே.
எளிதாய் உடலை அதற்குள் புகுத்தி
எடுத்தான் கால்கள் வழியாக.

வந்தவர் அனைவரும் கைகள் தட்டி
வாழ்த்தினர் அவனைப் பாராட்டி.
இந்தநல் வித்தையை மீண்டும் செய்தான்,
இன்னும் சிறிய வளையத்தில்.

ஒன்றினும் ஒன்று சிறியது வாக
உள்ள வளையம் ஐந்தினிலே
அன்னவன் வித்தைகள் செய்திடக் கண்டு
அனைவரும் 'ஆஹா!' என்றனரே!

கூட்டம் தன்னில் இருந்த ஒருவன்
கூர்ந்து பார்த்தான் இதையெல்லாம்
ஆட்டம் முடிந்ததும் வித்தைக் காரனை
அழைத்துப் பேசினான் அம்மனிதன்.

○ ○ ○ ○ ○

''சம்பளம் என்ன தருகின்றார்
சர்க்கஸ் கம்பெனி முதலாளி?''

''ஐம்பது பத்து ரூபாய்கள்.
அத்துடன் உணவு, உடைதருவார்.''

''இரண்டு மடங்கு நான்தருவேன்.
என்னுடன் நீயும் வந்துவிடு.''

''சரிதான், என்ன வேலையுமே
தருவீர்; விளக்கிக் கூறிடுவீர்.''

''கன்னம் வைத்துத் திருடுகிற
கள்வர் கூட்டத் தலைவன்நான்.
சின்னஞ் சிறிதாய் வளையம்போல்
சுவரில் ஓட்டை போட்டிடுவோம்.

''சின்ன வட்டம் அதனுள்ளே
சீக்கிரம் நுழைந்து சென்றிடவே
உன்னைப் போல ஒருமனிதன்
உடனே தேவை; வந்துவிடு.''

''வருவேன்; ஆனால், என்னுடைய
வளைய வித்தை பார்த்தவர்கள்
'அருமை,' 'அருமை' என்றனரே;
ஆயிரம் பேரும் மகிழ்ந்தனரே.''

''வித்தை செய்யும் கலைஞனுக்கு
மிகவும் தேவை பாராட்டு.
பத்துப் பேரே இருந்தாலும்
பரவா யில்லை என்றிடுவேன்.

''ஓட்டை வழியாய் வீட்டுக்குள்
உடலைக் குறுக்கிச் செல்லுகையில்,
பார்த்தே என்னைப் பாராட்டப்
பத்துப் பேரை வரவழைப்பீர்.''

○ ○ ○ ○ ○

இந்தப் பதிலைக் கேட்டதுமே
எடுத்தான் ஓட்டம் திருடனுமே.
அந்தக் காட்சி கண்டுமிக
ஆனந் தம்இவன் கொண்டனனே.



பசுவும் எருமையும்

செல்விக்கு ஏழு வயதிருக்கும் — அவள்
செல்லக் குழந்தைஅவ் வீட்டி னிலே.
கல்விக் கூடத்திலே பாடமெல்லாம் — நன்கு
கற்பதிலே முழுக் கவனமுண்டு.

கொல்லைக் கிணற்றில் குளித்துவிட்டுத் —
தெய்வம்
கும்பிட்டுப் பின்வந்து சாப்பிடுவாள்.
நல்ல குணமுள்ள பிள்ளைகளோடு அவள்
நாள்தோறும் மாலையில் கூடிடுவாள்.

அன்றைக்குப்பள்ளிவிடுமுறையாம்—செல்வி
அம்மாவுடன் தோட்டம் செல்லுகையில்,
கன்றுடன் நிற்கின்ற தாய்ப்பசுவை — அம்மா
கைதொட்டுக் கண்ணிலே ஒற்றிக்கொண்
டாள்.
அம்மாவின் செய்கை புரியவில்லை — செல்வி
அவளுடன் கேள்வி கேட்டுவிட்டாள்.
"இம்மாடு கன்றுடன் நிற்கையிலே — இதை
ஏனம்மா கைதொட்டுக் கும்பிடுவாய்!"

"பால்கொடுத்து நம்மைப் பாதுகாக்கும் —
இந்தப்
பசுவைத் தெய்வமாய்ப் போற்றுகிறோம்
சிலமிகும் தர்ம தேவதையே — மண்ணில்
செல்வப் பசுவென்று செப்பிடுவார்."

"எருமையும் பாலை இனிதுதரும் — அதை
ஏன்இழி வாக ஒதுக்குகிறீர்?"
"எருமை சோம்பிக் கிடக்குமம்மா — அது
எமனுக்கு வாகனம் என்றுசொல்வார்.

எங்கும் புறப்படும் போதினிலே — ஒரு
எருமை வந்தால்அது கெடுதலென்பார்.
இங்ஙனால் அதைத் தெய்வமென — யாரும்
ஏத்தி வழிபடல் இல்லையம்மா."

தாயின்விடையைப்புரிந்துகொண்டாள் —
செல்வி
தானும் பசுவைத் தொழுதுநின்றாள்.
காயும் வெயிலில் அம்மாவுடனே — சென்று
காட்டிலே அப்பாவைக் கண்டுவிட்டாள்.

வித்துவான் வ. துரைசாமி


கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல் - தொடர்ச்சி

எண், பெயர், முகவரி

2978. வி. நீலகண்டன், 47, சன்யாசிக் கிராமம், திருநெல்வேலி—1.
2979. எஸ். ராதா, 6, மேற்குத் தெரு, சிங்கராயர் காலனி, மதுரை—2.
2980. வி. குமார், S/o. எம். வடிவேல், ஜாகிர் அம்மா பாளையம், 636 302.
2981. ஆர். ப்ரபுராம், 19, ரெங்கநாதன் ரோடு, அண்ணாமலை நகர், 608 002.
2982. ஏ. முத்துக்குமரன், 51—5 A, சுப்பையா முதலியார் புரம், இரண்டாவது தெரு, தூத்துக்குடி—3.
2983. தன. ஆனந்த பத்மநாபன், 154, அரசமரம் பிள்ளையார் கோயில் வடக்குத் தெரு, சேலம்—1.
2984. க. பத்மநாபன், ரயில்வே நிலையத் தெரு, துடியலூர், கோவை—34.
2985. எஸ். எஸ். ஸ்ரீதர், கே 11, மந்தாரக் குப்பம் காலனி, நெய்வேலி—2.
2986. க. பிரபாகர், 22, கரும்புலி வீரப்பன் செட்டியார் தெரு, அருப்புக்கோட்டை.
2987. எம். சிவகுமார், S/o. கே. முத்துசாமி, ஜூனியர் இன்சினியர் துர்க்காலயா ரோடு, திருவாரூர்.
2988. சி. என். செல்வக்குமாரி, C/o. நடராஜன், தெரு எண் 6, காமராஜ் நகர், மேலக் காவேரி, கும்பகோணம் R M S.
2989. என். சீனுவாசன், 48, திருமங்கலம் ரோடு, சென்னை—49.
2990. நா. சதீஷ், 41, ஜெ. ஜி. நகர், திருப்பூர்—2.
2991. எஸ். சிவரஞ்சிதமணி, சங்கர நிலையம், லட்சுமிபுரம், பழநி—2.
2992. எஸ். உமையாள், சங்கர நிலையம், லட்சுமிபுரம், பழநி—2.
2993. ஜி. வாசு, 188/G, கிழக்கு ரயில்வே காலனி, சேலம்—5.
2994 N. Meenakshi, 48, Car Street, Ulsoor, Bangalore-560 008.
2995 நா. இளங்கோ, த/பெ. நாகலிங்கம், ஆர்ப்பாக்கம்—606752.
2996 டி. எம். சங்கரநாராயணன், 5/20, பம்படித் தெரு, ஆழ்வார்குறிச்சி—627412.
2997 J. Ranjani, D/o. V. Jagannathan, D 37, Anand Niketan, New Delhi-110 021.
2998 எஸ். பிரகாஷ், C/o. எஸ். சண்முகம் (J.E.) T.N.E.B. கொமரலிங்கம், கோவை மாவட்டம்.
2999 V. Sheela, 23/75, Gita Sadan, Central Avenue Road, Chembur, Bombay-71.
3000 ச. சித்ரா, மே/பா. என். சம்பத், 129, ஸ்ரீ ஐயப்பா நகர், சென்னை—111.
3001 கே. பி. செல்வக்குமார், 39 பி, தெரு வீதி, உடுமலைப்பேட்டை.
3002 வி. ஜெயராமன், டி 42, ஆர்.பி. ரோடு, பிளாக், 25, நெய்வேலி—3.
3003 எஸ். பட்டாபிராமன், த/பெ. ஏ. சீனிவாசன், கீழையூர், நாகை தாலுகா.
3004 க.சுரேந்திரன், 266, மதுரம் தெரு, கே. கே. நகர், திருச்சி—21.
3005 இரா. பிரியா, த/பெ. வ. ராமானுஜம், த.பெ. எண். 58, தஞ்சாவூர்—1.
3006 எஸ். ராமஸ்வாமி, 4, தருமலிங்க செட்டியார் லேன், தேனி—626531.
3007 கே. சேரலாதன், ஜி.5, அவ்வை நகர், தர்மபுரி—5.
3008 வி. குமாரகுரு, 121, ஏ. ஆர். ரோடு, கூத்தநல்லூர்—614 101.
3009 டி. சுரேஷ் என்ற சுந்தரராமன், 31F, ஜவஹர் நகர், புதுநகர் அஞ்சல், திருமங்கலம் மதுரை மாவட்டம்.
3010 பா. அகிலா, 33, பிர்மன் கோவில் தெரு, கும்பகோணம்.
3011 ஜெ. ரமேஷ், 11, 37 வது தெரு விரிவு, நங்கநல்லூர், சென்னை—61.
3012 எஸ். தீபா, 8 முதல் தெரு, கல்லுக்குழி—620 020.
3013 த. சதீஷ்குமார், 7, அக்ரஹாரம், திருச்செங்கோடு.
3014 எஸ். ராமசுப்பிரமணியன், 4, செட்டியார் தெரு, இராஜபாளையம்.
3015 இளையராஜா, C/o. வி. சக்கரபாணி, அப்புக்கல் கிராமம்—632 101.
3016 க. நந்தினி, 79/A, வக்கீல் தெரு, இராணிப்பேட்டை (வ. ஆ.)
3017 எஸ். ஸ்ரீவித்யா, 11 ஏ, முத்துநகர் முதல் வீதி, திருப்பூர்.
3018 ப்ரியாராஜ், 21, லட்சுமி குடியேற்றம், சென்னை—17.
3019 வி. ரகுராமன், 472, திருநகர், மதுரை—625 006.
3020 வி. ஸ்ரீராமன், 472, திருநகர், மதுரை—625 006.

3021 எஸ். ஹரிரங்கா, பி — 3, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, வேலூர் — 632 519.
3022 கோ. மணிவண்ணன், 18E, சிவசாமிபுரம், புதூர், சேலம் — 7.
3023 என். மாலினி, 35/12, ஆசாத் வீதி, காதர் பேட்டை, திருப்பூர் — 1.
3024 என். சுதாகர், 35/12, ஆசாத் வீதி, காதர் பேட்டை, திருப்பூர் — 1.
3025. தி. சிவக்கனி, 417, வீட்டு வசதி வாரியப் பிரிவு, இராஜகோபாலபுரம், புதுக் கோட்டை — 3.
3026 ஆர். ராமசாமி, 66, தெப்பக் குளம் வீதி, திருநெல்வேலி — 6.
3027 வ. புனிதா, த/பெ. ரா. வரதராசன், அஞ்சலக அதிகாரி, படைவீடு 637 306.
3028 எஸ். மணிமாறன், 35, சுப்ரமணிய சுவாமி கோயில் தெரு, கொசப்பேட்டை, வேலூர் — 632 001.
3029 எல். கண்ணகி, 101, மாரியம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் — 2.
3030 த. க. ஜெயரேகா, த/பெ. பொ. தங்கநாடார், செருப்பாலூர் 629 161.
3031 எஸ். நாராயணன், 25 பி, மேற்கு சிந்தாமணி, திருச்சி — 2.
3032 எஸ். தியாகராஜன், த/பெ. மு. செல்வராசு, பெருமாள் கோவில் தெரு, திருக் கடையூர், தஞ்சை மாவட்டம்.
3033 ஆர். செந்தில்குமார், த/பெ. ஆர். ராமச்சந்திரன், நியூஸ் ஏஜெண்ட், புலியூர் — 611 108.
3034 கே. பழனிச்சாமி, 49, வி. கே. ரோடு, பீளமேடு, கோவை — 4.
3035 ஏ. எல். பழனியப்பன், ஏ. எல். 169, பிளாட் 2844, சென்னை — 40.
3036 வெ. சாரதா, சி 6, ராமநாதபுரம் ரோடு, பிளாக் 11, நெய்வேலி — 3.
3037 சி. மகேஸ்வரி, 161, ஜி. நேதாஜி ரோடு, திருவாரூர் வடக்கு — 610 002.
3038 த. பாஸ்கரன், த/பெ. டி. வி. தருமராசன், தமிழாசிரியர், நா. நி. உ. பள்ளி, தாண்டிக்குடி 624 216.
3039 கோ. பிருந்தா, 38, சம்பந்தமூர்த்தி தெரு, மதுரை — 1.
3040 டி. பி. கோகுல்ஜி, 32, ராமச்சந்திரபுரம் முதல் சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை 1.
3041 எம். வி. பபகி, 50, நெசவாளர் காலனி, குருசாமி பாளையம், சேலம் மாவட்டம்.
3042 எஸ். ஜி. எஸ். ஜோதிக்கண்ணன், 18 டி, கூலக்கடை பஜார் தெரு, தென்காசி.
3043 கேசி. சிவசங்கரி, 12 பி, 7 வது தெரு, பிரைண்ட் நகர், தூத்துக்குடி — 8.
3044 சு. இராணி, 6, ஆயிரவல்லி நாடார் தெரு, அருப்புக்கோட்டை.
3045 வெ. தியாகேஷ், எம். 5/2, எம். கே. காலனி, நெய்வேலி — 2.
3046 எஸ். ஜெயந்தி, த/பெ. கே. சடகோபன், சங்கர்நகர், பழைய காலனி, திருநெல் வேலி — 7.
3047 பா. காஞ்சனா, 1036/1 டி, ராஜாம்பாள் நகர், கடலூர் — 1.
3048 கே. சேட் முகமது, 37, பங்களா வீதி, புதுப்பேட்டை, விருத்தாசலம்.
3049 எஸ். சித்திரலேகா, 40, இளங்கோ நகர், பாண்டிச்சேரி — 11.
3050 டி. பாலமுருகன், 24 ஏ, கஸ்தூரிபா தெரு, பண்ருட்டி.
3051 கே. ஆனந்தி, த/பெ. ரவிகிருஷ்ணமூர்த்தி, அண்டராயனூர் 605 803.
3052 எஸ். சிவராமகிருஷ்ணன், 8, மேலத்தெரு, மலைக்கோட்டை, திருச்சி — 2.
3053 ஆர். வெங்கடேசன், த/பெ. வி. ரெங்கசாமி, அயலம்பாள் சத்திரம், தஞ்சை — 3.
3054 வீ. ராஜேஷ், 19, புதுத் தெரு, லால்குடி.
3055 மா. குணசீலன், 10/103, நாடார் வடக்குப் புதுத் தெரு, சாத்தூர் — 3.
3056 பி. கே. காந்திமதி, 60, சந்நியாசி கிராமம், திருநெல்வேலி — 1.
3057 ச. நிரஞ்சன், 1040/3A, திருவொற்றியூர், சென்னை — 19.
3058 ச. அரியநாயகசுந்தரம், 58, மஞ்சப்பூத் தெரு, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
3059 ஜெ. வெங்கடேஷ் செந்தில்குமார், 6 A, காலேஜ் ரோடு, குன்னூர் — 2.
3060 ஆ. மு. சக்கரவர்த்தி, 77, கரையாராயத் தேவர் வீதி, சூலூர் — 641 402.
3061 வெ. தென்னரசு, த/பெ. எஸ். வெள்ளைச்சாமி, 8, கோயில் தெரு, ஆர். இ. சி. திருச்சி — 15.
3062 கே. எம். அனிதா, 18, பார்த்தசாரதி நகர், 2 வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை 88.
3063 பி. பிரசாத், G/2, வீட்டு வசதி வாரியம், செய்யாறு.
3064 கீதா ராமசாமி, L/510, வீட்டு வசதிப் பிரிவு, பெரியார் நகர், ஈரோடு — 9.
3065 ஜி. கிருஷ்ணகுமார், 59 பி, தரிசப்ப பழனிக் கவுண்டர் வீதி, கோபிசெட்டிப் பாளையம்.
3066 ஜி. எஸ். பூர்ணசந்திரகுமார், 23, ஆண்டவர் தெரு, கோபிசெட்டிபாளையம்.
3067 வி. பத்மப்பிரியா, 14, பிரிமியர் மில்ஸ் ஸ்டாப் குவார்ட்டர்ஸ், ஒத்தக்கால் மண்டபம், கோவை — 12.
3068 இரா. கவிதா, த/பெ. பா. இராமஜெயம், வா. பகண்டை, வாக்கூர் அஞ்சல், விழுப் புரம் தாலுகா.
3069 ஆர். பாரி, த/பெ. பா. இராமஜெயம், வா. பகண்டை, வாக்கூர் அஞ்சல், விழுப் புரம் தாலுகா.
3070 டி. ஈ. பாஸ்கரன், த/பெ. டி. பி. ஈஸ்வரன், எலக்ட்ரீஷியன், மால்கோ, மேட்டூர் அணை 2.

(இன்னும் வரும்)



முன்னொரு காலத்தில் மகத நாட்டை நிலவழகன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் பெரியகருமி; யாருக்கும் எதுவும் தர மாட்டான்.

அதே நாட்டில் மதிவாணன் என்ற வைத்தியர் இருந்தார். அவர் மிக்க அறிவுடையவர். மக்களுக்கு எந்தக் குழப்பம் ஏற்பட்டாலும் அவரிடம் தான் வருவார்கள். வைத்தியரும் தம் அறிவுக் கூர்மையால் அவர்களுக்கு நல்லதீர்ப்பு வழங்குவார். வந்தவர்கள் மனநிறைவோடு அவரைப் புகழ்ந்து கொண்டே செல்வார்கள்.

ஒருநாள் அந்த வைத்தியர் மருந்துக் கலவை காய்ச்சிக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அந்த விபத்து நடந்தது. கவனக் குறைவாக இருந்ததால், மருந்தின் ஆவி பட்டு அவர் கண்கள் குருடாகிவிட்டன! அதனால், அவர் மருத்துவம்செய்வதைவிட்டுவிட்டார். மருத்துவரின் நிலை கண்டு நாட்டு மக்கள் எல்லாரும் வருந்தினர்.

இப்பொழுது மருத்துவர் மக்களுடைய வழக்குகளைத் தீர்த்து வைப்பதிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.

அரசன் இதைப் பற்றிக் கேள்விப் பட்டான். "என்ன? ஒரு குருடனால் எந்தக் குழப்பமான வழக்காக இருந்தாலும் தீர்ப்பு வழங்க முடிகிறதா? அவனை இங்கே வரவழையுங்கள். நானே சோதனை செய்து பார்க்கிறேன்" என்று வீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

அரசனின் ஆணைப்படி பார்வை தெரியாத மருத்துவர் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டார். அன்றுதான் அரசனுக்குக் காணிக்கையாக விலை மதிப்பற்ற முத்து ஒன்றும் வந்திருந்தது.

அரசன் அந்த முத்தை மருத்துவரிடம் நீட்டி, "இந்த முத்தின் தன்மையை மதிப்பிட்டுக் கூறு, பார்ப்போம்" என்றான்.

அந்த முத்தைக் கையில் வாங்கித் தடவிப் பார்த்த மருத்துவர், "அரசே! இந்த முத்து எதற்கும் பயன்படாது. ஏனென்றால் இதற்குள் புழு இருக்கின்றது" என்றார்.

"என்ன.....! என் நண்பன் எனக்குப் பரிசாக அனுப்பிய இந்த முத்து

குறையுடையதா? நீ சொன்னதுமட்டும் பொய்யாக இருக்குமானால், உன் உடலில் உயிர் தங்கி இருக்காது'' என்று கத்திய அரசன், தன் அருகே நின்ற வீரனிடம், ''முத்தை இரண்டாக உடை'' என்று கட்டளை இட்டான்.

மருத்துவனிடமிருந்து முத்தை வாங்கிய அந்த வீரன், தன் கையிலிருந்த கத்தியின் அடிப் பகுதியால் அதை இரண்டாக உடைத்தான்!

என்ன ஆச்சர்யம்! அந்த முத்திற்குள் இருந்த சின்னஞ்சிறு புழு ஒன்று நெளிந்து வெளியே வந்தது! காற்றின் வெப்பம் தாங்காமல் அந்தப் புழு உடனே இறந்துவிட்டது!

இதைக் கண்டு அவையில் இருந்த அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். ''எப்படி முத்திற்குள் புழு இருப்பதைக் கண்டு பிடித்தாய்?'' என்று கேட்டான் அரசன்.



''அரசே! நான் முத்தைத் தடவிப் பார்க்கையில் அது சூடாக இருந்தது. முத்தின் இயல்பு எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்கும். அதனால் முத்திற்குள் உயிருள்ள புழு ஒன்று இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்'' என்று விளக்கம் தந்தார் மருத்துவர்.

மகிழ்ந்த அரசன், ''நீ இனிமேல் இங்கேயே தங்கலாம். அரண்மனையில் சமைக்கப் பெறும் சுவையான சாப்பாடு உனக்குத் தரப்படும். ஆனால், அளவு சாப்பாடுதான்! தண்ணீரை நீ விருப்பம்போல் குடிக்கலாம். அரசவை கூடும்போது எல்லாம் நீ வர வேண்டும். என்ன மகிழ்ச்சிதானே!'' என்று கேட்டான்.

மருத்துவரும் இதற்கு ஒப்புக்கொண்டார்.

சில நாட்களுக்குப் பிறகு உயர் சாதி அரபுக் குதிரை ஒன்று அரசனுக்குப் பரிசாக வந்திருந்தது. அந்தக் குதிரை காண்போரின் கண்ணைக் கவரும் அழகுடன் விளங்கியது. அதைப் பார்த்ததும் அரசனுக்கு அதன் மீது கம்பீரமாக அமர்ந்து தலைநகரை வலம் வர வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

தன் அருகே இருந்த மருத்துவரைப் பார்த்த அரசன், ''இந்தக் குதிரை நான் சவாரி செய்வதற்கு ஏற்றதா? ஆராய்ந்து சொல்'' என்றான்.

மருத்துவர் குதிரையின் அருகே சென்றார். தம் கைகளால் குதிரையின் உடல் முழுதும் நன்கு தடவிப் பார்த்தார். கொஞ்ச நேரம் சிந்தனையில் மூழ்கினார்.

''அரசே! இந்தக் குதிரை நீண்ட ஓட்டத்திற்கோ அல்லது போருக்கோ பயன்படாது. இது குட்டியாக இருந்தபோதே, தூக்கிச் சென்றயாரோ தவறுதலாகக் கீழே போட்டிருக்கிறார்கள். அதனால், இதன் குளம்பு வழக்கத்தை விட, அதிகமாக பிளவு பட்டுவிட்டது. இதுவரை இந்தக் குதிரை குளம்பு உடைந்து நொண்டி ஆகாமல் இருந்ததே பெரிய ஆச்சரியம்! இனி எப்பொழுது வேண்டுமானாலும் இது நொண்டி ஆகி விடலாம்'' என்றார்.

அதிர்ச்சி அடைந்த அரசன் அரண்

மனை வைத்தியரை அழைத்து, அந்தக் குதிரையை நன்கு சோதிக்குமாறு கட்டளை இட்டான்.

வைத்தியரும், ''குதிரையைப் பற்றி இவர் சொன்னது அனைத்தும் உண்மை தான்'' என்று கருத்துத் தெரிவித்தார்.

அரசன் மருத்துவரைப் பார்த்து, ''எப்படிக் குதிரை விரைவில் நொண்டி ஆகும் என்று நீ கண்டு பிடித்தாய்?'' என்று கேட்டான்.

''அரசே! குதிரையை நான் தடவிக் கொண்டு வருகையில் ஒரு காலில் உள்ள இரண்டு குளம்புகளுக்கு இடையே உள்ள இடைவெளி வழக்கத்தை விடப் பெரிதாக இருந்தது. அதை நன்கு தடவிப் பார்க்கையில் எலும்பில் விரிசல் இருப்பது என் கைகளுக்குத் தட்டுப் பட்டது. அதனால்தான் இந்தக் குதிரை விரைவில் நொண்டி ஆகும் என்றேன்'' என்றார் மருத்துவர்.

வியப்பு அடைந்த அரசன், ''உன் அறிவிற்கு ஈடு இணை யே இல்லை! இனி நீ அரண்மனையில் வேண்டிய அளவு சாப்பிடலாம்'' என்றான்.

சில நாட்கள் கழிந்தன. அரசனுக்குத் திடீரென்று தன் பரம்பரைப் பெருமையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. உடனே, தன் அருகே இருந்த மருத்துவரைப் பார்த்து, ''என் தந்தை எப்படிப் பட்டவர்? சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''அரசே! இதற்கான பதிலை நான் இங்கு எல்லோருடைய முன்னிலையிலும் சொல்ல விரும்பவில்லை. தனியே தங்களிடம் கூறுகிறேன்'' என்றார் மருத்துவர்.

கோபம் கொண்ட அரசன் அவரைத் தனியாகத் தன் அறைக்கு அழைத்து, ''இப்போது சொல்'' என்று கத்தினான்.

''கோபப்படாதீர்கள்! அரசே! நான் சொல்வது முற்றிலும் உண்மை. உங்கள் தந்தையார் ஒரு சமையல்காரர். இதில் உங்களுக்கு ஐயம் இருக்குமானால், உங்கள் தாயாரைக் கேளுங்கள்'' என்றார் மருத்துவர்.

இதைக் கேட்டதும் அரசனின் உள்ளத்தில் கோபமும் அவமானமும் ஒருங்கே எழுந்தன. இந்தக் குருடன் சொல்வது உண்மையாக இருந்தாலும் இருக்கலாம்!' என்ற எண்ணமும் எழுந்தது.

எப்படியும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துத் தன் தாயாரிடம் சென்றான். ''அம்மா! அரண்மனையில் ஒரு குருடன் இருக்கிறான். அவன் சிறந்த அறிவாளி'' என்று ஆரம்பித்து நடந்ததை எல்லாம் சொல்லி, அவன் என்னைச் 'சமையல்காரன் மகன்' என்று சொல்கிறான். இது உண்மையா?'' என்று கேட்டான்.

உண்மையைத் தன் மகனிடம் மறைக்க முடியாது என்பதை அந்தத் தாய் உணர்ந்தாள். மகனே! இது வரை யாருக்குமே தெரியாத ரகசியத்தை நான் இப்பொழுது உன்னிடம் சொல்கிறேன். உன் தந்தை பக்கத்து நாட்டில் சமையல்காரராக வேலை பார்த்து வந்தார். நான் அவர் மனைவி. பிழைப்புத் தேடி இருவரும் இந்த நாட்டிற்கு வந்தோம். நாங்கள் வந்த அன்று இந்நாட்டு அரசன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டான். மக்கள் புதிய அரசனைத் தேர்ந்தெடுப்பதற்காக யானையின் கையில் மாலையைக் கொடுத்து அனுப்பினார்கள். அந்த யானை உன் தந்தையின் கழுத்தில் மாலை இட்டது. அவர் உடனே, அரசரானார்! 'தான் சமையல்காரன் என்பது மக்களுக்குத் தெரிந்தால், அரசனாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நினைத்தார் உன் தந்தை. அதனால்தான் அரச பரம்பரையில் வந்தவன் என்று எல்லோரிடமும் பொய் சொன்னார். இதை அனைவரும் நம்பிவிட்டனர். இதுதான் நடந்தது'' என்று விளக்கமாகக் கூறினாள்.

இதைக் கேட்டு மனம் வருந்திய அரசன் நேராக மருத்துவரிடம் வந்தான். ''உன் அறிவிற்கு எல்லையே இல்லை. எப்படி நான் சமையல்காரனுக்குப் பிறந்தவன் என்பதைக் கண்டு பிடித்தாய்?'' என்று கேட்டான்.

அவர் தாம் கண்டு பிடித்த வழிமுறைகளை அரசன் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் விளக்கமாகச் சொன்னார்.

எப்படி அவர் கண்டுபிடித்து இருப்பார்?

(விடை: 56-ஆம் பக்கம்)



சிரிப்புப் பஞ்சம்!



உலகத்தில் பிரான்சு நாட்டில்தான் சிரிப்பவர்கள் மிகவும் குறைவு என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அங்கே இந்த ஆண்டில் எடுத்த கணக்கின்படி 100க்கு 8 பேர்கள் மட்டும்தான் நாள் ஒன்றுக்கு 5 நிமிடங்களுக்கு மேல் சிரிக்கிறார்களாம். 100க்கு 24 பேர்கள் ஒரு நிமிடத்திற்கு மேல் சிரிப்பது இல்லையாம். 100க்கு 7 பேர்கள் எப்போதுமே சிரிப்பது இல்லையாம்!


தாமரைச் செடியில் எரிவாயு!

குளிர்தாமரைச் செடி என்பது ஏரிகளிலும் குளம் குட்டைகளிலும் நீரின்மேல் மிதந்தபடியே வளரக் கூடியது. இந்தச் செடியின் மூலம் எரிவாயு தயாரிக்கலாம் என்று நம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு கிலோ குளிர்தாமரைச் செடியிலிருந்து சுமார் 27 லிட்டர் எரிவாயு உற்பத்தி செய்யலாம். இந்தச் செடியைக் காய வைத்து ஒரு கிலோ எடுத்துக் கொண்டால் கூடுதலாகவே வாயு கிடைக்குமாம். 9 சதுர மீட்டர் பரப்பில் வளரும் செடிகளிலிருந்து 1000 லிட்டர் எரிவாயு கிடைக்கும். பரோடாவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.



தவளைக்குத் தடை!

நம் நாட்டிலிருந்து தவளைகளைக் கொன்று வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறார்கள். தவளைக் கால் சாப்பிட மிகவும் ருசியாக இருக்குமாம்! நெல் பயிருக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளைத் தவளைகள் தின்கின்றன; பயிர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. தவளைகள் கொல்லப்படுவதால், பூச்சிகள் அழிக்கப்படாமல் பயிர் சேதமடைகிறது. அதனால் தவளைகளைக் கொன்று வெளிநாடுகளுக்கு அனுப்புவதைத் தடை செய்யவேண்டும் என்கிறது இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில்.




நடை பழகினார்!



அண்மையில், 4 மாத காலம், பூமியைச் சுற்றும் ரஷ்ய விண்வெளி நிலையத்தில் வசித்த ரஷ்ய விஞ்ஞானி விளாடிமிர் டிஸனிபெகாவ் பூமிக்கு வந்தார். பூமிக்கு வந்ததும் தெருக்களில் நடந்து பழகினார். ஏன் இப்படி? விண்வெளியில் 4 மாத காலம் சுற்றிய போது மனிதனின் எடை, புவி ஈர்ப்பு இல்லாமல் எடையற்று மிதப்பது போல் இருக்கும். பூமிக்கு வந்ததும் இங்குள்ள புவி ஈர்ப்பில் நடப்பது சிரமமாக இருக்கும்!

முதலை இல்லா நாடு!

பாகிஸ்தானில் முதலைகள் இல்லை. அதனால் அங்கே உள்ள குழந்தைகள் முதலைகளைப் பார்ப்பதற்காக முதலைப் பண்ணை ஏற்படுத்தப் போகிறார்கள். அதற்காக நம் நாட்டிலிருந்து ரூ. 5 லட்சத்துக்கு முதலைகளைத் தருவிக்க பாகிஸ்தான் முடிவு செய்திருக்கிறது!




கொம்பு வேட்டை!



ஆப்பிரிக்காவில் மட்டுமே உள்ள — மிகக் குறைந்த அளவில் உள்ள — கறுப்பு இன காண்டாமிருகங்களை அவற்றின் கொம்புக்காகவே பெருமளவில் வேட்டையாடி விடுகிறார்கள். விரைவில் அந்த இனமே அழிந்துவிடும் அபாயம் இருக்கிறது. அதனால் ஆப்பிரிக்காவில், ஜிம்பாப்வே நாடு, அந்த மிருகங்களை வேட்டையாடுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கிறது.

வேட்டையாடக் குழு!

கழுதைப் புலி, பெரும்பாலும் மற்ற மிருகங்கள் கொன்று தின்றது போக மிச்சத்தைத்தான் தின்னும். அதுவாகவே சென்று வேட்டையாடாது. ஆனால், அனந்தப்பூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 14 குழந்தைகளைச் சில கழுதைப் புலிகள் கொன்றுவிட்டன. அந்தக் கழுதைப்புலிகளை வேட்டையாட நான்கு பேர்கள் கொண்ட ஒரு குழு அமர்த்தப்பட்டது. குழுவினர் இரண்டு நாட்கள் தேடி ஒரு கழுதைப்புலியைக் கொன்றனர். அவர்களுக்கு ரூ. 1116 பரிசளிக்கப்பட்டது.



— ஆழி.

வளையும் பயிர்



அந்தப் பெண்ணுக்குப் பதினோரு வயதுதான் இருக்கும். சென்னை வானொலி நிலையத்தில் 'சிறுவர் சோலை' நிகழ்ச்சிக்காக வீரபாண்டிய கட்ட பொம்மனாக, ஜான்சன் துரையாக அந்தச் சிறுமியே தன் குரலை மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருந்தாள்.

இதைக் கேட்ட வானொலி அண்ணாவுக்கு ஒரே வியப்பு. சிறுமியாக இருந்தாலும் வீரபாண்டிய கட்டபொம்மன், ஜான்சன் துரை போல் சிறப்பாக பேசுகிறாளே என்று.

இந்நிகழ்ச்சி முடிந்ததும் வானொலி அண்ணாவும், நிலைய அதிகாரியும் நாடகக் கலைஞர்களும் அவளைக் கண்டு 'இந்தச் சின்ன வயதில் இது மாதிரி குரலை மாற்றி, கணீரென்று பேசிய சிறுமியை இதுவரை நாங்கள் பார்த்ததில்லை. வரப்பிரசாதமாக இறைவன் உனக்கு இனிய குரல் வளத்தைத் தந்திருக்கிறான்' என்றுகூறி அன்பு ததும்ப அரவணைத்துக் கொண்டார்கள்.

'இத்தகைய பாராட்டைப் பெற்ற குழந்தை யார்'?

சென்னை 'ஆதர்ஷ் வித்யாலயா மெட்ரிகுலேஷன்' ஹையர் பள்ளியில் எட்டாவது படிக்கிற மிருணாளினி தான்.

பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பல பரிசுகளை மிருணாளினி பெற்றிருக்கிற மாதிரி நீச்சல், அதெலெடிக் விளையாட்டிலும் பங்கு கொண்டு தங்கப் பதக்கத்தைப் பெற்றிருக்கிறாள்.

ஆதர்ஷ் வித்யாலயா பள்ளியில் ஐந்தாவது வகுப்பிலிருந்து, ஏழாவது வகுப்புவரை தொடர்ச்சியாக அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவி மிருணாளினிதான். இதற்காக 201 ரூபாய் ரொக்கப் பரிசு இவளுக்கு இருமுறை கிடைத்திருக்கிறது.

ஆசிய அளவில் நீச்சலில் சாதனை புரிய வேண்டுமென்பது மிருணாளினியின் ஆசையாம்!

—மு. சிவாஜி.

டாக்டர் பக்கம்



சொறி சிரங்கு

டாக்டர் கு. கணேசன், M.B.,B.S

பள்ளி செல்லும் குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கக்கூடிய நோய் 'சொறி சிரங்கு' என்றழைக்கப்படும் தொற்று நோய். இதை ஆங்கிலத்தில் SCABIES என்கிறார்கள்.

கிராமப்புறத்திலும், நகர்ப்புறச் சேரிகள், சாக்கடை நிறைந்த இடங்கள், சுகாதாரக் குறைவான இடங்கள் ஆகியவற்றிலும் வசிக்கும் குழந்தைகளை இந்நோய் அதிகம் பாதிக்கிறது.

சொறி சிரங்கு உஷ்ணத்தாலோ, துர் நீராலோ வருவது இல்லை; 'சார்கோப்டிஸ் ஸ்கேபி' (Sarcoptes scabiei) என்ற பூச்சி வகைக் கிருமியால் தான் வருகிறது. இவ்வகைக் கிருமிகள் சுகாதாரக் குறைவான இடங்களில் அதிகம் காணப்படுகின்றன.

இவை நம் உடலில் அழுக்குப்படிந்த இடங்களில் அமர்ந்து அழுக்கைச் சுரண்டும்போது தோலில் சிறு பள்ளம் தோண்டி முட்டைகளை இடுகின்றன. அம்முட்டைகளிலிருந்து 24 மணி நேரத்திற்குள் பல்லாயிரக்கணக்கான 'லார்வா'க் குட்டிகள் வெளிவந்து, தோலில் கொப்புளங்களை உண்டாக்குகின்றன.

இந்த லார்வாக்கள் தோலில் அரிப்பை ஏற்படுத்தும் தன்மையுடையவை. குறிப்பாக இரவு நேரங்களில் இவை மிகவும் சுறுசுறுப்பாக இருந்து அதிக அளவில் அரிப்பை ஏற்படுத்தும். எனவே, சொறி சிரங்கின் முதல் அறிகுறியாக உடலில் பல பாகங்களில் அரிப்பு உண்டாகும்.

இந்த அரிப்பைத் தாங்காத நமது விரல்கள் தூக்கத்தில் நன்கு சொறிந்து விடுகின்றன. இதனால் நகங்களுக்கிடையே இருக்கும் சில பாக்டீரியாக் கிருமிகள் இந்தக் கொப்புளங்களில் சேர்ந்து, சீழ் பிடிக்கும். அக்குள், தொடைப்பகுதிகளுள் நெறி கட்டும். பிறகு காய்ச்சல் வரும்.

பெரும்பாலும் 'சொறி சிரங்கு' தோலின் மென்மையான பகுதிகளைத் தான் பாதிக்கும். உதாரணமாக, விரல்களுக்கு இடையில், மணிக்கட்டு, முழங்கை, அக்குள், தொப்புளைச் சுற்றி, இருப்பிடப்பகுதி, பிறப்புறுப்புப் பகுதிகள் ஆகியவற்றில் அரிப்புடன் கூடிய சின்னச் சின்னக் கொப்புளங்கள் வெடிக்கும். அவற்றில் சீழ் பிடிக்கும். இதன் மூலம் மற்றவர்களுக்கும் நோய் பரவிவிடும்.

இந்தச் சமயத்தில் முறையாக வைத்தியம் பார்க்காமல் அலட்சியப்படுத்தி விட்டால், நோய்க்கிருமிகள் இரத்தத்தில் கலந்து சிறுநீரகத்தைப் (Kidney) பாதிக்கும். இதனால் முகம், கை கால்கள் எல்லாம் வீங்கி சிறுநீர் வெளியேறுவதில் சிரமத்தைக் கொடுக்கும். இதற்கு Acute Glomerulonephritis என்று பெயர். இந்நோயால் உயிருக்கே கூட ஆபத்து வரலாம்.

எனவே சொறி சிரங்கை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த வேண்டியது மிக மிக அவசியம்.

— தோலில் சிறு கொப்புளங்கள் வெளிப்பட்ட முதல் நாளே வெந்நீரால் கழுவி, சுத்தமான துணியால் துடைத்துவிட வேண்டும்.

— கொபபுளங்களில் சீழ்பிடித்து காய்ச்சல் வந்துவிட்டால் மருத்துவரிடம் காட்டி அவர் கூறும் மருந்துகளைச் சோதனை செய்தபின்னர் உபயோகிக்கலாம்.

—நோயாளிக்கு மட்டும் வைத்தியம் பார்ப்பதால் இந்நோயை அறவே ஒழிக்க இயலாது. குடும்பத்தில் அனைவருக்குமே ஒரே சமயத்தில் வைத்தியம் செய்ய வேண்டும்.

—மாணவர்களுக்கு இந்நோய் வந்துவிட்டால் குறைந்தது ஒரு வாரம் பள்ளிக்குவிடுமுறை கோரி மேற்கூறிய மருத்துவத்தைப் பின்பற்ற வேண்டும். அதன் பின்னர் கூட ஒரு சில மாதங்களுக்கு, வகுப்பில் ஒதுங்கித் தனியே உட்கார்ந்து கொள்ள வேண்டும். இதனால் மற்ற மாணவர்களுக்குப் பரவுவதைத் தடுத்துவிடலாம்.

—பாதிக்கப்பட்ட நோயாளி பயன்படுத்திய துணிமணிகளை வெந்நீரில் ஊறவைத்துச் சோப்புப் போட வேண்டும்.

—மாணவர்விடுதிகளில்இந்நோய் அதிகம் காணப்படுவதால், விடுதியில் யாரேனும் ஒருவருக்கு சிரங்கு வந்துவிட்டால்கூட முன்னெச்சரிக்கையாக விடுதி மாணவர்கள் அனைவருமே தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

— இது மட்டுமல்ல; உங்களையும் உங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

பாரதி புதிர்-6 விடை

காலா, உனைநான் சிறு புல்லென மதிக்கிறேன் — என்றன்
கால்அருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்.

(பாட்டு: காலனுக்கு உரைத்தல்)

துள்ளல் இசை கேட்டால் நல்ல செவி போகும்

துள்ளல் இசையில் (ராக் மியூசிக்) இன்றைய இளைஞர்களுக்குஒரே மயக்கம். அந்த இசையின் கவர்ச்சியில் தம்மை மறந்து ஆடத் தொடங்கி விடுவார்கள். இளைஞர்களுக்குக்கிளர்ச்சியூட்டும் இந்த இசை செவிப்புலனை இழக்கச் செய்கிறது என்று அறியப்படுகிறது. இது ஜப்பானிய டாக்டர்கள் இதனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நன்றி: தமிழ்நேசன்.
தகவல்: நீரை அத்திப் பூ.



புதிர்க்கதை-6 விடை

"அரசே! நான் முத்திற்குள் புழு இருப்பதைச் சொல்லி அது பயனற்றது என்றேன். இதைக் கேட்ட நீங்கள் எனக்கு அளவு சாப்பாட்டைப் பரிசாக வழங்கினீர்கள். பொதுவாக அரசர்கள் இப்படிப்பட்ட சமயத்தில் விலை மதிப்பற்ற பொருளை எனக்கு வாரி வழங்கி இருப்பார்கள்!

"இரண்டாம்முறை குதிரை விரைவில் நொண்டி ஆகும் என்றேன். அப்பொழுது நீங்கள், நான் இனி அளவின்றிச் சாப்பிடலாம் என்று சலுகை தந்தீர்கள்.

"உங்கள் எண்ணம், சிந்தனை அனைத்தும் சமையல்காரருடையதாக இருந்ததே அன்றி, அரசருடையதாக இல்லை. அதனால் உங்கள் தந்தை சமையல்காரராகத்தான் இருந்திருக்க வேண்டும் என்றேன்" என்று சொன்னார் பருந்துவர்.



அக்னி பூதம்

தங்கமணி

1 துணிச்சல் துள்ளி விளையாடுகிறது

அந்தப் புகைவண்டி நிலையத்தின் தென்மேற்குத் திசையில் வயல் வெளிகள், சதுப்பு நிலங்கள், செம் பாறைக் குன்றுகள், காடு, மேடு, தோப்புத் துறவுகள் எனப் பத்துப் பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் —

ஒரு சின்னஞ்சிறு ஊரும், சேரியும் சேர்ந்து காணும் கிராமத்தின் பெயர்: தமிழோங்கிபுரம்.

தமிழோங்கிபுரத்திற்குத் தெற்குத் திசையிலே, ஒரு தாமரைக் குளம். அந்தத் தாமரைக் குளக் கரையிலே, ஒரு பிள்ளையார் கோயில். அந்தக் கோயிலைச் சுற்றிச் சூழ்ந்து அரச மரங்களும், ஆல மரங்களும் வானளாவ ஓங்கி உயர்ந்து நெருக்கமாக வளர்ந்திருந்தன. அம்மரங்களுக்கிடையில் —

பொந்தாக் கோழிகளுக்கு நடுவில், ஒரு வான் கோழி மாதிரி, — வெள்ளாட்டு மந்தைக்கு மத்தியில், ஒரு புள்ளி மான் மாதிரி — கட்டுரை நூல்களுக்கு இடையில், ஒரு கதைப் புத்தகம் மாதிரி —

பருத்துப் பெருத்துப் பரந்து விரிந்து பூவும் பிஞ்சும், காயும் கனியுமாய்க் காட்சியளித்தது, ஒரு மாமரம்! அந்த மாமரத்திற்கு அருகிலே ஒரு பாறாங்கல். அந்தக் கல்லின் மேல், நாலைந்து அம்புகள் செருகிய மான் தோல் பையும், ஒரு வில்லும் வைக்கப்பட்டிருந்தன.

பாறாங்கல்லுக்கு அடியில், மண்ணில் முழங்கால்களை மடக்கி முட்டிக் காலிட்டு உட்கார்ந்து, கையிலுள்ள உண்டி வில்லை மரத்தை நோக்கி நீட்டி, இடது கண்ணை மூடியவாறு வலது கண்ணால் கூர்ந்து குறி பார்த்துக் கொண்டிருந்தான், ஒரு பையன். காட்டுக்குள் வாழும் வேடுவச் சிறுவன்.

அவனது குறி...

அவனது நோக்கு...

மரக் கிளைகளில் தத்தித் தாவிக் கீச் கீச்சென்க் கூவித் திரியும் குருவிகளின் மீதா...? அல்லது, அங்கும் இங்கும் இலைகளுக்கு மறைவில் கொத்துக் கொத்தாக ஊஞ்சலாடும் மாங்...

மறு விநாடி —

விஷ்ஷ்ச்...!

வேடுவச் சிறுவனின் உண்டி வில்லிலிருந்து பாய்ந்த கூழாங்கல், குறி வைத்த இடம் பிசகாமல் படாரெனத் தாக்கியது!

அடுத்த நொடி —

மரத்திலிருந்து சளபொளவென விழுந்தன —

குருவிகளா...?

அல்ல —

மாங்காய்கள்...!

மாங்காய்கள் விழுந்த நொடியே —

"சப்ப்... பாஷ்டா வால்மீகி...!" என்த் திடீரெனப் பாராட்டிக் கூவிக் கொண்டே தாவிப் பாய்ந்தான்; செம் மண்ணில் விழுந்து கிடக்கிற மாங்காய்

களை எடுத்துக் கொண்டு திரும்பினான் ஆதி. "டே, வால்மீகி... குறி தப்பாமல் அடிப்பதிலே உனக்கு ஈடானவன் நீதாண்டா..." என மகிழ்ச்சியுடன் சொல்லியவாறே, அந்த வேடுவச் சிறுவன் வால்மீகியை அணுகினான்.

அவனைக் கண்டதும்—

பத்துப் பதினைந்து நாட்களாக ஓயாமல் பொழிந்த மழைக்குப் பிறகு, வெளுத்த வானத்தில் பிரகாசமாய்த் தோன்றிய நிலாவைப் பார்க்கிற மாதிரி—

வியப்புடன் பார்த்தான். பார்த்தவாறே, "என்னடா ஆதி... பட்டணத்திலிருந்து தமிழோங்கிபுரத்திற்கு என்றைக்கு வந்தாய்...? பள்ளிக்கூடத்தில் ஏதேனும் விடுமுறையா...? அல்லது... உங்கள் வீட்டில் என்னவாவது விசேஷமா...?" என்று புன்சிரிப்பும் சந்தோஷமுமாகக் கேட்டான், வால்மீகி.

வில்லும், அம்பும் வைத்திருந்த பாறாங்கல்லின் மீது ஏறி உட்கார்ந்தான் ஆதி. கையிலிருக்கிற மாங்காய்





கலைக் கல்லின்மேல் வைத்தவாறே சொன்னான்: "பட்டணம் முழுவதும் ஒரே அமர்க்களமாயிருக்கிறது! பள்ளிக்கூடங்களில் படிக்கிற சிறுவர்களும், கல்லூரிகளில் படிக்கிற இளைஞர்களும் என்னவோ கோரிக்கை, ஏதோ போராட்டம் என்று நகரத்தையே அநாகரீகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்! இந்த அநியாய அக்கிரமங்களில், நானும் கற்கிற கல்வியை அவமதித்துக் காட்டுமிராண்டியாக நடந்து கொள்ளக் கூடாதே! — என்பதற்காக, என் அப்பா என்னைத் தமிழோங்கிபுரத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். நான் இங்கே வந்து நான்கு நாட்களாகின்றன. ஊருக்கு வந்த அன்று, அலுப்பும் களைப்புமாகத் தூங்கினேன். அடுத்த நாள் என் மாமா, அக்கா, நான் எல்லோரும் மஞ்சைப் பட்டியிலுள்ள முருகன் கோவிலில்



நிகழ்ந்த திருவிழாவுக்குப் போய் வந்தோம். நேற்று முன்தினம், அமாவாசை. என் தாத்தா, மாமா, அக்கா எல்லோரும் என்னை வீட்டை விட்டு வெளியே போக அனுமதிக்கவே இல்லை. ஏன் என்று கேட்டால்... ஏதோ பூதம் வரும், பிசாசு வரும் என்று சொல்லிப் பயமுறுத்தி, என்னை வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்து விட்டார்கள்! ஏண்டா, வால்மீகி... பூதம், பிசாசு என்று ஏதேதோ உளறுகிறார்களே, அதென்னடா பேச்சு...?''

வால்மீகி, ஆச்சரியத்துடன் ஆதியைப் பார்த்தான். ''கப்சாவோ, கற்பனையோ? அதைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதா...?'' எனக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான்.

''தமிழோங்கிபுரத்திற்கு எத்தனையோ தடவை வந்து போயிருக்கிறேன். ஆனால்... இந்தப் பூதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை!'' என்றான், ஆதி.

''அப்படியா...?'' என்றான், வால்மீகி.

''ஆமாம்... அதென்ன பூதம்...?'' துருவினான், ஆதி.

''அது ஒரு திகில் கதை...!'' எனச் சிரித்தவாறே சொன்னான், வால்மீகி.

''திகில் கதையா...?''

''க்கும்... அதோ பார்...'' மேற்குத் திசையில் கையை நீட்டிக் காட்டினான், வால்மீகி. அவன் பூதத்தைத்தான் காட்டுகிறானோ என்கிற பரபரப்புடன் சுருக்கமாகத் திரும்பிப் பார்த்தான், ஆதி.

''அதோ... தோ... வெகு தூரத்திலே... அடி வானத்திலே கருமேகங்கள் மாதிரி தெரிகிறதே... அது ஒரு மலை. அந்த அக்கினி மலையில்... அமாவாசைக் கருக்கிருளில் குபீர் குபீரெனக் குமுறிக் கொப்புளிக்கிற பேராக்கினியைப் பார்த்தால்...''

''பார்த்தால் என்னடா...?'' வால்மீகியை ஆவலுடன் வினவினான், ஆதி. அவனது உள்ளம், பல்லியின் வாயில் சிக்கியசயின் இறக்கைகளாய்ச் சிலிர்த்தது.

மறு நொடி —

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்தான், இரு தோள்களிலும் மாட்டிக் கொண்டிருக்கிற நார்க் கயிற்றுச் சுருணைகளைக் கழற்றினான்; பாறையின் மீது வைத்து விட்டு, களைப்புடன் நெடுமூச்செறிந்த பிறகு, வீராயி சொன்னான்: ''அமாவாசைப் பேயிருளில் அந்த அக்கினி பூதத்தின் அக்கினிக் குமுறலைப் பார்த்தவன், உயிர் பிழைத்துப் போனதாகத் தகவலே கிடையாது! மூக்கிலும் வாயிலும் ரத்தமாய்க் கொப்புளித்து...''

மேலும் சொல்வதற்குள் —

''ஓ... ஹொய்... ஓ... ஹொய்... பல்லக்குத் தூக்கிகள் போடும் கூக்குரல் மாதிரி எழும்பிய சப்தத்தைக் கேட்டதும், எல்லோரும் திரும்பிக் கவனித்தார்கள்.

அருகிலுள்ள சவுக்குத் தோப்புக்குள்ளிருந்து வந்தான்; மேல் துண்டு மாதிரி, கொழுத்துப் பருத்த ஒரு பெரிய ஆட்டுக் கடாவைத் தோளில் சுமந்து கொண்டு, ''ஓ... ஹொய்... ஓ... ஹொய்...'' என மூச்சுத் திணறக் கூவியவாறே வந்தான்; மாமரத்தின் நிழலுக்கு வந்ததும், குனிந்தான். தோளில் துவண்டு கிடக்கிற ஆட்டுக் கடாவை மெதுவாகச் சாய்த்து இறக்கி மண்ணில் கிடத்திவிட்டு, நிமிர்ந்தான்; அலுப்பும் களைப்புமாக, ''ஹம்ம்...



கைதான காரணம்?

''நம்ம ஊரிலே 'போலியோ' நோய்க்கு மருந்து கொடுத்த டாக்டரைக் கைது செய்திட்டாங்களாம்.''

''ஏன்?''

''அவர் கொடுத்த மருந்து எல்லாமே போலியாம்!''

—எஸ். மாரியப்பன்.

ம்மா...!'' எனப் பெருமூச்செறிந்தான்; பாறாங்கல்லுக்குப் பக்கத்தில் பதுமைகளாக நிற்கிற தனது நண்பர்களைப் பார்த்தான், பீமன்.

வால்மீகி...

ஆதி...

வீராயி...

''என்னை முழிக்க முழிக்கப் பார்க்கிறீர்களே... என்ன சமாச்சாரம்...?'' எனப் புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டே போனான். பாறாங்கல்லின் மீது கிடக்கிற மாங்காய்களுக்குள் ஒன்றை எடுத்தான்; கடித்தான். கடக் முடக்கென்று மென்று சுவைத்துப் புளிப்பைத் தாங்காமல் முகத்தைச் சுளித்தான், பீமன்.

பீமனைப் பார்த்துக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான், ஆதி: ''நாங்கள் எல்லோரும் உன்னை எதற்காக முழித்து முழித்துப் பார்த்தோம், தெரியுமா..?''

''எதற்காக...?''

''பதினைந்து வயசுப் பையன், பதினைந்து பதினாறு கிலோ எடையுள்ள ஆட்டுக் கடாவைப் பஞ்சு மூட்டையாட்டம் அனாயாசமாகத் தூக்கி வந்...'' சொல்லி முடிக்காமல் குலுங்கிச் சிரித்தான், ஆதி.

''இது ஒன்றும் அதிசயம் இல்லை. மாவுக்குத் தகுந்த பணியாரம் — என்பார்களே, அந்த மாதிரி... காலையில் புளிப்புத் தயிர் ஊற்றிய ஒரு பானைக் கஞ்சி, அப்புறம்... காட்டுப் பக்கத்தில் கண்ணில் படுகிற காய்கள், கனிகள், கிழங்குகள்... அதற்கப்புறம்... வந்து... இரவுச் சாப்பாடாக ஒரு சட்டிச் சோறு — ஹ! இந்த பீமன் ஆட்டுக் கடாவை மட்டுமல்ல; மாட்டுக் கடாவையே மூட்டை கட்டித் தூக்கிவிடுவான்!'' எனக் குறும்பாகச் சொல்லிச் சிரித்தான், வீராயி.

பீமனுக்குப் புஸ்ஸெனச் சீறியது, கோபம்! கடித்த மாங்காயை வெறுப்புடன் தூர எறிந்துவிட்டு, வீராயியை முறையைப் பார்த்து என்னவோ சொல்லுவதற்குள் —

வால்மீகி குறுக்கிட்டான்: ''ஏண்டா, பீமா... இந்த ஆட்டுக் கடாவை நடக்க வைத்து அழைத்து வராமல், தோளில் எதற்காகத் தூக்கி வந்தாய்...?''


பீமன் கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னான்: ''காட்டுக்குள் ஆடு மேய்க்கிற என் தாத்தாவுக்குக் கஞ்சி கொண்டு போனேன். அங்கே போனால்... இந்தக் கொழுப்பேறிய ஆடு, மணல் மேட்டிலிருந்து துள்ளிப் பாய்ந்து விழுந்து, முன்னங்காலை முறித்துக் கொண்டு கிடக்கிறது! 'கால் முறிந்து கிடக்கிற இந்தக் கடாவை வீட்டுக்குத் தூக்கிப் போ' — என்றார். தூக்கிக் கொண்டு வந்தேன்...''

மறு நொடியே —

வால்மீகி பரபரப்புடன் தாவினான்; செம்மண்ணில் கிடக்கிற ஆட்டுக் கடாவை அணுகிப் பார்த்தான். ஆட்டுக் கடாவின் இடது முன்னங்கால், முழங்கால் முறிந்து எலும்பு துருத்திக் கொண்டு...

அடுத்த நொடி —

''பீமா... சற்று நேரம் பொறு...'' என்று சொல்லிக்கொண்டே வால்மீகி வேகமாக ஓடினான்; அருகிலுள்ள தாமரைக் குளக்கரைக்குப் போனான்; அங்கும் இங்குமாய்க் கொத்துக் கொத்தாக வளர்ந்திருக்கிற பூண்டுச் செடிகளுக்கிடையில், என்னவோ ஒரு பச்சிலைச் செடியைத் தேடினான்... தேடினான்... பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள்... ''ஆ! இதோ...'' எனக் கூவியவாறே தாவினான்; கூழாங்கற்களுக்கிடையில், சிவப்பும் பச்சையுமாக வளர்ந்திருக்கிற பச்சிலைச் செடியிலிருந்து, ஒரு கையளவு இலைகளைப் பறித்துக் கொண்டு, ஓடோடி வந்தான்; பரிதாபமாக விழுந்து கிடக்கிற ஆட்டுக் கடாவை அணுகி உட்கார்ந்தான்; பச்சிலைகளை மடியில் வைத்துக் கொண்டான்; ஆட்டுக் கடாவின் முறிந்திருக்கிற முழங்காலை, மெல்ல இழுத்துப் பையப் புரட்டி ஒழுங்குபடுத்தினான். ஆட்டுக் கடா, வலி தாங்காமல் தவித்தது. 'ம்மே...! ம்மே...!' எனத் தீனமாகக் கத்தியது. உடனே, பரபரப்பும் சுறுசுறுப்புமாகப் பச்சிலைக்களை எடுத்தான், வால்மீகி. உள்ளங்கையில் வைத்துக் கசக்கினான்; பிழிந்தான்; சாற்றை, ஆட்டுக் கடாவின் ஒடிந்த காலில் ஒழுக விட்டான்; அப்புறம், சாறு பிழிந்த பச்சிலையைக் காலில் வைத்தான்; தலையில் சுற்றியி



பசுவும் கன்றும்

தாய்ப் பசு கன்றின் வயிற்றுப் பகுதியை நக்கிக் கொடுப்பதைப் பார்த்திருப்பீர்கள். இதன் காரணம் என்ன தெரியுமா? தாய்ப்பசு நக்குவதன் மூலம் கன்றின் வயிற்றுப் பகுதியை 'மசாஜ்' செய்கிறது. இதனால் அதன் ஜீரண உறுப்புக்கள் நன்றாக வேலை செய்கின்றன. சிறு குழந்தைக்கு ஜீரணக் கோளாறு ஏற்பட்டால் தாய், அக்குழந்தையின் வயிற்றைத் தடவிக் கொடுக்கிறார்கள் இல்லையா, அம்மாதிரிதான் இதுவும்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

ருந்த சிவப்பு நிற முண்டாசுத் துண்டை அவிழ்த்து, ரிப்பன் அளவுக்கு நீளமாய்க் கிழித்தான்; இறுக்கமாகச் சுற்றிக்கட்டுப்போட்டான். "இன்னும் ஒன்றிரண்டு நாட்களுக்குள் ஆட்டுக் கடாவின் ஒடிந்த கால் எலும்பு ஒட்டிக் கொள்ளும்...!" எனக் குறுஞ்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே, உள்ளங் கைகளைத் தட்டியவாறே எழுந்தான்.

அவன் கனிவும் கரிசனமுமாக ஆட்டுக் கடாவுக்குச் சிகிச்சை செய்ததை, வியப்புடன் விழியகலப் பார்த்திருந்த ஆதி, வீராயி, பீமன் மூவரும் பெருமூச்செறிந்தார்கள்.

"ஏண்டா, வால்மீகி... இப்படியெல்லாம் வைத்தியம் பார்க்கிறதற்கு எப்படிக் கற்றுக் கொண்டாய்...?" என்றான், பீமன்.

"நான் யார் தெரியுமா...?" என்றான், வால்மீகி.

"நீ ஒரு வேடுவப் பையன்..." என்றாள், வீராயி.

"வேடுவப் பையன்தான். ஆனால்... இந்த அக்கினி மலையைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிற இருபத்தாறு கிராமங்களில் வாழும் அத்தனை பேராலும், 'பச்சிலை மூலிகை வைத்தியத்தில் மகா ஞானியான பச்சைப்பாம்புக் கிழவர்!' எனப் பாராட்டிப் பேசப்படுகிறாரே, அந்தப் பச்சைப் பாம்புக் கிழவரை உங்களுக்குத் தெரியுமா...?" எனக் கம்பீரமாகவும் பெருமையாகவும் கேட்டான், வால்மீகி.

"ஓ!... அந்த ஒற்றைக் கண் தாத்தாவை எனக்குத் தெரியுமே! போன வருஷம்... மூங்கில் காட்டுக்குள் என் அப்பாவை ஒரு சாரைப் பாம்பு கொத்திவிட்டது. என் அப்பா, சாவோடு தத்தளித்தார். அந்தச் சமயத்தில், அந்தப் பச்சைப் பாம்புத் தாத்தா வந்து, என் அப்பாவுக்கு மருந்து கொடுத்து உயிரைக் காப்பாற்றினார்..." என்றான், பீமன்.

"அந்தப் பச்சைப் பாம்புக் கிழவர், என் அப்பாவுக்கு அப்பா. அதாவது, என்னுடைய தாத்தா...!" என்று நெஞ்சை நிமிர்த்தியவாறு சொன்னான், வால்மீகி.

"அதாவது... பீமனுக்கு மட்டுமல்ல; மீன் குட்டிக்கும் நீந்தத் தெரியும் என்கிறாய், அப்படித்தானே...?" வால்மீகியைப் பார்த்துப் புன்சிரிப்புடன் கேட்டாள், வீராயி.

உணர்வுகள் குறுகுறுத்தன.

உள்ளம் துருதுருத்தது.

மனத்தின் வேட்கையை அடக்க முடியாமல், ஆசையும் ஆவலுமாகக் கேட்டான், ஆதி: "ஏண்டா, அக்கினி பூதத்தின் கதையை அரைகுறையாக நிறுத்திவிட்டீர்களே...! முழுக்க, விளக்கமாகச் சொல்லுங்களேன்..."

அடுத்த நொடி —

'ஹிஹ்ஹிஹ்ஹி...!' எனப் பெருங் குரலில் குறும்பும் குத்தலுமாக ஓங்கிச் சிரித்தான்; சட்டெனச் சிரிப்பை அடக்கிக் கொண்டான்; "அக்கினி பூதமாவது, வெங்காயமாவது...! அதெல்லாம் ஒரு ஐதீகம்! வைதீகம்! மௌடீகம்! அந்த அக்கினி மலையின் மேலே, அமாவாசை தோறும் அக்கினி குமுறியெரிகிறது! அந்த அக்கினியை மட்டும் பார்த்திருக்கிற ஜனங்கள், அது ஒரு பூதம் என்று கற்பனை செய்துகொண்டு அக்கினி ஆற்றங்கரையில் அமாவாசை தோறும் பொங்கலிட்டுப் பூசித்து வருகிறார்கள்...!" என்று கூறினான், பீமன்.

"பீமா... நீ மட்டுமல்ல, உன் அறிவு

கூட பலம் வாய்ந்ததுதான்...!'' எனப் புன்சிரிப்புடன் சொல்லிய ஆதி, என்னவோ சிந்தனையுடன் கேட்டான்: ''பூதம் என்பது புளுகு, பொய், கற்பனை என்றால்... அந்த மலையின் மீது குறித்த நாளில் — ஒவ்வொரு அமாவாசை இரவிலும் — அக்கினி குமுறி எரிகிறதே, ஏன்...? எப்படி...? எதனால்...?''

''அந்த மலையின் மீது ஏறிப் போய், நேருக்கு நேராகப் பார்த்தால்தானே தெரியும்...!'' என்றான், வால்மீகி.

''எனக்கும் ரொம்ப நாளாக அந்த அக்கினிபூதத்தைநேரடியாகப்பார்க்க வேண்டும் என்று ஆசைதான். ஆனால்...'' வீராயி, மேலும் சொல்லுவதற்குள் —

திடீரென்று ஓர் அலறல்: ''ஆ...! அய்யோ!... ஓ...!''

திடீர் அலறலைக் கேட்டதும் —

வெடிகுண்டுவிழுந்தபூமிமாதிரி —

நெஞ்சம் அதிர்ந்தது!

திடுக்கிட்டுத் திகைத்துத் திகிலும் திணறலுமாகத் திரும்பிப் பார்த்தார்கள்.

அடுத்த நொடி —

''டேய்! டேய்!... ஆதி...! வீராயி...! பீமா...!' எல்லோரும் மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்! மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்...!'' நாகனும், நந்தனும் பயந்து பதறிக் கூவியவாறே பறந்தோடி வந்தார்கள். நாகன், அத்தி மரத்தில் ஏறிக் கொண்டான். நந்தன், அரச மரத்தில் ஏறிக் கொண்டான். இருவரும், மரத்திற்குக் கீழே பிரமித்துத் தவித்து நிற்கிற தமது நண்பர்களைப் பார்த்து, மீண்டும் அலறினார்கள்: ''டேய்! ஆதி! வீராயி! பீமா... ம்... ம்... ஒரு காட்டுப் பிசாசு, ஊரையே துவம்சம் பண்ணிக் கொண்டு வருகிறது! சீக்கிரம்! சீக்கிரம்! மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்...!''

''ஹூம்...! நாங்கள் அக்கினி பூதத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால்... இவர்கள் என்னமோ... காட்டுப் பிசாசு என்று புது கப்சா விடுகிறார்களே...!'' என்று முனகியபடியே, ஊருக்குள் கண்ணை விட்டுத் துழாவினான், ஆதி.

''டேய், பீமா... வா, ஊருக்குள் போய் பார்க்கலாம்... காட்டுப் பிசாவது! கத்தரிக்காய்ப் பிசாசாவது...!'' என்றவாறே பீமனின் கையைப் பற்றி இழுத்தாள், வீராயி.

மறு நொடி —

மூன்றுதெருக்கள் கூடும்முச்சந்தியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பெரியவர்களும் சிறியவர்களும் அஞ்சி அதிர்ந்து ஆளுக்கொரு பக்கமாகச் சிதறியோடினார்கள்...! ஒரு தள்ளாத கிழவி, ஐந்தாறு வயதுச் சிறுமியை இழுத்துக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்குள் தாவி...

தாவித் தஞ்சமாவதற்குள்...

'டகார்!...' என்று முட்டி மோதித் தூக்கியெறிந்துவிட்டு, 'ஹூம் ஹூம் ஹூம்ம்ம்...!' எனப் பயங்கரமாக உறுமியது! உறுமிக் கொண்டே எகிறித் துள்ளிப் பாய்ந்தோடி வந்தது, ஓர் எருது! மழை மேகங்களில் தோய்ந்து வந்தது போல், கன்னங்கரேலெனக் காணும் ஒரு காட்டு எருது...!

அதைக் கண்டதும் —

''டேய், பீமா! ஆதி! வால்மீகி! வீராயி...! மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்! மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்! அந்தக் காட்டுப் பிசாசு நம்மை நோக்கித்தான் ஓடி வருகிறது!'' என்று அத்தி மரக் கிளையில் தொத்திக் கொண்டிருக்கிற நாகன், பித்துப் பிடித்த மாதிரி கத்தினான்.

உடனே —

''போங்கடா, கோழைப் பயல்களா...! அக்கினிக் காட்டுக்குள்ளிருந்து, எப்படியோ அக்கினி ஆற்றைக் கடந்து, ஊருக்குள் வந்து விட்டிருக்கிற காட்டுக்காளையைப்பார்த்து, இப்படிக் கதி கலங்குகிறீர்களே...!'' நாகனையும், நந்தனையும் பார்த்துக் குத்தலாகப் பேசினான், வால்மீகி.

அடுத்த நொடி —

பாறாங் கல்லின் மீது வைத்திருக்கிற கயிற்றுச் சுருணைகளை எடுத்தாள்; ஒரு கயிற்றுச் சுருணையைப் பிரித்தாள்; கயிற்றின் ஒரு முனையில் சுருக்குப் போட்டாள்; அதைப் பீமனிடம் கொடுத்தாள். இன்னொரு கயிற்றில் சுருக்குப் போட்டுக் கொண்டாள் வீராயி, ''பீமா... நீயும், ஆதியும் காட்டெருதுவின் இடது பக்கமாய்ப் போய்... கயிற்றுச் சுருக்கை லாகவமாகச் சுழற்றி வீசிக் காட்டெருதுவின்

கழுத்தில் மாட்டுங்கள்! நானும், வால்மீகியும் வலது பக்கமாகப் போய்..." எனச் சொல்லிக் கொண்டே வால்மீகியுடன் காட்டு எருதை நோக்கிப் பாய்ந்தோடினாள், அவள்.

"நாங்களும் வருகிறோம்..." என்றவாறே மரங்களிலிருந்து, 'தொப், தொப்...'பெனக் குதித்தார்கள். நாகன், பீமனை நோக்கி ஓடினான். நந்தன், வீராயியை நோக்கி ஓடினான்.

நாலைந்து விநாடிகளுக்குள் —

அகன்ற தெருவில் தன்னிச்சையாகத் துள்ளிக்குதிக்கிற காட்டு எருதை நோக்கிச் சுருக்குக் கயிற்றைச் சுழற்றி வீசினான், பீமன்.

'சளக்...!'

குறி தவறவில்லை. பீமன் வீசிய கயிற்றின் சுருக்கு வளையம், காட்டு எருதுவின் கழுத்தில் விழுந்தது. பீமனும், ஆதியும் கயிற்றை இழுத்தார்கள். கழுத்தில் கயிற்றுச் சுருக்கு இறுகியதும், காட்டு எருது துள்ளியது! பீமனையும், ஆதியையும் நோக்கிப் பாய்ந்...

மறுநொடி —

'சரக்...!' வீராயி, ரொம்பச் சுருக்காக வீசிய கயிற்றின் சுருக்கு வளையம், காட்டு எருதுவின் கழுத்தில் விழுந்து இறுகியதும் —

காட்டு எருது உறுமியது! உறுமிக் கொண்டே வீராயியையும், வால்மீகியையும் நோக்கிப் பாய்ந்...

அடுத்த நொடி —

அந்தப் பக்கத்திலிருந்து பீமன், ஆதி, நாகன் மூவரும் கயிற்றைப் பலமாக இழுத்தார்கள்.

இந்தப் பக்கத்திலிருந்து வீராயி, வால்மீகி, நந்தன் மூவரும் இழுத்தார்கள்.

முட்டவும் முடியவில்லை!

மோதவும் முடியவில்லை!

காட்டு எருது ஒரு கணம் விழித்தது...!

அந்தச் சமயத்தில் —

"பீமா! அதோ... அந்தப் புளியமரத்தின் பக்கமாக மாட்டை இழுத்துக் கொண்டு ஓடு! நானும்..." எனக் கூவியவாறே, அருகிலுள்ள வேப்ப மரத்தை நோக்கிக் காட்டு எருதை இழுத்தாள், வீராயி.

வேப்ப மரத்தின் வலதுபுறமாக —

இவர்கள் இழுத்தார்கள்.

வேப்ப மரத்தின் இடதுபுறமாக —

அவர்கள் இழுத்தார்கள்.

சில விநாடிகளில் —

வேப்ப மரத்தில் முகத்தை முட்டிக் கொண்டு, ஆவேசமாகத் துள்ளிக் குதித்துத் தவித்தது, காட்டு எருது! எல்லோரும் சேர்ந்து, அந்தப் பயங்கரக் காட்டுப்பிசாசை வேப்பமரத்தில் இறுக்கிக் கட்டிய பிறகு —

ஊர் ஜனங்கள் திரண்டு வந்தார்கள்.

பார்த்தார்கள்.

திகைத்தார்கள்.

"இளங்கன்று பயம் அறியாது! — என்பார்களே, அது உண்மைதான்!" என்றார், ஒரு கிழவர். "சின்னஞ்சிறு பிள்ளைகள்தாம் என்றாலும், துணிச்சல் மிகுந்த சிங்கக் குட்டிகள்...!" என்றார், இன்னொருவர். "தமிழோங்கிபுரத்துப் பிள்ளைகள் வீரத்திலும், தீரத்திலும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லவே...!" என்றார், மற்றொருவர்.

அடுத்த நிமிஷம் —

நீண்ட மூங்கில் தடுக்கில், வாடி வதங்கிய ஓர் இளைஞனைப் படுக்க வைத்து, இரண்டு பேர் தூக்கி வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால், ஆண்களும் பெண்களுமாக நாலைந்து பேர்கள் கண்ணீரும் கம்பலையுமாக வந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் —

"அந்த இளைஞனுக்கு என்ன...? இந்தக் காட்டு மாடு முட்டிவிட்டதா...?" எனத் திகைப்புடன் கேட்டார், கும்பலில் ஒருவர்.

"இல்லை... அமாவாசை இரவில்... அந்தப் பாழும் அக்கினி பூதத்தைப் பார்த்ததிலிருந்து மூக்கிலும், வாயிலும் ரத்தமாய்க் கொட்டிக் கொண்டிருக்கிறது! ஐயனார் கோயில் பூசாரியிடம் மந்திரித்துக்கொள்வதற்காக..." இளைஞனைத் தூக்கி வந்தவர்களில் ஒருவாலிபன், அழுதவாறு சொல்லிக் கொண்டே நடந்தான்.

இதைக் கேட்டதும் —

ஆதி, வீராயி, பீமன், வால்மீகி, நாகன், நந்தன் எல்லோரும்,

என்னவோ ஒரு திகிலுடன்,

ஒருவரை ஒருவர் பார்த்துப்

பரக்கப் பரக்க முழித்தார்கள்!

முழிக்க முழிக்கத் திணறினார்கள்...!

(தொடரும்)

தலைப்பாகைகளும் தலைவர்களும்

இதோ இங்கு 5 தலைப்பாகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பாகையும் புகழ்பெற்ற ஒரு தலைவருக்கு உரியது. அந்தத் தலைவர்கள் யார், யார் என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்?

—துரை சீனிவாசன்.

(விடை 91-ம் பக்கம்)





மறைந்த மாயம்

சீர்காழி சுவாமிநாதன்

"மாமா போதும்! இனிமே ஒரு அடிகூட என்னால தாங்க முடியாது. பிராணனே போற மாதிரி இருக்கு! நான் அறியாமே ஏதோ என் மனசிலே பட்டதைச் செஞ்சுட்டேன். என்னை மன்னிச்சுடுங்கோ!" மணிகண்டன் துடிதுடித்துப் போனான். அவனுக்கு மிஞ்சிப் போனால் பதின்மூன்று வயது இருக்கும். தலையிலே குடுமி. இடுப்புக்கு மேலே வெறும் உடம்பு. அரையிலே மூன்று முழத்தில் ஒரு துண்டு. மேலே கைகளில், மார்பில் பட்டை பட்டையாகக் குழைத்து இடப்பட்ட விபூதி. கழுத்திலே மெல்லியதாக ஒரு காசிக் கயிறு. கண்களில் ஒரு குறுகுறுப்பு. சுறுசுறுப்பான நடை. இத்தனையும் கொண்டவன்தான் அவன்.

மணிகண்டன் மிகவும் ஏழை. பண்ணையார் மேற்பார்வையில் இருக்கும் விநாயகர் கோயிலில் கடந்த ஆறு மாத காலமாக பூஜை செய்து வருபவன். அதிகாலையிலேயே எழுந்து நீராடி பூ பறித்து, விநாயகருக்கு மாலை கட்டி, பூஜைசாமான்களுடன் நைவேத்தியமாகக் கொடுக்கும் பொங்கலையும் எடுத்துக் கொண்டு காலை ஒன்பது மணிக்கே விநாயகர் கோயிலை நோக்கி நடப்பான். பூஜை முடிந்து வந்ததும்தான் சாப்பாடு. பண்ணையாருக்குக் குழந்தை குட்டி கிடையாது.

"ஏ விசாலம்! ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் நமக்கு குழந்தை தானே பிறக்கும்னு வாய்க்கு வாய் சொல்லுவியே! விநாயகருக்கு நைவேத்யம் செய்யச் சொல்லி டிபன் பாக்ஸிலே பொங்கல் கொடுத்தனுப்பினால் எத்தனை மிச்சம் கொண்டு வரான் பாரு! ஏண்டா, டேய், நைவேத்தியம் செஞ்சுட்டுச் சாப்பிடுவியா, இல்லாட்டி மரத்தடியிலே உட்கார்ந்து சாவகாசமாச் சாப்பிட்டுவிட்டு மிச்சத்தை விநாயகருக்கு நைவேத்யம் பண்ணுவியா?" ஏளனமாகக் கேட்ட பண்ணையாரை அடக்கினாள் மனைவி விசாலம்.

"இனிமேல் நாளையிலிருந்து பொங்கல் குறைஞ்சதுன்னா உனக்குச் சாப்பாட்டையே நிறுத்திடச் சொல்லுவேன். ஜாக்கிரதை." என்று மேலும் மிரட்டினார் பண்ணையார்.

"வீட்டிலே சொன்ன பேச்சைக் கேட்டு ஒழுங்காய் வேலை செய்கிற பிள்ளையா இப்படி நடந்துக்கிறது?" விசாலத்தால் நம்ப முடியவில்லை. "ஏண்டா மணிகண்டு! பொங்கலை என்னடா செய்வாய்? நீயும் சாப்பிடலேங்கறே. ஒரு வேளை உனக்குத் தெரியாமே அந்த விநாயகரே சாப்பிட்டுவிடுறாரா?" ஏக்கமும் துக்கமும் நிறைந்த குரலில் விசாலம். அவனு

டைய மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

''மாமி! அதிகமா என்னை ஒண்ணும் கேட்டுத் தொந்தரவு செய்யாதீங்கோ! நான் தப்பா நடந்துண்டதா என் மனசுக்குப் படலேன்னுதான் சொல்றேனே! சத்தியமா உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்க மாட்டேன். இதுக்கு மேலே என்னை எதுவும் கேட்காதீங்கோ'' கண்களைத் துடைத்துக் கொண்டான் மணிகண்டன்.

மறுநாள் காலைபூஜைக்குவேண்டிய சாமான்களையும், வெண் பொங்கலையும் மணிகண்டனிடம் கொடுத்து விநாயகர் கோயிலுக்கு அனுப்பிவிட்டு அவனைத் தொடர்ந்து சென்றாள் விசாலம். கோயிலுக்கு அருகில் இருக்கும் அரச மரத்தின் பின்னால் நின்று கொண்டு நடப்பதைக் கவனிக்கத் தொடங்கினாள்.

மணிகண்டன் அருகில் உள்ள கிணற்றில் குடத்தைக் கட்டி இறக்கித் தண்ணீர் எடுத்து விநாயகருக்கு அபிஷேகம் செய்தான். பன்னீர் அபிஷேகம் செய்தான். விசாலம் கன்னத்திலே போட்டுக் கொண்டாள். அடுத்தது பால் அபிஷேகம். செ..பிலிருந்த பாலில் பாதியை விநாயகர் தலை..ல் ஊற்றிவிட்டு, மீதிப் பா.. செம்போடு வைத்துவிட்டான்.

விசாலம் ஒரு நிமிஷம் துணு..று ..ள். 'பொங்கல்தான் எடுத்துக்கொ... கிறான் என்றால் பாலை என்ன செ.. வான்! பச்சைப் பாலாகவே சா.. பிட்டு விடுவானோ! கொஞ்ச நேரம் பொறுத்திருந்துதான் பார்ப்போமே' என எண்ணித் தன் கால்களில் ஊர்ந்த கட்டெறும்பின் நமைச்சலையும் தாங்கியபடி நின்றிருந்தாள். தேங்காய் உடைத்து நைவேத்யம் செய்துவிட்டு கற்பூர ஹாரத்தியும் எடுத்த மணிகண்டன், ''ஐயா, சாமி! பொட்டை வந்திருக்கேன்'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான். கற்பூர ஹாரத்தியை அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் கண்களில் தானே சென்று கைவைத்து இரு குழிகளிலும் ஒற்றினான். குருடனின் கையில் பச்சிளம் குழந்தை ஒன்று அழுக்குத்துண்டால்போர்த்தப்பட்டு உறங்கிக் கொண்டிருந்தது. மணிகண்டன் திரும்ப உள்ளே சென்று, குருடனின் கையிலே இருந்த கப்பரையில் நாலு கரண்டி பொங்கலை வைத்தான். பிறகு பிச்சைக்காரன் வைத்திருந்த தகரக் குவளையில் செம்பில் விநாயகருக்கு அபிஷேகம் செய்தது போக மிஞ்சியிருந்த பாலையும் ஊற்றினான். விசாலம் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தாள்

தொடர்ந்து மணிகண்டனின் குரல் கணீரென்று ஒலிக்கிறது. ''இந்தாப்பா! நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்கோ. இதுதான் நான் கடைசியா உனக்குப் போடுற சாப்பாடு. குழந்தைக்குக் கடைசியா ஊத்தற பாலு! நாளையிலிருந்து வேறு எங்கேயாவது முயற்சி பண்ணு!'' துக்கம் தொண்டையை அடைக்கப் பேச்சை நிறுத்தி விடுகிறான்.

''என் ராசாவே! வேறே யாராச்சும் புதுசா பூசை பண்ண வருகிறாங்களா?'' என்று பிச்சைக்காரன் கேட்க, ''இல்லேப்பா! நான் பூஜை செய்யறதா இல்லே. ஊரை விட்டே போயிட றதா இருக்கேன். புதுசா போடுறது முதலாளியுடைய இஷ்டத்தைப் பொறுத்தது.'' பேச்சை வெட்டிக் கொண்டான் மணிகண்டன்.

இதையெல்லாம் மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த விசாலம் ஓடோடி வந்து மணிகண்டனைக் கட்டிக் கொண்டாள். ''ஏண்டா மணிகண்டா! இதையெல்லாம் பத்தி மாமா உன்னை அடிச்சப்போ ஏன் ஒண்ணுமே சொல்லாம வாயை மூடிண்டு இருந்தே?''

''மாமி! என்னை ரொம்ப மன்னிச்சுக்கணும். எனக்குப் பசி அதிகமாயிட்டா, தட்டைத் தூக்கிண்டு வந்து மாமி சாதம் போடுங்கோன்னு உங்களைத்தானே கேட்பேன். இந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் யாரைப் போய்க் கேட்பான். பாவம்! அவன் மனைவி செத்துப் போய் ரெண்டு மாசம் ஆகிறது. கையிலே குழந்தையை வேறே விட்டுட்டுப் போயிட்டா. நீங்களே சொல்லுங்கோ மாமி, நான் செஞ்சது தப்பா? இந்தக் குழந்தை அழும் சப்தம் கேட்டுத்தான் பொழுது விடிஞ்சது தெரிஞ்சு எழுந்திருக்கிறேன். சாமி சத்தியமாச் சொல்றேன் மாமி. இது

உங்க வீட்டுச் சாதம்! உங்க வீட்டுப் பால்! இந்தப் பிச்சைக்காரனுக்குப் போட்ட சோறும் குழந்தைக்கு ஊத்தின பாலும் தலைமுறை தலைமுறையா உங்க குடும்பத்தைக் காக்கும். நீங்க கர்ப்பமா இருக்கீங்க. உங்களுக்கு முதலிலே பிறக்கிற குழந்தை ஆரோக்கியமாய் இருக்கணும் என்று நினைச்சு குழந்தைக்குப் பால் விடுவேன்'' — கலங்கியபடியே சொன்னான் மணிகண்டன்.

விசாலம் அவன் சொல்லச் சொல்ல எல்லாவற்றையும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தவள், ''ஏண்டா மணிகண்டா, நேத்து மாமா உன்னை அடிக்கும் போதாவது உண்மையைச் சொல்லியிருக்கலாமே!'' என்று கேட்டாள்.


''நான் சாப்பிட்டிருந்தா உண்மையைச் சொல்லியிருப்பேன். நான் தான் பிச்சைக்காரனுக்குப் போட்டுட்டேனே! போன வருஷம் எங்க ஊரிலே நடந்த ராதா கல்யாணத்திலே ஒரு பாகவதர் உபன்யாசம் செய்தார்! தர்மம் பெருமைக்காகச் செய்யப் படாது. ஆத்மார்த்தமாகச் செய்யணும்! இன்னும் சொல்லப் போனா, 'வலது கை கொடுப்பது இடது கைக்கு கூட தெரியக் கூடாது'ன்னு சொன்னார் மாமி! பொங்கலும், பாலும் உங்க வீட்டுதுதான்! நான் ஒரு கரண்டி மாதிரின்னு வெச்சுக்கோங்களேன்! அவ்வளவுதான்! அதிலே கிடைக்கிற புண்ணியம் பூராவும் மாமாவையும் உங்களையும்தான் சேரும். நீங்க செய்யற தர்மம் உங்களுக்கே தெரியாவிட்டாலும் நல்லதுதான்னு நினைச்சுச் செஞ்சிட்டேன். என் மேலே தப்பு இருந்தா மன்னிச்சுக்குங்க. தர்மத்தோட முழுப் பலனையும் நீங்க அடையணுங்கிற காரணத்தாலே உண்மையைச் சொல்ல முடியாமல் போயிடுத்து! இனிமேல் அந்தப் பிச்சைக்காரனும் குழந்தையும் கோவிலுக்கு வரமாட்டாங்க. வராதேன்னு சொல்லிட்டேன். நானும் போயிட்டு வரேன். நீங்க செஞ்ச ஒத்தாசையை ஒரு நாளும் மறக்கவே மாட்டேன்'' தளும்பிய கண்ணீருடன் தன் பயணத்தைத் தொடங்க அடி எடுத்து வைத்தான் மணிகண்டன்.

உடனே விசாலம் ஓடோடிச் சென்று, ''மணிகண்டா, என் ஊனக் கண்களை நீதான் திறந்துவிட்டாய். நாளையிலிருந்து இந்தக் கண் தெரியாதவருக்குச் சாப்பாடும், குழந்தைக்குப் பாலும் நம்ம வீட்டிலேயே கொடுத்திடுவோம். கண்களைத் துடைத்துக் கொள், மணிகண்டா! வீட்டுக்கு வா'' என்று அணைத்தபடி, தன் கணவரிடம் விவரம் சொல்ல அழைத்துச் சென்றாள்!

கண்டுபிடித்தவரைக் கண்டுபிடியுங்கள்

1. எலிவேட்டர் (லிஃப்ட்) —
2. கடின ரப்பர் —
3. போனகிராஃப் —
4. ரப்பர் டயர் —
5. நீராவிக் கப்பல் —
6. செலுலாய்ட் —
7. மின்சார விசிறி —
8. ரிவால்வார் —
9. செருப்புத் தைக்கும் இயந்திரம் —
10. தீக்குச்சி —

மார்க்கோனி, ஓட்டிஸ், எடிசன்
ராபின்ஸ், ஹென்காக், வாட்
எடிசன், பெல், மோர்ஸ்
புல்மேன், டன்லப், தெவுனன்
ஃபல்டன், ஹால், ரிட்டி
ஸ்டோன், ஹையாட், சீமென்ஸ்
வீலர், ஹென்றி, டேவி
ஃபாரடே, கோல்ட், ஈஸ்ட்மேன்
ட்ரேக், பினேக், ஒயிட்
தாம்ப்ஸன், வாக்கர், ஹோ



விடைகள் 91ம் பக்கம்






பேச்சுக் கலை

அறுபத்து நான்கு கலைகளில் பேச்சுக் கலை முக்கிய அங்கம் வகிக்கிறது. அறிஞர் அண்ணா, ரைட் ஆனரபிள் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், சத்திய மூர்த்தி போன்றோரது வாக்கு வன்மைக்கு ஈடு இணை சொல்லக் கூடியவர் உண்டா?

விளையும் பயிரிலேயே வாக்கு வன்மையை, பேச்சுக் கலையை வளர்க்க வேண்டும் என்பதற்காக ரோட்டரி ஸ்தாபனத்தின் கூட்டுறவோடு பிலிப் நிர்வாகிகள் பள்ளிச் சிறுவர் சிறுமிகளுக்கான பேச்சுப் போட்டிகளைத் தியாகராய நகர் பாலமந்திர் ஜெர்மன் ஹாலில் நடத்தினர். பேச்சுப் போட்டி தொடங்குவதற்கு அரை மணி முன்பு மாணவ மாணவிகளுக்கு அவர்கள் உரையாற்ற வேண்டிய 'பொருள்' பற்றித் தெரிவிக்கப்பட்டது. தமிழில்-சரளமாகப் பேசியவர்களில் சாந்தோம் ஹையர் செகண்டரிப் பள்ளி மாணவன் பாஸ்கர், நீதிபதிகளின் ஏகோபித்த மார்க்குகளைப் பெற்று முதல் பரிசு பெற்றான். ஆங்கில மொழிப் பேச்சாற்றலுக்கு முதல் பரிசு பெற்றவள் ஆதர்ச வித்தியாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவி ஸ்ரீகலா வெங்கட்ராமன். சென்னையிலுள்ள பள்ளி மாணவ மாணவியரின் பேச்சாற்றலை அபிவிருத்தி செய்யும் இந்த நற்காரியத்தைச் செய்ய முன் வந்த ரோட்டரி—பிலிப்ஸ் நிர்வாகிகள் பாராட்டுக்குரியவர்கள்.



கார்ப் பந்தயம்

கார்ப் பந்தயங்கள் கார் கண்டு பிடிக்கப்பட்ட தருணத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. முதல் கார்ப் பந்தயம் 1887 ஆம் ஆண்டு பாரீஸிலிருந்து வெர்செயில்ஸுக்கு இருபது மைல் தூரத்துக்கு நடைபெற்றது. இந்த முதல் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் ஜியார்ஜ் பௌட்டன். இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.

பாரீஸிலிருந்து பெர்லின், வியன்னா, ஆம்ஸ்டர்டாம் போன்ற நாடுகளுக்கும் 1903 ஆம் ஆண்டில் கார்ப் பந்தயங்கள் நடைபெற்றுள்ளன. வழியில் பல விபத்துக்கள் ஏற்பட்டதால் கார்ப் பந்தயத்தைப் பாதியில் நிறுத்திய நிகழ்ச்சியும் உண்டு. போர்டக்ஸ் பந்தயத்தின் போது பிரெஞ்சு, ஸ்பானியப் பந்தயக் கார்களை ரயில்வே ஸ்டேஷனுக்கு குதிரைகளினால் இழுத்துச் சென்று ரயிலில் பாரீஸுக்கு மூட்டை கட்டி அனுப்பி விட்டார்களாம்!

பிரான்ஸ் நாட்டில்தான் முதல் கிராண்ட்ப்ரீ கார்ப்பந்தயம் 1906 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. பிரிட்டனைச் சேர்ந்த ஜான் சுர்ட்டீஸ் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் உலக சாம்பியன் பட்டம் பெற்றதோடு கார்ப் பந்தயத்திலும் உலக சாம்பியன் விருதைப் பெற்றிருக்கிறார்.

கார்ப் பந்தயத்தில் ஈடுபடும் போட்டியாளர்கள் கட்டாயம் ஹெல்மெட்டும், கண்ணாடியும், பாதுகாப்பான உடைகளும் அணிய வேண்டும்.

ஒவ்வொரு கொடியும் பந்தயத்தில் போட்டியாளருக்கு ஒவ்வொரு வித சைகையை உணர்த்தும். நீலக் கொடியை நிர்வாகிகள் காண்பித்தால் இந்தக் கார்ப் போட்டியாளரை வெகு அருகில் நெருங்கி மற்றொரு கார்ப் பந்தய வீரர் வந்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தமாம்! மஞ்சள் கொடியைத் தூக்கிக் காட்டினா ஆபத்து நெருங்குகிறது என்று அர்த்தமாகும். சிவப்புக் கொடியை உயர்த்தினால் போட்டியாளர் தம் காரை நிறுத்த வேண்டும் என்ற சைகையை உணர்த்தும். சிவப்புக் கோடுகளுள்ள மஞ்சள் கொடி தரை வழுக்கும் தன்மை கொண்டது என்பதை விளக்கும்.

கார்ப் பந்தயத்துக்குப் 14 மைல்கள் சர்க்யூட்களோடு 30 ஹேர்பின் வளைவுகளும், அதில் அடங்கியிருக்கும். எல்லாப் போட்டியாளர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பந்தயக் காரும் பந்தய நிர்வாகிகளால் பரிசோதிக்கப்பட்டுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். போட்டியாளருக்கு லைசென்ஸ் வழங்கப்படுவதும் உண்டு. கார்ப் பந்தயத்தைக்கொடியை அசைத்துத்தொடங்கி வைப்பார்கள். கார்ப் பந்தயங்கள்

நேரக் கணக்கு, சுற்றுக் கணக்கு விகிதத்தில் நடத்தப்படும்.

கார்ப் பந்தயத்தில் ஒரு காரின் ஒவ்வொரு சுற்றும் நேரம் கணக்கிடப்படும்.

சோழவரத்தில் கார்ப் பந்தயத்துக்கான மைதானம் அமைக்கப்பட்டுழு இதுவரை அங்கே பல பந்தயங்கள் நடைபெற்றுள்ளன. 'தமிழகத்தில் பல பெண்மணிகளும் கார்ப் பந்தயத்தில் ஈடுபடுவது தனிச் சிறப்பு.

ஹிமாலயன் கார்ப் பந்தயம் இன்று பிரசித்தமான கார்ப் பந்தயம். இந்தப் பந்தயத்தில் அமெரிக்கா, மலேசியா, ஓமன், சைப்ரஸ் போன்ற நாடுகளும் பங்கு கொள்கின்றன. ஹிமாலயக் கார் பந்தயத்தின் தலைவர் நாஸிர் ஹுசேன். இவர் நிர்வாகி மட்டுமல்ல; கார்ப் பந்தயத்திலும் ஈடுபட்டு வெற்றி வாகை சூடியவர். ஆசிய நெடுஞ்சாலை மோட்டார் கார்ப் பந்தயத்தில் டெஹ்ரானிலிருந்து டாக்கா வரை சர்வதேசப் போட்டியில்வென்றஇந்தியக்குழுவில் இடம் பெற்றவர் நாஸிர் ஹுசைன்.

இந்தியாவிலுள்ள மோட்டார் பந்தயக் கிளப்களின் தலைவர் கார்த்திகேயன். கோயமுத்தூரைச் சேர்ந்த திரு. கார்த்திகேயன் பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்; இவர் நிர்வாகியாக நடத்தும் பந்தயம் ஸிஸர்ஸ் கார்ப் பந்தயமாகும். 1980 ஆம் ஆண்டில்கார்த்திகேயன் பந்தயத்தில்ஈடுபட்டிருக்கும் போது வழியில் ஒரு மோட்டார் சைக்கிள் பந்தயக்காரர் பயங்கர

-குண்டுமணி-

விபத்தில் சிக்கிவிட்ட போது, மனிதாபிமானத்தோடு, பந்தயத்தைப் பாதியில் நிறுத்தி, ஆபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் பந்தய வீரருக்கு உதவினார். அவரது சிறப்பான குணத்துக்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

ஆறாவது இமாலயன் கார்ப்பந்தயத்தில் எழுபத்தி மூன்று கார்கள் பங்கு பெற்றன. 32000 கிலோ மீட்டர் தூரமுள்ள இந்தப் போட்டியில் பயங்கர மலைப்பாதை வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. இந்தத் தேசியப் போட்டியில் பரிசுப் பணம் ரூபாய் 80,000 ஆகும். ஆசியாவிலேயே இந்தக் கார்ப் போட்டிதான் மிகப் பிரசித்தமானது. கென்யா கார்ப் பந்தய சாம்பியன் ஜெயந்த் ஷாவும் அவரது துணை டிரைவர் அர்ஷத் கானும் ஏர் இந்தியா கோப்பையும் 35,000 ரூபாய்ப் பரிசுப் பணமும் பெற்றனர். இந்தப் பரிசுகளை இந்திய சர்க்கார் சுற்றுலா மந்திரி எச்.கே.எல். பகத் வழங்கிக் கௌரவித்தார்.

கார்ப் பந்தயங்களில் ஈடுபடும் வல்லுநர்கள் எத்தனையோ ஆபத்துக்களைக் கடந்து வெற்றி இலக்கை எய்துகிறார்கள். 'நித்ய கண்டம் பூரண ஆயுசு' கதைதான். ஆனாலும் வெற்றி இலக்கை அடைகிறபோது ஏற்படுகிற ஆனந்தமும் களிப்பும் அவர்களுக்கு அத்தனை ஆபத்துக்களையும் மறக்கடிக்கச் செய்துவிடுகின்றன.



முத்தண்ணாவின் முட்டாள் தனம்

— எம். ஆர். ராஜன் —

ஒருநாள் இரவு செங்கோடன் சின்னானின் குடிசைக்கு வந்து, சின்னான் காலில் விழுந்து 'ஓ'வென்று அழ ஆரம்பித்துவிட்டான்.

செங்கோடனை மெதுவாகத் தேற்றிவிட்டு அவனிடம் விசாரித்தான் சின்னான்.

செங்கோடன் ஓர் ஏழை விவசாயி. அவனுக்கு விவசாயத்திற்கு வேண்டி அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. யாரிடம் கேட்பது? யோசிக்கலானான். கடைசியில், மூன்று வட்டி முத்தண்ணாவின் நினைவு வந்தது. முத்தண்ணன் ஓர் அடாவடிப் பேர்வழி. அநியாய வட்டி வாங்குவதில் அசகாய சூரன்! அவனுடைய வட்டிக் கடனில் மாட்டிக் கொண்டு சொத்து, நிலபுலன்களை இழந்தவர்கள் பல பேர். அந்தப் பல பேரில் ஒருவனாகச் செங்கோடனும் மாட்டிக் கொண்டான் இப்போது.

நடந்தது இதுதான்:

மூன்று வட்டி என்ற பெயரில் முப்பத்தாறு சதவீத வட்டி கொடுப்பதாக வாய் மொழி ஒப்பந்தம் செய்து கொண்டு, ரூபாய் மூவாயிரம் கடன் வாங்கியிருந்தான் செங்கோடன். அவன் பேசியது போலவே வட்டியும் அசலுமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்த்து வந்தான். ஆனால், முத்தண்ணா அசலில் அதனை வரவு காட்டாமல் வட்டியிலேயே காட்டி வந்து, திடுமென ஒருநாள் பெரிய தகராறு செய்ய ஆரம்பித்தான். கடைசியில் ஏதோ பெரிய மனசு பண்ணி விடுவதுபோல், "எல்லாம் போகட்டும், மொத்தத்தில் இன்னும் இரண்டாயிரம் ரூபாய் நான்கு தவணைகளில் தருவதாக எழுதிக் கொடு. கணக்கைச் சரி செய்துவிடலாம்" என்று கூறி தாஜா செய்தான்.

செங்கோடனும் வேறு வழியில்லாமல் அடாவடிப் பேர்வழியிடம் தப்பினால் போதுமென்று ஒப்புக் கொண்டான்.

பேப்பரும், பேனாவும் கொடுத்து செங்கோடனையே எழுதச் சொன்னான்.

"அட என்னங்க, நீங்கதான் எழுதுங்களேன். கையெழுத்துப் போடறேன்" என்றான் செங்கோடன்.

"அது தப்புப்பா... உனக்குத்தான் நல்லா எழுத வருதே. இப்பவெல்லாம் தான் எழுதக் கத்துகிட்டிருக்கியே, எழுது" என்று சொல்லி, கடன் பத்திரம் ஒன்றைச் செங்கோடன் கையாலேயே எழுதி வாங்கிவிட்டான்.

இரண்டு மாதங்களாயின. திடீரென பஞ்சாயத்தில் செங்கோடன் மீது முத்தண்ணன் வழக்குத் தொடுத்தான். தன்னிடம் செங்கோடன் கடன் இரண்டாயிரம் வாங்கியதாகவும், வட்டியும் முதலுமாய் அது நான்காயிரத்துக்கு மேல் ஆகிவிட்டதாகவும், அதை உடனடியாகப் பைசல் செய்யாவிட்டால் பகிரங்கமாக நிலம் ஏலத்தில் விடப்படும் என்றும் அறிவித்தான்.

செங்கோடன் செய்வதறியாது விழித்தான். பஞ்சாயத்துக்காரர்களிடம் முறையிட்டான்.

வழக்கு சின்னானிடம் போயிற்று. வழக்கில் இருவரின் வாதங்களையும் சின்னான் கேட்டான். முதலில் முத்தண்ணாவைப் பார்த்து,

"உங்களிடம் செங்கோடன் எவ்வளவு கடன் வாங்கினான்? எப்போது

வாங்கினான்?'' என்று கேட்டான்.

''இரண்டாயிரம் கொடுத்தேனுங்க. இப்போ மூணு வருஷம் ஆகப் போகுதுங்க. வட்டி சேர்த்து இப்ப நாலாயிரத்துக்குச் சேர்ந்து போச்சுங்க.''

''இடையிலே ஏதாவது திருப்பித் தந்தாரா செங்கோடன்?''

''ஏதோ சொற்பத் தொகை பத்து, இருபது தருவாருங்க. அதெல்லாம் போகத்தாங்க நாலாயிரம் நிக்குது.''

''கடன் பத்திரம் ஏதாவது உண்டா? இல்லே வாய் மொழி உறுதிதானா?''

''கடன் பத்திரம் இருக்குதுங்க''— காட்டினான் பத்திரத்தை.

''சரிங்க முத்தண்ணா. இது யாரு எழுதின கடன் பத்திரம்? நீங்களே...''

''தப்புங்க.... தப்புங்க.... நான் ஏன் எழுதப் போறேன். அவரே எழுதினது தாங்க... அவரு கைப்பட எழுதினது தாங்க....''

''நெசம்தானா செங்கோடண்ணே?''

''ஆமாங்க....'' என்றான் செங்கோடன்.

''நீங்க சொல்லி, அவரு எழுதினாரா இல்லே, செங்கோடன் தானாகவே எழுதினாரா....'' என்று முத்தண்ணாவைக் கேட்டான் சின்னான்.

''நான் சொன்னேங்க. அவரு எழுதிக்கிட்டே வந்தாரு!''

''அப்ப அது செங்கோடன் அவர் கையாலேயே எழுதினதுதான். அப்படித்தானே?''

''ஆமாங்க.''

''சரி. கடன் பத்திரம் தேதி என்னங்க?''

''இன்னிக்குச் சரியா மூணு வருசம் ஆவுதுங்க.... எண்பத்தி இரண்டாம் வருசம் நவம்பர் மாசம் எழுதினது.''

''சரி'' என்று சொல்லிவிட்டு, சின்னான் செங்கோடனை விசாரிக்க ஆரம்பித்தான்.

''நம்ம ஊர்லே தொலைக்காட்சி பெட்டி யார் விட்டிலேயாவது இருக்குதுங்களா.... உங்களுக்குத் தெரியுமா?''

''என்னாங்க நீங்க, நம்ம பஞ்சாயத்து ஆபிசிலே இருக்குதுங்களே... நம்ம விவசாய நிகழ்ச்சிகள் எல்லாம் சொல்றாங்க... நமக்கு ரொம்ப உபயோகமா இருக்குதுங்களே.... அதனாலேதாங்க அதைக் கண்டிப்பா ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் வச்சுக்கணும்னு



சொல்றாங்க.... அட ஏங்க இவ்வளவு வந்து....''

எதற்குத் தொலைகாட்சிப் பெட்டியைப் பற்றி இப்போது விசாரிக்கிறான் சின்னான்! அதற்கும் இந்த வழக்குக்கும் என்னய்யா சம்பந்தம்? என்று கூடியிருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

செங்கோடன் தொடர்ந்தான்.

''தம்பி நான் எழுதப் படிக்கக் கத்துகிட்டதே அதுலே வர்ற வாழ்க்கைக் கல்வி பகுதியைப் பார்த்துத்தானுங்க.''

''ஓ.... அப்படியா.... அதுக்கு முன்னே எழுதப் படிக்க.....''

''ஒண்ணும் தெரியாதுங்க....''

''நம்ம தொலைக்காட்சிப் பெட்டி பஞ்சாயத்துலே எப்ப வாங்கினது?''

''ஆறுமாதம்தாங்க ஆகிறது'' என்று பதில் சொன்னார் பஞ்சாயத்துத் தலைவர்.

செங்கோடன் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டது தொலைக்காட்சியிலே வருகிற 'வாழ்க்கைக் கல்வி'யில்தான் என்பதை அங்கிருந்த சிலரும் உறுதிப்படுத்தினர்.

''அப்ப இந்தக் கடன் பத்திரம்—மூணு வருஷத்துக்கு முன்னே எழுதினதா அதுவும் செங்கோடனே எழுதினதா சொல்றது பொய்.... செங்கோடனை மிரட்டி எழுதி வாங்கி.... அதுவும் அவன் கையாலேயே எழுதினாத்தான் வழக்குப் போட்டால் சாதகமாயிருக்கும்னு எழுதி வாங்கி, அதற்குப் பிறகு மூன்று வருடத்துக்கு முந்தி எழுதியது போலத் தேதியை முத்தண்ணாவே போட்டுக்கிட்டு, இப்போ பொய் வழக்குப் போட்டிருக்கிறார். சாமர்த்தியமாய், ஜோடனை செய்தவர், சின்ன விஷயத்தை மறந்து போய்விட்டார்'' என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தான் சின்னான்.

செங்கோடன் மகிழ்ந்தான். பஞ்சாயத்துக்காரர்கள் மகிழ்ந்தார்கள்.

"எழுதப் படிக்கக் கத்துக்கிட்ட பின்னாலேயே இப்படி ஏமாந்தா, எழுதப் படிக்கத் தெரியாம இருந்தா என்ன ஆகும்? ஆகவே வயதானாலும் பரவாயில்லை. பெரியவர் முதியோர் கல்வி பயிலுங்கள். படிப்பு வாழ்க்கைக்கு அவசியம்'' என்று முடித்தான் சின்னான்.



தவறும் தண்டனையும்

வே. சபாநாயகம்

சுகுமார் தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டான். என்ன சமாதானப்படுத்தினாலும் மனசாட்சியின் உறுத்தல் நீங்கவில்லை. அவன் செய்தது தரும நியாயப்படி சரியாக இருக்கலாம். ஆனால், மற்றவர் கண்ணுக்கு அது கையாடல் குற்றமாக அல்லவா படும்? மனம் திரும்பத் திரும்ப அந்த மதிய நிகழ்ச்சியையே சுற்றிச் சுற்றி வந்தது.

மதியம் சீக்கிரமாகவே சாப்பிட்டு விட்டு பள்ளிக்கு வந்துவிட்டான். வகுப்பில் யாரும் இன்னும் திரும்பி இருக்கவில்லை. உள்ளே நுழைந்து பையைத் தன் இடத்தில் வைத்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தபோது கடைசி இருக்கையில் யாரோ கவிழ்ந்து படுத்திருப்பது தெரிந்தது. அருகில் சென்று பார்த்தான்.

ஆறுமுகம் என்ற மாணவன், தூங்குகிற மாதிரி கண் மூடிப் படுத்திருந்தான். கூர்ந்து பார்த்த போது தூங்குகிற மாதிரியும் தெரியவில்லை. சோர்ந்து இருப்பதை அறிந்து, 'ஆறுமுகம், ஆறுமுகம்' என்று பல தடவை அழைத்த பிறகே அவன் எழுந்தான். விசாரித்ததில் அவன் பசி மயக்கத்தில் அப்படி இருந்தது தெரிந்தது. தினமும் அப்படித்தான் மதியச் சாப்பாடு இல்லாததால் மயங்கிக்கிடப்பதையும், அவனுக்குப் பெற்றோர் இல்லை என்பதையும், ஒருவேளைச் சோற்றுக்கும் வழி இல்லாத ஏழ்மையையும் அவன் சொன்னதைக் கேட்டு சுகுமாருக்கு அழுகையே வந்துவிட்டது.

அவன் பதினோராம் வகுப்பு மாணவன். பத்தாம் வகுப்புவரைதான் சத்துணவு போடுகிறார்கள். அதனால் இவனுக்கு அதுவும் கிடைக்கவில்லை.

அவனுக்கு, தான் எப்படி உதவ முடியும் என்று சுகுமார் யோசித்தான். அவனும் ஏழைதான். ஆனால் பட்டினி கிடக்கிற ஏழ்மை இல்லை. என்ன செய்யலாம்?

திடீரென்று தன் பையில் கொஞ்சம் காசு இருப்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது. ஆனால், அது அவனது பணம் இல்லை. வகுப்பின் பொதுப் பணம். தாமதமாக வருபவர்கள், வீட்டு வேலை செய்யாதவர்கள் ஆகியோருக்கு ஆசிரியர் போடுகிற அபராதத் தொகைகளை, அவன் நேர்மையானவன் என்பதால் அவனை வகுப்புத் தலைவனாக்கி அவன் பொறுப்பில் விட்டு வைத்திருந்தார் ஆசிரியர். அதற்கு தினமும் ஒழுங்காகக் கணக்கு எழுதி வைத்திருந்தான் சுகுமார். தண்ணீர்ப் பானை போன்ற வகுப்பின் தேவைகளுக்குத்தான் அதிலிருந்து செலவு செய்து கொள்ள வேண்டும். அதிலிருந்து ஏதும் உதவ முடியுமா?



"19 E இங்கே வருமா சார்!"

"ஒரு ரூபாய்க்கு மிட்டாய் வாங்கிட்டு வந்து இங்கே நில்லுங்க! 19 E என்ன... நூறு ஈ கூட வரும்!"

— ஜி. காமராஜன்.

அது எப்படி முடியும்? வகுப்புப் பணத்தில் தருமம் செய்யும் அதிகாரம் அவனுக்குத் தரப்பட்டிருக்கிறதா என்ன?

சற்றுயோசித்தபிறகு, ஆபத்துக்குப் பாவமில்லை என்று ஐம்பது பைசாவை எடுத்து ஆறுமுகத்திடம் கொடுத்தான். ஐம்பது பைசாவில் அவனது பசியைப் போக்கிவிட முடியாதுதான். ஆனால், ஏதோ பொரி கடலை வாங்கித் தின்று தண்ணீர் குடித்தாலாவது பசியின் கடுமை சற்றுக் குறையுமே? மற்ற பணக்காரச் சிறுவர்கள் போலப் பெற்றோரிடமிருந்து தினமும் கைக்காசு கிடைக்குமானால், அவனால் தாராளமாகவே தர முடியும்? பொதுப் பணத்தில் அதற்கு மேல் கொடுக்க முடியவில்லை!

ஆனால், ஆறுமுகத்திற்கு அதுவே பெரிய புதையல் கிடைத்த மாதிரி இருந்தது. மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு நன்றி சொன்னான். ஏதாவது வாங்கிச் சாப்பிட வெளியே போனான்.

மாலை வீட்டுக்கு வந்ததும் அந்த ஐம்பது பைசாவை அம்மாவிடம் கேட்டு வாங்கி கணக்கை சரிக்கட்டிவிட முயன்றான். ஆனால், அம்மா கையை விரித்துவிட்டாள். ஐம்பது பைசா என்பது அவளுக்குப் பெரிய தொகை. அது கிடைத்தால் அரை கிலோ உப்பு வாங்கலாமே! சுகுமாருக்குக் கவலை ஏற்பட்டது? இந்த ஐம்பது பைசாவை எப்படி நேர் செய்வது?

வெகு நேரம் யோசித்த பின் ஒரு தவறான காரியத்தைச் செய்ய முடிவு செய்துவிட்டான். அன்றைய அபராத வசூலில் ஒரு ஐம்பது பைசாவை எழுதாமல் விட்டு விடுவதுதான் அது! அன்று நிறையப் பேர் அபராதம் செலுத்த நேர்ந்தது. அதில் ஒரு ஐம்பது பைசாவை விட்டுவிட்டால் யார் கவனிக்கப் போகிறார்கள்! அவன் சொன்னது தான் கணக்கு. ஆசிரியர்க்கு அவன் மீது நம்பிக்கை. வேறு வழியில்லை. 'நாணயம் பொய்த்தாலும் ஒரு நல்ல காரியத்துக்குத்தானே செய்தோம்? ஒரு ஏழையின் பசி தீர்த்த தருமத்திற்காக தண்டனை கிடைத்தாலும் கிடைக்கட்டும்!' என்று தீர்மானித்து கணக்கில் ஐம்பது பைசாவைக் காட்டாது எழுதிச் சரிக்கட்டி விட்டான்.

இதுதான் அவனை தூங்கவிடவில்லை! 'தன் மீது நம்பிக்கை வைத்திருக்கிற ஆசிரியர்க்குத் தெரிந்தால் தன் நேர்மை, நாணயம் என்ன ஆகும்? இழிவு அல்லவா?' என்று குழம்பினான். இறுதியில் வேறு வழி தென்படாததால் 'சரி, இன்றோடு இதை விட்டு விட வேண்டும். இதுதான் கடைசி!' என்று முடிவு செய்த பிறகே அவனுக்குத் தூக்கம் வந்தது.

ஆனால், மறுநாளும் அதே தவறைச் செய்ய நேர்ந்துவிட்டது. மறுநாள் மதியம் இவனது வரவை எதிர் நோக்கிக் காத்திருப்பவன் போலக் காணப்பட்டான் ஆறுமுகம். இவனைக் க்ண்டதும் அவனது முகத்தில் ஒரு நம்பிக்கை ஒளிர்ந்தது. மௌனமான அவனது இறைஞ்சல் சுகுமாரின் தீர்மானத்தை உடைத்துவிட்டது. அன்றும் ஐம்பது பைசாவை வகுப்புப் பணத்திலிருந்து தர வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தானே ஏற்படுத்திக் கொண்டு விட்டான். இரக்க மனமும் பசியின் கொடுமையை அறிந்திருந்த அனுபவமும் அன்று மட்டுமல்ல. மறுநாளும் மறுநாளும் தொடர்ந்து அதே தவற்றைச் செய்ய வைத்துவிட்டது. ஒரு வகையில் இதுவும் திருட்டுதான் என்று உணர்ந்தும் தருமத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு சுகுமார் தினமும் ஆறுமுகத்திற்கு உதவி செய்து வந்தான்.

அதற்காகத் தினமும் பொய்க் கணக்கும் எழுதி வர வேண்டியதாயிற்று. யாருக்கும் தெரியப் போவதில்லை என்று மனம் ஒரு பக்கம் தைரியமூட்டியும் குற்ற உணர்வுடனேயே தினமும் நடமாட வேண்டியதாயிற்று. இந்தத் தைரியமும் அதிக நாட்கள் நீடிக்காமல் பத்து நாட்களுக்குப் பின் ஒரு சோதனை வந்தது. அதுவும் எப்போதும் அவன் மீது பொறாமையும் பகையும் கொண்டிருக்கிற ரவியின் மூலம் வந்தது.

ரவிக்கு சுகுமார் மீது எப்போதும் பொறாமை. அவன் படிப்பிலும் விளையாட்டிலும் எப்போதும் முதலாமவனாக இருப்பதும், ஆசிரியர்கள் அனைவரது பாராட்டினைப் பெற்றிருப்பதும் ரவிக்கு எரிச்சல் தருபவை. சமயம் கிடைக்கும் போது அவனது நல்ல பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தக் காத்துக் கொண்டிருப்பவன். இப்போது அவனுக்கு சரியான வாய்ப்புக் கிடைத்தது. ஒருநாள் மதியம் வழக்கம் போல சுகுமார் ஆறுமுகத்துக்குக் காசு கொடுப்பதைப் பார்த்துவிட்டான். சுகுமாரின் ஏழ்மை நிலைமை ரவிக்குத் தெரியும். ஆறுமுகத்திற்கு உதவி செய்கிற அளவுக்கு அவனுக்குப் பணம் ஏது? மெதுவாக ஆறுமுகத்திடம் பேசிக் கொடுத்து, தினமும் அவன் காசு தருவதைத் தெரிந்து கொண்டதும், 'சரி, இவன் ஏதோ தவறான வேலை செய்கிறான்' என்று புரிந்துவிட்டது. அது நிச்சயம் வகுப்புப் பணமாகத்தான் இருக்கும். வேறு வசதி இவனுக்குக் கிடையாது என்று தீர்மானித்து, அன்று முதல் தினமும் வகுப்பில் சேரும் காசுக்குக் கணக்குக் குறிக்கத் தொடங்கினான். ஒரு வாரம் ஆனதும் திடீரென்று வகுப்பாசிரியரிடம் குண்டைத் தூக்கிப் போட்டான்.

''ஐயா, வகுப்புத் தலைவனிடம் இருக்கிற அபராதத் தொகைக் கணக்கைச் சோதித்தால் நல்லது'' என்று சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவன் மாதிரி பிரச்னையை எழுப்பினான்.

இதைக் கேட்டதும் சுகுமாருக்கு, 'குப்'பென்று உடலெங்கும் வெம்மை பரவியது. தான் எதிர்பார்க்காத இந்த ஆபத்தைக் கண்டு அவனது உள்ளம் நடுங்கியது. 'சரி, மானம் போகப் போகிறது! ரவி சரியாகப் பழி வாங்கப் போகிறான்' என்று புரிந்துவிட்டது.

வகுப்பாசிரியருக்கும், மாணவர்



களுக்கும் ரவி எழுப்பிய பிரச்னை வியப்பாக இருந்தது. சுகுமாரைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. ரவி தன் கணக்கைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்து, 'இதே அளவு வசூல் ஆகி உள்ளதா என்று பாருங்கள் ஐயா!' என்று சொன்னான். ஆசிரியர் சுகுமாரைப் பார்த்தார். நெஞ்சில் கனம் இருந்ததால், அவனால் நிமிர்ந்து ஆசிரியரைப் பார்க்கத் தைரியமில்லை.

''என்ன சுகுமார்! உன் கணக்கில் ஏதும் தவறில்லையே! ரவி என்னவோ சொல்கிறானே!'' என்றார்.

சுகுமாருக்குப் பேச நா எழவில்லை. தற்காப்பு உணர்ச்சி தூண்ட, ''இல்லை ஐயா! நீங்கள் வேண்டுமானால் சோதித்துக் கொள்ளுங்கள்'' என்று உள்ளே பயத்துடன், ஆனால் தைரியமாக இருக்கிற மாதிரி பதில் சொன்னான். அவன் மீது சந்தேகப்படாமல் அவன் வார்த்தையை நம்பி ஆசிரியர் அத்தோடு விட்டு விடுவார் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவனது போதாத காலம், ''சரி! கொண்டு வா பார்ப்போம்'' என்று கேட்டு கணக்கை வாங்கிக் கொண்டார்.

ரவி கணக்குடன் சரி பார்த்ததில் தினமும் ஐம்பது பைசா குறைவது தெரிந்தது. அவரால் நம்ப முடியவில்லை. சுகுமாரின் நாணயத்தில் அவருக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால், இப்போது கணக்கு சொல்வது என்ன? தினமும் அபராதம் கட்டியவர்களை எழுந்திருக்கச் செய்து கணக்கிட்டார். ரவி சொன்னபடி தினமும் ஐம்பது பைசா குறைத்து எழுதப் பட்டிருப்பது உண்மைதான் என்று தெரிந்தது.

''சுகுமார்! ரவி சொன்னது சரிதான். உன்னை நான் அப்படி நினைத்ததில்லையே! பணம் எப்படிக் குறைகிறது?'' என்று கேட்டார்.

சுகுமாரால் ஏதும் பேச முடியவில்லை. பொய் சொல்ல அவனது மனசாட்சி இடம் தரவில்லை. துக்கமும், அவமானமும் தாளாமல் 'ஓ' வென்று அழுதுவிட்டான்.

''அவ்வளவும் நடிப்பு ஐயா! அவனை வகுப்புத் தலைமையிலிருந்து நீக்க வேண்டும் ஐயா! இதற்குத் தண்டனையும் தர வேண்டும்'' என்று ரவி கொக்கரித்தான். அவனது முகத்தில் 'வஞ்சம் தீர்த்துக் கொண்ட திருப்தி' நிலவியது.

''உண்மையைச் சொல். குறைகிறதாக என்னவாயிற்று?'' என்று சற்றுக் கோபத்துடன் அதட்டினார் ஆசிரியர். எல்லோரும் நிசப்தமாய் சுகுமாரையே நோக்கினார்கள். உண்மையைச் சொல்லி, ஆறுமுகத்தின் ஏழ்மையைப் பறைசாற்ற சுகுமார் விரும்பவில்லை.

தேம்பியபடியே, ''நான்தான் ஐயா தினமும் ஐம்பது பைசா எடுத்துக் கொண்டு, கணக்கைக் குறைத்து எழுதி விட்டேன்'' என்று குற்றத்தைத் தன் மீதே சுமத்திக் கொண்டான்.

ஆசிரியர் வருத்தமும் கோபமும் மேலிட, ''சுகுமார், உன்னை எவ்வளவோ நாணயமானவன்—நல்லவன் என்று எண்ணினேன். இப்படிப்பட்ட மோசக்காரனாக நீ இருப்பாய் என்று நான் நினைக்கவே இல்லையே. சரி! இனி நீ நம்பிக்கைக்கு உகந்தவன் இல்லை. வகுப்புத் தலைவனாக இருக்க உனக்கு இனித் தகுதி இல்லை. குறைகிற பணத்தை நாளைக்கே கொடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் தலைமையாசிரியரிடம் உன்னை அனுப்ப நேரிடும்'' என்று கடுமையாகக் கூறினார்.

''வெட்கம்! வெட்கம்!'' என்று ரவி கும்மாளியிட்டான். சுகுமார் தலை குனிந்து கண்ணீர் வடித்தான். திடீரென்று பின் வரிசையிலிருந்து ஒரு குரல் எழுந்தது. ''ஐயா! குற்றவாளி நான்தான். சுகுமார் இல்லை!''

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே ஆறுமுகம் கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருந்தான். ஆசிரியரும் மற்றவர்களும் ஏதும் விளங்காமல் அவனைப் பார்த்தார்கள்.

ஆறுமுகம் ஆசிரியரிடம் நடந்ததை எல்லாம் சொன்னான். தனக்கு இரக்கம் காட்டப் போய் சுகுமார் பழிக்கு ஆளானதோடு, தண்டனை பெறவும் நேர்ந்ததற்காக தன் வேதனையைத் தெரிவித்து சுகுமாரை மன்னிக்குமாறு வேண்டினான்.

உண்மையை அறிந்த ஆசிரியருக்கு சுகுமார் மீது இரக்கம் ஏற்பட்டது. அவசரப்பட்டு அவனைப் புண்படப் பேசியதற்காக வருந்தினார். 'உண்மை

தானா சுகுமார்?' என்று கேட்டார் கனிவுடன். சுகுமார் மௌனமாகத் தலையை மட்டும் அசைத்தான்.

"நீ ஏன் உண்மையைச் சொல்லி இருக்கக் கூடாது? உன் இரக்க குணத்தைப் பாராட்டுகிறேன். ஆனாலும், நீ செய்தது தவறுதான். பொய்க்கணக்கு எழுதிய குற்றத்தோடு, பொய்யும் சொன்னது மன்னிப்புக்கு உரியது அல்ல. வள்ளுவர் என்ன சொல்கிறார் தெரியுமா? 'பெற்ற தாயே பட்டினி கிடந்தாலும் கூட அதைப் போக்க சான்றோர் பழித்துக்கூறுகிற இழிவான செயலில் ஈடுபடக்கூடாது' என்கிறார்.

'ஈன்றாள் பசி காண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

அதனால் பிறரது துன்பங்கண்டு இரக்கப்படும் போது நேரிய வழியில் உன்னால் உதவ முடிந்தால் செய். முடியாவிட்டால் இதுபோன்ற பொதுச்சொத்துக்கு நீயே தர்மகர்த்தா ஆகி தானம் செய்யக் கூடாது. போகட்டும். இந்த முறை உன்னை மன்னிக்கிறேன். குறைகிற பணத்தை நானே கொடுத்து விடுகிறேன். இனி இப்படிச் செய்யாதே! தவறை ஒப்புக் கொண்டதால், இனி இப்படிச் செய்ய மாட்டாய் என்று நம்பி மீண்டும் வகுப்புத் தலைவனாக உன்னை நியமிக்கிறேன். நாணயமாக, நியாயமாக இருந்து இந்த மாசை நீ துடைக்க வேண்டும்" என்றார் ஆசிரியர்.

"இல்லை ஐயா! தவறு செய்த எனக்குத் தண்டனை தருவதுதான் சரி. என்னை வகுப்புத் தலைவனிலிருந்து நீக்கியது தான் எனக்குத் தண்டனை. என்னை மன்னியுங்கள்" என்று கண்ணீர் மல்க சுகுமார் ஆசிரியரிடம் வேண்டினான்.


"சரி! இந்த மன உறுத்தலே போதும். இது நல்லதுதான். நீ இனி தவறு செய்ய மாட்டாய். நீயே தொடர்ந்து தலைவனாக இருந்து வா!" என்றார் ஆசிரியர்.

பிருந்தாவனம்

நகையும் உயிரும்

நானும் என் அம்மாவும் ஒருநாள் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தோம். அப்போது ஒரு கொள்ளைக்காரன்திடீரென்றுஎங்கள்எதிரில் வந்து துப்பாக்கியை நீட்டியபடி என் அம்மாவைப் பார்த்து, "உன் நகைகளைக் கழற்றிக் கொடு. இல்லாவிட்டால் உன் மகனைச் சுட்டுவிடுவேன்" என்று பயமுறுத்தினான்.

என் அம்மா பயந்து நகைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டாள். உடனே அந்தக் கொள்ளைக்காரன் சிரித்துக் கொண்டே, "இது நிஜத் துப்பாக்கி அல்ல. விளையாட்டுத் துப்பாக்கி" என்றான். என் அம்மாவும், சிரித்துக் கொண்டே, "என் நகைகளும் தங்க நகைகள் அல்ல; கவரிங் நகைகள்" என்றாள்.



மறுநிமிஷம், அவன் நகைகளை எறிந்துவிட்டு, ஓடிவிட்டான். என் அம்மாவின் சாதுரியத்தால், நகையும் கிடைத்தது. உயிரும் தப்பியது.

— ஏ. அண்ணாதுரை (10403),
பஞ்சலிங்கபுரம்.



என்ன பத்திரிகை?

ராமு: எங்க அப்பா ஒரு பத்திரிகை வெளியிட்டார். ஒரே மாதத்தில் அது ஏகப்பட்ட பணத்தை முழுங்கிடுச்சு.

சோமு: அப்படியா? அது என்ன பத்திரிகை?

ராமு: என் அக்காளின் கல்யாணப் பத்திரிகை

—வி. இ. ரமேஷ் (11484),
சென்னை—4.

உலகிலேயே பெரிய கடை!


உலகிலேயே மிகப் பெரிய புத்தகக் கடை லண்டனில் உள்ளது. கடையின் பெயர் டபுள்யூ அண்ட் ஜி பாய்ல். லிமிடெட். இங்குள்ள புத்தக அலமாரிகளின் நீளம் சுமார் இரண்டரை மைலாகும்.

— எஸ். மாதவன் (204),
திருச்சி—14.



எண் புதிர்

இந்த எண்ணில் உள்ள அதிசயம் என்ன? இதைத் தலைகீழாகப் பாருங்கள்.



She is ill (அவளுக்கு உடல் நலமில்லை) என்று கூறும்.

—பா. கதிர்வேலன் (9154),
வளத்தூர்.

எல்லாமே 6 எழுத்துக்கள்

இந்துக்களின் 'திருக்கோவில்' என்பதில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? ஆறு.

இதை ஆங்கிலத்தில் Temple என்று அழைக்கிறோம். இதிலும் மொத்தம் உள்ள எழுத்துக்கள் ஆறு! கிறிஸ்தவர்களின் மாதாகோயிலை Church என்கிறோம். முஸ்லீம்களின் பள்ளிவாசலை Mosque என்கிறோம். பௌத்தர்களின் புத்த விகாரை Pagoda என்கிறோம். இறைவன் ஒருவனே என்பதை உணர்த்தும் வகையில் இந்த ஆங்கிலச் சொற்கள் எல்லாமே ஆறு எழுத்துக்கள் கொண்டனவாக இருக்கின்றன! எத்தகைய ஆச்சரியமான ஒற்றுமை பாருங்கள்!

— தி. நா. ஓம்பிரகாஷ் (4462),
கடலூர்.





வடிகட்டின முட்டாள்!

ஒரு குருவிற்கு ஐந்து முட்டாள் சீடர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பால் காய்ச்சினான்; ஒருவன் தண்ணீர் கொதிக்க வைத்தான்; ஒருவன் வெந்நீரில் காப்பிப் பொடி போட்டு டிகாக்ஷனை வடிகட்டினான். ஒருவன் பால், டிகாக்ஷன், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்தான். ஒருவன் எல்லாருக்கும் காப்பியைக் கொடுத்தான்.

இவர்களில் யார் பெரிய முட்டாள்?

டிகாக்ஷனை வடி கட்டினானே அவன்தான் வடி கட்டின முட்டாள்!

— க. பிருந்தா (6526), தஞ்சை—7.



உறுதி கூறுகிறோம்

ஒரு போட்டோ கடையின் வாசலில் ஒரு போர்டு இருந்தது. அதில் எழுதியிருந்த வாசகம்:

எங்களிடம் நீங்கள் எடுத்துக் கொள்ளும் போட்டோ அழகாக இருக்கும் என்று எங்களால் கூற முடியாது. ஆனால், அது உங்களைப் போலவே இருக்கும் என்று உறுதி கூறுகிறோம்.

— ஆர். ஜானகிராமன் (6081),
சேலம்—1.



கருமியின் கோபம்


ஒரு கருமிக்கு அவருடைய நண்பர் ஒரு வாழைக் கன்றைக் கொடுத்தார். அதை நடுவதற்காக அந்தக் கருமி தன் மகனை அழைத்துப் பக்கத்து வீட்டிற்குப் போய் மண்வெட்டி வாங்கி வரச் சொன்னார். மகன் சிறிது நேரத்தில் திரும்பி வந்து, 'பக்கத்து வீட்டில் மண்வெட்டி இல்லையாம்' என்றான். 'சரி, எதிர் வீட்டில் வாங்கி வா'' என்றார். மகன் எதிர் வீட்டிற்குச் சென்று கேட்டான். அங்கும் இல்லை என்று திரும்பி வந்துவிட்டான்.

உடனே கருமிக்குக் கோபம் வந்துவிட்டது. 'சுத்தக் கஞ்சப் பயல்கள். இரவல் கேட்டால் கிடையாது என்கிறார்கள்'' என்று கூறிவிட்டு, ''சரி, சரி, நம் வீட்டு மண்வெட்டியை எடுத்து வா'' என்றார்.

— அ. நடராஜன் (4747),
அண்ணாமலைநகர்.

தை, தை

1. பிறக்கும் பொழுது அழும்—தை
2. கிளிக்கு மறுபெயர்—தை
3. ஊர்ந்து செல்லும் பிராணி—தை
4. நெருங்கிய உறவினன்—தை




விடை: 1. குழந்தை; 2. தத்தை; 3. நத்தை; 4. அத்தை

மயில் கூட்டம்

மயில்களைக் கூட்டமாகப் பார்க்க வேண்டுமா? புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளத்திற்கும்—வல்லத்தரா கோட்டைக்கும் இடையில் உள்ள வன இலாகாவுக்குச் சொந்தமான பகுதிக்குள் சென்றால், மயில் கூட்டத்தைக் கண்டு மகிழலாம். மயில்களின் அகவலையும் கேட்கலாம்.

— பு. அருள்மொழி (4280)
விக்கிரபாண்டியம்.




ஜப்பானில் தேசிய கீதம்

உங்களது ஆட்சி
பத்தாயிரம் ஆண்டு கால
ஆட்சிக் காலம்
ஆளுங்கள்
ஆண்டவரே,
ஆளுங்கள்!
எதுவரை என்று கேட்கிறீர்களா?
இன்றைய கூழாங்கற்கள்
மாபெரும் பாறையாக
உருவாகும்வரை
ஆண்டவரே,
எங்களை ஆளுங்கள்!

—இதுதான் ஜப்பானிய தேசிய கீதத்தின் பொருள்.

— அ. முருகன் (1076),
கோவை—3.



ஸ்வீட் கேர்ல்!

தங்கை: அண்ணா, நான் காதிலே லட்டு ஜிமிக்கி, கழுத்திலே சேமியா செயின், கைகளிலே ஜாங்கிரிவளையல் எல்லாம் போட்டுண்டு, சாக்லேட் நிறப் புடவை கட்டியிருக்கிறேனே, எப்படி இருக்கு?

அண்ணா: ஆகா! இப்போதான் நீ ஸ்வீட் கேர்ல்!

— ந. என். சரவணகுமார் (10838),
சேலம்—1.





அப்படி ஒரு பழக்கம்!

பிரபல நாவலாசிரியரான அலெக் ஸாண்டர் டூமாஸ் சுமார் 1200 புத் தகங்களுக்கு மேல் எழுதியவர். அவரிடம் ஒரு பழக்கம் உண்டு. நாவல் களை நீல நிறக் காகிதத்திலும், கவிதை களை மஞ்சள் நிறக் காகிதத்திலும், கட்டுரைகளை ரோஜா நிறக் காகிதத் திலும் தான் எழுதுவாராம். இப் பழக்கத்தை அவர் கடைசி வரை கை விட்டதில்லையாம்!

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி—14.

நாங்கள் பிறந்தது....?

ஏசுநாதர் பிறந்தது
அன்பு என்னும் பண்பிலே!

புத்தர் பிரான் பிறந்தது
கருணை என்னும் வடிவிலே!

காந்தித் தாத்தா பிறந்தது
உண்மை என்னும் உருவிலே!

நாங்கள் இன்று பிறந்தது
அவர்கள் வழியில் நடக்கவே!

— என். கனகராஜன் (8070),
சமத்தூர்.





பச்சை மிளகாய்ப் பாட்டு

பச்சை மிளகாய் படியிலே
பழுத்தி ருக்கும் செடியிலே.

கியாக் கியா ரோட்டிலே
குருவிக் குஞ்சு குளத்திலே.

புடிச்சாடி பொன்னம்மா,
புளிக் குளம்பு வைக்கலாம்.

நம்ப கொஞ்சம் குடிக்கலாம்.
அடுத்த வீட்டுக்குக் கொடுக்கலாம்,

எட்டிப் பார்த்த அத்தானுக்கு
சட்டியைத் தூக்கிக் காட்டலாம்.

— ஆர். வளர்மதி (5207),
ரத்தினம்பிள்ளையூர்.



இவர் 400 நூல்கள் எழுதினார்! 4 சங்கங்கள் நிறுவினார்!

தேவி நாச்சியப்பன்

ஆங்கிலத்தில் கதை படிக்கத் தெரிந்தசிறுவர்களுக்கு, எனிட் பிளைட்டன் (Enid Blyton) என்ற பெயர் தெரியாமல் இருக்க முடியாது. லட்சக்கணக்கான குழந்தைகளைத் தம் புத்தகங்களால் கவர்ந்தவர் எனிட் பிளைட்டன் என்னும் பெண்மணி. அவர் குழந்தைகளுக்காக 400 க்கும் மேற்பட்ட குழந்தைப் புத்தகங்களை எழுதியுள்ளார். இவருடைய புத்தகங்கள் 30 ஆண்டுகளுக்குள் மூன்று மில்லியன் (30 லட்சம்) பிரதிகள் விற்பனையானதாம்!

இவருடைய புத்தகங்களை சிறுவரும், சிறுமியரும் போட்டி போட்டுக் கொண்டு படித்தனர். 93 மொழிகளில் இவருடைய புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய கதைகள் பத்திரிகைகளில் தொடராக வெளி வந்தன. கார்ட்டூன், படங்களாக வெளியிடப்பட்டுள்ளன. தொலைக் காட்சியிலும் இவரது பல நாடகங்கள் நடிக்கப்பட்டன. இந்தியக் குழந்தைகளில் நிறையப் பேர் எனிட் பிளைட்டன் கதைகளை மிகவும் ரசித்துப் படிப்பதை இன்றும் பார்க்கலாம்.

எனிட் பிளைட்டன் இளம் வயதில் பியானோ வாசிக்கக் கற்றுக் கொண்டார். இசை அரங்குகளில் பாடுவதற்கு லைசென்ஸும் எடுத்துவிட்டார். ஆயினும் குழந்தைகளுக்குக் கதை எழுதுவதிலே அவருக்கு ஆர்வம் இருந்தது. ஆகையால், இசைத் துறையை விட்டு எழுத்துத் துறையில் ஈடுபட்டார்.

குழந்தைகளுடன் நெருங்கிப் பழகுவதற்காக முதலில் ஒரு பள்ளியில் ஆசிரியையாகச் சேர்ந்தார். சில நாட்களில் தாமே ஒரு பள்ளியைத் தொடங்கி நடத்தினார். அதன் பிறகு, நிறையக் கதை, கவிதை, நாடகங்கள் எல்லாம் எழுதினார். அவற்றை எல்லாம் எழுதத் தூண்டுகோலாக இருந்தது யார் தெரியுமா? அந்தப் பள்ளிப் பிள்ளைகள் தானாம்!

எனிட் பிளைட்டன் குழந்தைகளுக்கு எழுதுவது பற்றிக் கூறும்போது, "குழந்தைகளுக்கு எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். குழந்தைகளுக்காக எழுதுகிறவர்களுக்குக் கற்பனைத்திறன் நிறைய இருக்க வேண்டும். வாழ்க்கையில் நாம் காணும் வேடிக்கைகளையும், விநோதங்களையும், சந்தோஷங்களையும், சாதனைகளையும் கதையில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்ற வகையில் கூற வேண்டும்.

"நான் கதை எழுதும் முன்பு கண்களை மூடிக் கொண்டு மனக் கண்ணால் பார்ப்பேன். அப்போது கதையில்வரக் கூடியவர்கள் அனைவரும் என் மனக் கண்ணில் தெரிவார்கள். அவர்களின் உரையாடல் என் காதுகளில் விழும். அவற்றை முழுவதுமாகத் தெரிந்து



கொண்டு, நான் அவற்றை எழுதிவிடு வேன்'' என்று கூறுகிறுர்.

1940 ஆம் ஆண்டு எனிட் பிளேட் டன் முழு நீளச் சிறுவர் நாவல்களை எழுதத் தொடங்கினுர். சிறுவர்களி டம் அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. நாவல்கள் மூலம் எனிட் பிளேட்டன் பிரபலமடைந்துவிட்டார்!

எனிட் பிளேட்டன் எழுதிய 'ரகசிய மான ஏழு' (Secret Seven) 'பிரபலமான ஐந்து' (Famous Five) போன்ற நாவல் களின் மூலம், அவருக்கு நிறைய வாச கர்கள் கிடைத்ததோடல்லாமல், அந்த வாசகர்கள் நிறைய நிறையப் பணமும் திரட்டி அனுப்பினுர்கள். அந்தப் பணத்தைக் கொண்டு இங்கிலாந்தில் நான்கு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட் டன. ஏழைக் குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் அந்தச் சங்கங் கள் உதவி வந்தன.

சங்கத்தில் உறுப்பினராக இருந்த வர்கள் பெரும்பாலும் சிறுவர்களே. அவர்கள் எப்படிப் பணம் சேர்த்தனர் தெரியுமா? பெரியவர்கள் கடைக்குச் செல்லும்போது உதவி புரிவது, அரு கில் வசிப்பவர்களின் நாயை வெளி யில் அழைத்துச் செல்வது, பழைய செய்தித் தாள்களை வாங்கி விற்பது, கார்களைக் கழுவுவது போன்ற வேலை களைச் செய்து, அதில் கிடைக்கும் பணத்தைச் சங்கத்திற்குக் கொடுத் தனர். அவர்கள் இவ்வாறு செய்ததற் குக் காரணம் என்ன தெரியுமா? எனிட் பிளேட்டன் கதைகளை மிகவும் ஆர்வமாகப் படித்துப் படித்து அவர் மேல் மிகுந்த அன்பு கொண்டார்கள். எனிட் பிளேட்டனுக்கு எப்படி யாவது உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணம்தான் அவர்களை இந்த மாதிரி முயற்சிகளில் ஈடுபடச் செய் தது.

நான்கு சங்கங்களில், 'பிரபலமான ஐந்து (Famous Five) என்னும் சங்கம் குறிப்பிடத்தக்க ஒன்று. அதில், 1,15,000 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் பியாகான்ஸ் பீல்ட் (Beacodsfield) என்னும் இடத்தில் 'குழந்தைகள் இல்லம்' என்ற ஒன்றை ஏற்படுத்தி அதை எனிட் பிளேட்டன் பொறுப்பில் விட்டனர். பட்டினி யாலும், நோயாலும் கஷ்டப்பட்ட ஐந்து வயதுக்குள்ளான 30 குழந்தை கள் அந்த இல்லத்தில் சேர்க்கப்பட்ட னர். அந்தக்குழந்தைகள் எனிட்பிளேட் டனின் கவனிப்பில் மகிழ்ச்சியாக வளரத் தொடங்கினர்.

மற்ற மூன்று சங்கங்கள் என்ன செய்தன என்று அறிய ஆவலாக இருக்கிறீர்கள் அல்லவா? 22,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை உடைய 'சன்பீம் சங்கம்' (Sunbeam Society) என்ற அமைப்பின் உதவியால் எனிட் பிளேட்டன் 'சன்ஷைன் இல் லம்' (Sunshine) என்பதைக் கண் தெரி யாத குழந்தைகளுக்காக நடத்தினுர்.

'ஸ்பாஸ்டிக் சங்கத்'தின் (Spastic Club) உதவியால் ஊனமுற்ற குழந்தை களுக்கான இல்லத்தை நடத்தினுர்.

குழந்தைகளிடம் மட்டுமன்றி விலங்குகளிடமும் எனிட் பிளேட்ட னுக்கு மிகுந்த அன்பு உண்டு. 'பிஸி பீஸ்' (Busy Bees) என்ற சங்கம் விலங்கு களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தீர்த் தது.

இவ்வாறு எனிட் பிளேட்டன் கதை, கவிதை எழுதுவதோடு நல்ல சமூகத் தொண்டும் புரிந்து வந்தார். திரு மணமே செய்து கொள்ளாமல், தன் நாட்டுக் குழந்தைகளுக்காகவே வாழ்ந் தார். குழந்தைகளுக்கு எழுதுவதில் இவரைக் காட்டிலும் உலகப் புகழ் பெற்ற ஒருவர் இல்லை என்றே கூற வேண்டும். பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உதவியுடன் இப்படிப் பணம் திரட்டியவரும் இல்லை என்றே சொல்ல வேண்டும். 1968ம் ஆண்டு இவர் மறைந்தாலும் அவருடைய நூல் கள் என்றும் நம்மிடையே வாழும்!



பிருந்தாவனக் கவியரங்கம்

கொண்டாட்டம்



மழை மேகம் வந்துவிட்டால்,
மயில்களுக்குக் கொண்டாட்டம்.

மலர்த்தேனை உண்டுவிட்டால்,
வண்டுகட்குக் கொண்டாட்டம்.

அழகுநிலாக் கண்டுவிட்டால்,
அலைகளுக்குக் கொண்டாட்டம்.


அன்புளங்கள் இணைந்துவிட்டால்,
அன்றாடம் கொண்டாட்டம்.

திருநாட்கள் வந்துவிட்டால்,
தெருவெல்லாம் கொண்டாட்டம்.

தேர்வுகள் முடிந்துவிட்டால்,
மாணவர்க்குக் கொண்டாட்டம்.

முடிவுகள் தெரிந்துவிட்டால்,
வென்றவர்க்குக் கொண்டாட்டம்.

—வி. மீனாட்சி (9145), புதுக்கோட்டை.



இரயில் வண்டி

'குபுகுபு' என்றே இரயில்வண்டி
கூகூ என்றே கத்துது பார்.
தடதட என்ற சத்தமுடன்
தண்ட வாளத்தில் செல்லுது பார்.
கருகரு என்றே புகை விட்டுக்
கடிதாய் வண்டி செல்லுது பார்.
சிறுசிறு பெட்டிகள் ஒன்றன்பின்
சங்கிலி போலச் செல்லுது பார்.

கரிகரி என்றே சாப்பிட்டுக்
கறுப்பாய் ஆனது என்ஜின்தான்.
குதிரை போலப் பல இடங்கள்
விரைவாய்ச் சென்று சேருது பார்.

ஸ்டேஷன் இரயிலின் சத்திரமாம்.
நீரும் கரியும் உண்ணுது பார்.
கையில் சிகப்புக் கொடிகண்டால்
கம்மென அதுவும் நிற்குதுபார்.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமில்லை.
ஒன்றாய்ச் சுமந்து சென்றிடுமே.
நாட்டின் பற்பல இடம்காண
நாமும் அதிலே செல்வோமா?

—அ. இளங்கோவன் (4140), சேலம்.



அறிஞர் ராஜாஜி

அறிஞர் ராஜாஜி — நம்
அருமை ராஜாஜி.

விடுதலைக்குப் பலவகையில் பாடு பட்டவர்;
வீரமாக, நேர்மையாக ஆட்சி செய்தவர்;
குடிகெடுக்கும் குடியைநீக்க வழி வகுத்தவர்;
குட்டிக்குட்டிக் கதைகள் கூறி அறம்
வளர்த்தவர்.

அறிஞர் ராஜாஜி—நம்
அருமை ராஜாஜி.

சக்கரவர்த்தித்திருமகனைநமக்குக்காட்டினார்;
சத்துமிக்க வியாசர் விருந்தை நன்கு
ஊட்டினார்.
மிக்கநல்ல உரைகள்மூலம் குறளை விளக்கினார்.
மேதையென்று உலகம்போற்றச் சிறந்து
விளங்கினார்!

—விஜி (397), மதுரை.

அழகு நிலா

அழகு நிலா, அழகு நிலா
அதோ பாருங்கள்.
அமெரிக் கர்கள் அதிலே சென்று
இறங்கி விட்டார்கள்

வட்ட மான தட்டு என்ற
பாட்டி கதையெல்லாம்
வெட்ட வெளிச்சம் ஆகிப் போச்சு,
இந்த நாளிலே!

காற்று மில்லை; தண்ணீ ரில்லை
அந்த நிலவிலே
கணக்கில் லாமல் பணத்தைக் கொட்டிக்
கண்டு பிடித்தனர்!

குழந்தை முகம் பார்த்த நிலா
தலை குனிந்ததாம்
கோடி மக்கள் காணத் திரையில்
காட்சி தந்ததாம்.

— ஆர். சுரேந்திரன் (9415), விருதுநகர்.

என்னைப் பற்றி

காலையில் நானும் எழுந்திடுவேன்
கருத்தாய்ப் பற்கள் துலக்கிடுவேன்.
வாளியில் தண்ணீர் இறைத்திடுவேன்
மகிழ்வுடன் தேய்த்துக் குளித்திடுவேன்.

அதன்பின் இறைவனை வணங்கிடுவேன்
அன்பாய் அன்னையைப் பணிந்திடுவேன்
உடனே பாடம், படித்திடுவேன்.
உண்டபின் பள்ளி சென்றிடுவேன்

பாடம் நன்றாய்ப் படித்திடுவேன்
பலரும் போற்றச் சிறந்திடுவேன்
மாலையில் வீடு திரும்பிடுவேன்
வாசலில் கால்கை அலம்பிடுவேன்.



தோழர்க ளுடனே ஆடிடுவேன்
தேகம் வலுப்பெறச் செய்திடுவேன்
ஆவலாய்ப் பாடம் படித்திடுவேன்.
அதன்பின் உண்டு தூங்கிடுவேன்.

நல்ல பையன் இவன் எனவே
நாடு போற்ற உயர்ந்திடுவேன்
என்றால் தொல்லை வீட்டினிலே
எவர்க்கும் இல்லை, அறிவீரே!

— ஆர். ஜெ. ஜெய்குமார் (11384)
மதுரை.



கார் தபால்!

பூனையும் புலியாகும்!

12 மாதங்களாக டாக்டர் பூவண்ணன் எழுதிய 'ஒரு பூனை புலியாகிறது!' படித்து ருசித்த எங்களுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் கதை முடிவுற்றது பெரும் ஏமாற்றமே!

— இரா. வேல்மணி, சின்ன சேலம்.

* சேரனைப் போல் ஒவ்வொருவரும் உருவானால், பூனையும் புலியாகும் என்பது உறுதி.

— ஏ. அந்தோணிராஜன் (8060), கோவை—9.

* டாலரால்சேரன் பட்டபாடுவீண்போகாததை அறிந்து நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. டாலருக்கு ஜே! சேரனின் நன்றியுணர்ச்சியைக் கண்டு நெகிழ்ந்த நாங்கள், அனைவருமே சேரனைப் போல் உருவாக, முத்துவைப் போல் சபதம் செய்து கொண்டோம்.

— சி. கிருத்திகா (1030), கோவை—17.

* 'ஒரு பூனை புலியாகிறது!' முடியப் போவதை அறிந்து வருத்தத்துடன் இருந்த எனக்கு, தங்கமணியின் 'அக்கினி பூதம்' அறிவிப்பு மகிழ்ச்சி தந்தது.

— அ. முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

* எங்கள் அபிமான எழுத்தாளர் தங்கமணி எழுதப் போகிறார் என்பதைப் படித்தேன். அளவில்லாத ஆனந்தம் அடைந்தேன்.

— க. ஆனந் (11496), திருவிடைமருதூர்.

* முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தினம் கலைமாமணி ஔவை டி. கே. சண்முகம் அவர்களின் 'குழந்தைப் பருவம்' மிகவும் சிறப்பாக இருந்தது. ஔவை சண்முகம் அவர்களின் மாமா யார் தெரியுமா? மனோன்மணியம் என்னும் உயர்ந்த நாடகக் காப்பியத்தை எழுதிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களே.

— இ.பொ. நடராசன், சென்னை—5.

* ஔவைடி.கே. சண்முகத்தின் வாழ்க்கை முன்னேறத் துடிக்கும் குழந்தைகளுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஆர்வம், குருபக்தி—இரண்டும்தான் எதிர்காலத்தை வளப்படுத்தும் என்பது உறுதி.

— பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

* மகாகவி பாரதியாரின் குட்டிக்கதைகள் ஒவ்வொன்றும் வெல்லக் கட்டியாக இனித்தது.

— ஆர். எஸ். இராஜு, சீர்காழி.

* 'கியூபே' கதையில் கதாசிரியர் வேடன் துப்பாக்கியால் மானைக் குறி பார்ப்பதாக எழுதியிருக்கிறார். ஓவியத்திலோ வில்லால் குறி பார்ப்பதாக வரையப்பட்டிருக்கிறதே!

— ஆர். ஜி. சிவக்குமார், பழனி.

* அரசன் ஆர்தரும் வட்ட மேஜை வீரர்களும்' படக்கதை மிகவும் அருமை. இது போன்ற கதைகளை மேலும் வெளியிட வேண்டுகிறேன்.

— ஜி. ராதாகிருஷ்ணன் (5356), மயிலாடுதுறை.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதிகளை நான் சேகரித்து வருகிறேன்.

— அ. சரவணராசன் (11386), திட்டக்குடி.

* விளையும் பயிர் சுநீதா ஈழத்துப் பெண் என்றவுடன் ஆச்சரியமடைந்தேன்.

— தேரழுந்தூர் மு. ஜானகிராமன்.

* ஆட்டுக்குட்டி பாட்டு, யாருடைய பாட்டு?' கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. ஒரு புகழ் பெற்ற பாடலின் வரலாறு சுவையாக பயன் பெறத் தக்க வகையில் எழுதப்பட்டுள்ளது.

— ஜெயசீலன், புதுவை—10.

* வரலாறு படிப்பது என்றாலே கசந்து கொள்ளும் என் மாணவ மாணவியர்கள், 'கோகுல'த்தில் வரும் சித்திர வரலாற்றுத் தொடர்கதைகளை மிகவும் விரும்பிப் படிக்கின்றனர். 'கோகுலம்' உண்மையிலேயே ஓர் அறிவுக் களஞ்சியம்!

— கல்பகம்தம்பு, பாபநாசம்.

* நான் தங்களுடைய கோகுலம் பத்திரிகையை என்னுடைய பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கிறேன். பத்திரிகையில் பிள்ளைகளுக்குத் தேவையான எல்லா அம்சங்களும் உள்ளன. பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கும், நல்ல ஆரோக்கியத்திற்கும் தேவையான உடற்பயிற்சிகளைப் பற்றிய தொடரும் வெளிவந்தால் மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

— சே. பரமசிவன், மேலகிராமம்.

* 'என் கதையைக் கேளுங்கள்' பகுதியில் அவ்வப்போது மிருகங்கள் கதை சொல்லுகிறதே அந்தக் கதையைத் தொடர்ந்து எழுதுபவர் யார்? அதற்குப் படம் வரைகிறவர் யார்?

— எஸ். கோபிநாதன் (9284), மதுரை.

(நிறையப் பேர் இப்படி எழுதிக் கேட்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருங்கள்; இருவர் பெயர்களையும் வெளியிடுவோம்.

— ஆசிரியர்.)



கணித மேதை இராமானுஜன்

உலகம் போற்றும் கணித மேதையாகிய இராமனுஜன் பிறந்தது ஈரோட்டில். இவருடைய தந்தை கும்பகோணத்தில் ஒரு துணிக் கடையில் மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்து வந்தார்.

சிறு வயதிலிருந்தே இவர் கணிதத்தில் மிகவும் கெட்டிக்காரராக விளங்கினார். 'ஒவ்வோர் எண்ணுமே என் நெருங்கிய நண்பன்' என்பார். 20 வரிகளில் செய்யக்கூடிய கணக்கை இரண்டே வரிகளில் செய்து காண்பிப்பார்.


உயர் நிலைப் பள்ளியில் படித்து வந்தபோது தன் வீட்டில் தங்கிப் படித்து வந்த பி. ஏ. மாணவர்களின் கணிதப் புத்தகங்களிலுள்ள கணக்குகளுக்கெல்லாம் விரைவிலே விடை கண்டு பிடித்துவிடுவார். கல்லூரி நூலகத்திலிருந்த கணித நூல்களையெல்லாம் அவர்களை எடுத்துவரச் சொல்லி, அவற்றிலுள்ள கணக்குகளையெல்லாம் போட்டுப் பார்ப்பார். பி.ஏ. படித்த அந்த மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் உடனுக்குடன் தீர்த்து வைப்பார்!

இவருடைய கணிதத் திறமையைக் கண்டு ஆசிரியர்கள் வியந்தார்கள். அறிஞர்கள் பாராட்டினார்கள். இவருடைய கணிதக் கட்டுரைகள் பல ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவற்றைப் படித்த மேல்நாட்டு அறிஞர்கள் பாராட்டினர்.

பிறகு. இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் சென்று ஆராய்ச்சிகள் செய்தார். அங்கிருந்தபோது இவரது மேதை முழுமையாக வெளிப்பட்டது. இங்கிலாந்திலுள்ள ராயல் சொஸைடி இவரைத் தன் உறுப்பினராக்கிச் சிறப்பித்தது. இந்தப் பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் இவரே!

உருவகக் கதைகள்

— மலையமான் —



குடையும் செருப்பும்

அந்தச் செருப்பு குடையுடன் பேசுவதற்கு ஏங்கிக் கொண்டிருந்த வாய்ப்பு ஒரு நாள் கிடைத்தது.

"ஏ குடையே, இந்த மனிதன் நன்றி கெட்டவன்" என்று பேச்சைத் தொடங்கியது.

"ஏன் இப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டது குடை.

"நான் இவனுக்காக எப்படி எப்படியெல்லாம் உழைக்கிறேன். ஆனாலும், இவனுக்கு கொஞ்சம்கூட நன்றி உணர்வே இல்லை."

"எனக்கு அப்படித் தெரியவில்லையே!"

"நான் உழைத்து உழைத்துத் தேய்ந்து போகிறேன். நீ அப்படித் தேய்வதில்லையே!"

"நீ தேய்ந்து போவது உண்மை தான். ஆனாலும்...."

"நான் இவனை முள், கல், வழியில் கிடக்கும் பூச்சிகள் இவற்றிலிருந்து காப்பாற்றுகிறேன்."

"நான் மழை, வெயில் படாமல் இவனைக் கவனித்துக் கொள்கிறேன்."

"நான் இல்லை என்றால், இவனால் சுடும் வெயிலில் தார்ரோட்டில் நடக்க முடியுமா?"

"அது சரி, நாம் இரண்டு பேரும் இவனுக்கு உதவி செய்கிறோம்."

"ஆனால், உன்னை விட நான்தான் இவனுக்கு அதிகமாக உதவி செய்கிறேன். அப்படி இருந்தும்...."

"நான் மழை, வெயில் காலத்தில் தான் இவனுடன் இருக்கிறேன். எப்பொழுதுமே இவனுடன் நீ இருக்கிறாய் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இவன் நன்றி கெட்டவன் என்று நீ எப்படிச் சொல்ல முடியும்?"

"நான் இவனுக்காக இப்படிக் கடுமையாக உழைத்தாலும்கூட, இவன் என்னை வீட்டின் வெளியிலேயே நிறுத்தி விடுகிறான். ஆனால், உன்னை மட்டும் வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போகிறான். இது நன்றி கெட்ட குணம் இல்லையா?"

குடை ஒரு நிமிடம் சிந்தனை செய்தது.

"உன்னை வெளியே நிறுத்துவதற்குக் காரணம் தெரியுமா? நீ என்னை விட கடுமையாகத் தொண்டு செய்தாலும்கூட, தெருவில் கிடக்கும் மோசமான அசிங்கமான பொருள்களுடனெல்லாம் நீ நட்புக் கொள்கிறாய். சில சமயங்களில் அந்த அசுத்தமான நண்பர்களைக் கூடவே அழைத்துக் கொண்டும் வந்து விடுகிறாய்! அது மனிதனுக்குப் பிடிக்கவில்லை. நான் அப்படிப்பட்டவருடன் சேர்வதில்லை. அதனால்தான் இவன் உன்னை மட்டும் உள்ளே அனுமதிப்பதில்லை" என்று குடை சொன்னதும், செருப்புக்கு அதைஎப்படி மறுப்பதுஎன்பதுதெரியவில்லை. அது மறுமொழி கூறவில்லை

அணிலும் எலியும்

ஓர் எலி, வீட்டின் பின்புறம் ஓடி வந்தது. அது பக்கத்திலிருந்த மரத்தின் அடியை நோக்கிப் பாய்ந்தது. அங்கிருந்த புதரின் நடுவிலிருந்த ஒரு பொந்தில் ஒளிந்து கொண்டது.

அதைத் துரத்திக் கொண்டு அங்கு வந்தஒருபூனை ஏமாற்றத்துடன்திரும்பி விட்டது.

இவ்வளவையும் மரத்தின் மேலிருந்த ஓர் அணில் கவனித்துக் கொண்டிருந்தது. அது கொஞ்ச நேரம் கழித்துக் கீழே இறங்கி வந்தது. அந்தப் பொந்தின் அருகில் சென்றது. உள்ளே எட்டிப் பார்த்தது.

தன்னை அணில் தேடுவதைக் கவனித்த எலி மெதுவாக வெளியே வந்தது. அணிலிடம் பேசத் தொடங்கியது.

''அணில் அண்ணு. நலமாக இருக்கிறீர்களா?'' என்று பேச்சை ஆரம்பித்தது. எலி தன்னிடம் உறவு கொண்டாடுவதைக்கண்ட அணில்திகைத்துப் போய்த் திறந்த வாய் மூடாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

''ஏன் அண்ணு, என்னை இப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று மறுபடியும் தானே பேசியது எலி.

''நீ என்னை அண்ணு என்று உறவு முறை கொண்டாடுவது எனக்குச் சிறிதும் விளங்கவில்லையே!''

''நாம் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்பது எனக்குக்கூட ரொம்பகாலமாகத்தெரியாது. ஆனுல் ஒரு முறை இந்த வீட்டுப் பையன் பாடம்படித்துக்கொண்டிருந்தபோது, எலியும் அணிலும் ஒரே இனம் என்று உரக்கப் படித்தான். அது என் காதிலும் விழுந்தது. அப்போதுதான் எனக்கும் இந்தப் பெரிய உண்மை தெரிய வந்தது. நீங்கள் மரத்தின் மேல் உயரமான இடத்தில் இருப்பதால், உயர்ந்த உங்களை 'அண்ணு' என்று அழைத்தேன்.''

''நாம் இருவரும் ஒரே இனம் என்ருல் நீ இரவில் திரிகிருயே, அது என்?''



''அதுவா! எனக்கு அப்போதுதான் கண் பார்வை தெளிவாக இருக்கிறது!''

''சரி, நீ ஏன் பிறர் பொருளைத் திருடித் தின்கிருய்? அதனுல்தானே உன்னைப் பூனை துரத்துகிறது?''

''மரத்தின் பழத்தைவிட வீட்டின் எண்ணெய்ப் பணியாரம் சுவையாக இருப்பதனுல் நான் அப்படிச் செய்கிறேன்.''

''உன் பதில் சரியாக இல்லை. நான் என் உழைப்பை நம்பி நேர்மையாக வாழ்கிறேன். பகலில் உலவுகிறேன். திருடித் தின்னும் நீ இரவில் திரிகிருய். பயந்து சாகிருய். ஆகையால், நீயும் நானும் ஒரே இனமாக இருக்க முடியாது'' அணில் இப்படி மறுத்துவிட்டு நகர்ந்தது.

''உடற் கூற்றின்படி நீங்களும் நானும் ஓரினம் தான்'' என்று உரக்கக் கீச்சிட்டது எலி. ஆனுல் அணில் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அது வாலைத்தூக்கிக்கொண்டு மரத்தின் மேல் ஏறத் தொடங்கியது.

விடைகள்

கண்டுபிடித்தவர்கள்

1. ஓட்டிஸ்; 2. ஹென்காக்; 3. எடிசன்; 4. தெவனுன்; 5. ஃபல்டன்; 6. ஹையாட்; 7. வீலர்; 8. கோல்ட்; 9. பிளேக்; 10. வாக்கர்.

தலைப்பாகைகளும் தலைவர்களும்

1. மகாகவி பாரதியார்.
2. சுவாமி விவேகானந்தர்.
3. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனுர்.
4. வீர சிவாஜி.
5. ராஜா ராம்மோகன்ராய்.

பந்தாடும் சிறுவன்



இங்கே உள்ள வட்டத்தை ஒரு கனமுள்ள அட்டையில் ஒட்டிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு படத்தின் இடையே உள்ள நீண்ட கோட்டை பிளேடினால் வெட்டி துவாரம் செய்து கொள்ளுங்கள். (இடைவெளி அகலம் 2 மி.மீ. இருக்க வேண்டும்) வட்டத்தின் மத்தியில் ஒரு நீண்ட ஆணியை நுழைத்து நல்ல வெளிச்சம் உள்ள இடத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியில் படத்தின் பிம்பம் தெரியும்படி பிடித்துக் கொள்ளுங்கள்.

வட்டத்தின் பின்புறம் துவாரத்தின் வழியாகக் கண்ணாடியில் பையனின் படத்தைப் பார்த்தவாறு வட்டத்தைச் சுழற்றுங்கள். பையன், எழும்பி வரும் பந்தைத் தட்டிக் கொண்டேயிருப்பதைப் பார்க்கலாம்.

— கே. எஸ். ராமமூர்த்தி.

பிருந்தாவனக் கதையரங்கம்

நல்ல நாடகம்!

ஜி.ஷியாம் சுந்தர்
(8687)



மானூர் என்னும் கிராமத்தில், குப்பன் என்னும் விவசாயியும், அவன் மனைவியுமான குப்பம்மாவும் வசித்து வந்தார்கள். குப்பன் மிகவும் சோம்பேறியாக இருந்தான். குப்பன் பரம ஏழை. அவன் சோம்பேறி என்பது ஊரறிந்த விஷயம். குப்பம்மா தினக் கூலி செய்து வந்தாள். தினக் கூலி செய்து குப்பம்மா சம்பாதித்ததால் தான் அவர்களால் இரண்டு வேளை கஞ்சி குடிக்க முடிந்தது. குப்பன், தன் பொழுதைக் கனவு காண்பதிலேயே கழித்தான். அவன் மனைவி எவ்வளவு சொல்லியும், அவன் விவசாயமோ அல்லது வேறு வேலையோ செய்யாமல் கனவு காண்பதிலேயே பொழுதை கழித்து வந்தான்.

குப்பனது கனவு நனவாகும் போல் இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதனால், குப்பனது கனவு நனவாகும் என்ற நம்பிக்கை வளர்ந்தது.

ஒரு நாள், குப்பன், தன்னிடம் ஒரு பெயர் தெரியாத மனிதர் வந்து நூறு ரூபாய் தருவதாய்க் கனவு கண்டான். மறு தினம் நிஜமாகவே ஒருவர் வந்து நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டுச் சென்றார். குப்பனுக்குத் தலைகால் புரியவில்லை.

வெளியில்சென்றிருந்ததன் மனைவி வந்தவுடன் முதல் காரியமாய் இந்த விஷயத்தை அவளிடம் சொன்னான். ஆனால் அவன் மனைவியோ 'நான் என் தோழிக்குக் கொடுத்த கடனைத் தான் அவளது கணவர் வந்து கொடுத்திருக்கின்றார்' என்றாள். குப்பன் அதை நம்பத் தயாராக இல்லை. அவனோ தனது கனவுதான் நிஜமாகியிருக்கிறது என்று நினைத்தான்.

இதைப் போல், குப்பன் ஒரு நாள் தனக்கு விருந்துச் சாப்பாடு கிடைப்பது போல் கனவு கண்டான். மறு தினம் காலை வேளையில், ஒரு கேரியருடன் ஒருவன் வந்து, "ஐயா கொடுத்து அனுப்பியிருக்கார். நீங்கள் எல்லாம் கல்யாணத்துக்கு வராததனால் ஐயாவுக்கு, மிகவும் வருத்தம்" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

கேரியரைத் திறந்து பார்த்ததில் அதில் வடை, லட்டு, பாயசத்துடன் நிறையச் சாப்பாடு இருந்தது. குப்பன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் இதைத் தன் மனைவியிடமும் சொன்னான். அவன் மனைவியோ திடீரென்று ஞாபகம்வந்தவளாய்ச்சொன்னாள். "ஓ! இன்று கோடி வீட்டுப் பகபதியின் மகளது கல்யாணம். அவர் வந்து அழைத்திருந்தார். நான்தான் சொல்ல மறந்து விட்டேன். செல்லவும் மறந்து விட்டேன்" என்றாள்.

ஆனால் குப்பன் அதைக் காதில் போட்டுக் கொண்டால்தானே? அவன் இதையெல்லாம் தன் கனவின் பலன் என்று எண்ணினான். இந்த இரண்டு சம்பவங்கள் குப்பனை மகா சோம்பேறியாக மாற்றிவிட்டன.

குப்பனின் மனைவியோ குப்பனுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்கத் தீர்மானித்தாள். மறுநாள் அவள் கூலி வேலை செய்யக் கிளம்பவில்லை. இது கண்டு குப்பன் அதிர்ச்சி அடைந்தான். குப்பம்மாவிடம், "நீ ஏன் வேலைக்குப் போகவில்லை" என்று கேட்டான்.


அவளோ, "நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் ஒரு தேவதை என்னிடம் வந்து நான் இரவு ஒன்பது மணிக்கு வந்து உனக்கு நிறையப் பணம் தரப் போகிறேன் என்று கூறியது. இரவு ஒன்பது மணி என்று சொன்னதே தவிர இன்று இரவா, நாளை இரவா என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை" என்றாள்.

இதைக் கேட்டு குப்பன் மகிழ்ச்சி அடைந்தான். இந்தக் கனவும் நிஜமாகப் போவதாக எண்ணினான். ஆனால், ஒரு தேவதையும் வரவில்லை. குப்பனோ, இரவு ஒன்பது மணிக்குத் தேவதை வரும் என்று நினைத்தான். இப்படியே மூன்று தினங்கள் கழிந்தன. மூன்று தினமும் குப்பன் முழுப் பட்டினி. அவனது மனைவியோ ரகசியமாய்ப் பக்கத்து வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வந்தாள்.

குப்பனுக்குக் கனவு பலிக்காதது கண்டு ஆத்திரம் வந்தது. நான்காவது நாளும் ஒன்றும் நடக்காததைக் கண்டு கனவின் மீதுள்ள அவனது நம்பிக்கை மறைந்து விட்டது. அவன் வயலுக்குப் போக ஆரம்பித்துவிட்டான். இதைக் கண்டு அவன் மனைவியோ, தேவதைக்காகக் காத்திருக்கச் சொன்னாள்.

ஆனால் குப்பனோ, "கனவுகளை இனிமேல் நம்பாதே. நான் கனவுகளை நம்பி ஏமாந்துவிட்டேன். நான் ஒரு முட்டாள். ஆனால் இனிமேல், நான் உழைத்து முன்னுக்கு வருவேன்" என்றான். இதைக் கேட்டுக் குப்பம்மா மகிழ்ச்சி அடைந்தாள். பிறகு, "உங்களைத் திருத்துவதற்காக நான் போட்ட நாடகம்தான் இது" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

மறதி மன்னர்!



ப. அரிகரன் (5824)

மயிலைக் காடு என்று ஒரு கிராமம். அங்கு அறிவாளி ஒருவர் இருந்தார். ஆனால் அவருக்கு மறதி அதிகம். அங்கும், இங்கும் தேடுவார்.

ஒரு நாள் அவர் மற்றொரு கிராமத்திற்குச் சென்றார். அப்போது அவர் ஊரிலுள்ள மாந்தோப்பு, எல்லையிலுள்ள விநாயகர் கோவில் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டே சென்றார். செல்லும் வழியில் ஓர் காடு இருந்தது. அதில் அவர் தங்க நேர்ந்தது. அதனால் அவர் தூங்கும் போது தன் தலையருகில் ஒரு மரக் கிளையை ஒடித்து வைத்தார். தான் செல்ல வேண்டிய பக்கமாகக் கிளையின் இலைப் பக்கத்தை வைத்தார். அடிப் பக்கத்தை தான் வந்த பக்கமாக வைத்தார். நாம் தூங்கி எழுந்ததும், இலையுள்ள பக்கமாகச் செல்ல வேண்டும் என்று நினைத்தபடி தூங்கினார்.

அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஓர் ஆடு மேய்ப்பவன் தன் ஆட்டைக் காணாமல் தேடி வந்தான். அவன் தற்செயலாக அக்கிளை மேல் கால் வைத்துவிட்டான். அது உடனே திரும்பிக் கொண்டது. அதாவது, இலை இருந்த பக்கம் கிளையின் அடிப்பாகமும், அடிப்பாகம் இருந்த பக்கம் இலையுமாகத் திரும்பிவிட்டது.

அவர் தூங்கி எழுந்ததும், இலை


இருந்த பக்கம் நோக்கி நடந்தார். புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருகிறோம் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவருக்குத்தான் மறதி அதிகமாயிற்றே! சிறிது தூரம் சென்றதும், 'அடே, நம் ஊரின் எல்லையில் உள்ளது போல். இங்கும் விநாயகர் கோவில் இருக்கிறதே!' என்று நினைத்துக் கொண்டே நடந்தார்.

மேலும் சிறிது தூரத்தில் மாந்தோப்பு வந்தது. 'அடே, நம் ஊரிலுள்ளது போலவே இங்கும் மாந்தோப்பு இருக்கிறதே!' என்று நினைத்துக் கொண்டே நடந்தார்.

சிறிது நேரத்தில் அவருடைய வீடு வந்தது. 'அட, நம் வீட்டைப் போலவே இங்கும் ஓர் வீடு இருக்கிறதே' என நினைத்தார். அப்பொழுது அவர் மனைவி வெளியே வரவே, 'அட நம் மனைவியைப் போலவே இங்கும் ஓர் பெண் இருக்கிறாளே!' என்று ஆச்சரியப்பட்டார். அப்போது அவர் மனைவி, அவர் மறதியால் தான் இப்படி வந்து ஆச்சரியப்படுகிறார் என்று புரிந்து கொண்டு அவரை வீட்டினுள் அழைத்துச் சென்றாள். "என்ன ஆச்சரியப்படுகிறீர்கள்! நீங்கள்தான் மறதி மன்னராயிற்றே!" என்றாள்.

நரியின் பேராசை

செ. சுமதி (8967)



ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அந்நரி ரொம்பப் பேராசை உடையது. அது ஒருநாள் காட்டில் தீனி கிடைக்காததால் நாட்டிற்கு வந்தது. அப்போது அதற்கு ஒரு கயிறு கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு சிறிது தூரம் வந்து கொண்டிருந்தது.

அப்போது அதற்கு ஒரு பை கிடைத்தது. உடனே, நரிக்கு ஒரு யோசனை உதித்தது. அந்தப் பையை எடுத்துக் கொண்டு அந்தக் கயிற்றைப் பைக்குள் போட்டுக்கொண்டு அப்பையை இறுக்கிப் பிடித்துக் கொண்டது.

அப்போது அந்த வழியே வந்து கொண்டிருந்தான் ஒரு வழிப்போக்கன். அவன் கையில் ஒரு கம்பளம் இருந்தது. அதை வாங்க வேண்டும் என்ற ஆசையுடன் அவனிடம் சென்று,

"அண்ணா, இது என்ன துணி?" எனக் கேட்டது. அதற்கு அவன், "இது துணியல்ல. கம்பளம். அதுவும் பறக்கும் கம்பளம். இதன் மேலே அமர்ந்து கொண்டு மேலே பறக்கச் சொன்னால், உடனே பறக்கும். கீழே இறங்கச் சொன்னால் உடனே இறங்கும்" எனக் கூறினான். அதற்கு நரி, "உனக்கு ஏன் இது? இதோ இந்தப் பையில் ஒரு பாம்பு இரு....." நரி சொல்லி முடிக்கும் முன்பே,

"ஐயோ! பாம்பா! என்னை விட்டுடு. நான் போகிறேன்" என அலறினான்.

"யோவ், அவசரப்படாதய்யா. நான் சொல்றதைக் கவனமாக கேள்!"

"நீ என்ன சொல்லப் போறே!"

"இந்தப் பாம்பு வயிற்றிலே நிறையத் தங்கக் கட்டிகள் உள்ளன. ஆனால், இப்போது திறக்கக் கூடாது. வீட்டிலே வைத்து மூணு மணி நேரம் பூஜை போட்டு விட்டுத் திறந்து எடுத்துக் கொள். இப்போதே திறந்தாயானால் கயிறாகி விடும். எனக்கு அந்தக் கம்பளத்தை கொடுத்து விடு" எனக் கூறியது. அதற்கு அவன், "ஆ....அப்படியா! இந்தா கம்பளம். அதைக் கொடு" என வாங்கிக் கொண்டு விருட்டென்று சென்றுவிட்டான்.


நரி அக்கம்பளத்தை விரித்து அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டது. உடனே அது பறக்கத் தொடங்கியது. ஒரு பங்களாவைக் கண்டது. அப்பங்களாவில் யாரும் இல்லாததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தது. எல்லா

அறைகளையும் பார்த்துக் கொண்டே வந்தது. ஒரு அறையின் முன் வந்தபோது விதவிதமான சமையல்வாசனை கமகமத்தது. அவ்வறையினுள் சென்றது. அங்கு உள்ள பட்சணங்கள் அனைத்தையும் வயிறு முட்டத் தின்றது. அதற்கு நடக்கக் கூட சக்தியில்லாமல் தள்ளாடியது. அப்போது.....

அங்கே யாரோ வருகிற சத்தம் கேட்டது. அது கையிலேயே கம்பளத்தைக் கொண்டு வந்திருந்ததால் அதன் மேலேறி உட்கார்ந்து கொண்டது. அது பறக்க ஆரம்பித்தது.

அப்பங்களாவை விட்டுச் சிறிது தூரம் சென்றது. உண்ட களைப்பினால் அது தூங்க ஆரம்பித்தது. அது தூக்கத்திலிருந்து விடுபடாமலே கண்ணை மூடிக் கொண்டே, 'இந்த இடத்தில் இறங்கினால் சிறிது நேரம் தூங்கலாமே!' என எண்ணியது.

நினைத்த இடத்தில் இறங்கும் கம்பளம், நரி நினைத்தவுடன் அங்கே இறங்க ஆரம்பித்தது. கீழே இருந்த பெரிய கடலில் இறங்க ஆரம்பித்தது. அதற்கெனவே காத்திருந்தது போல் ஒரு திமிங்கலம் அந்நரியை விழுங்கியது. நரியின் பேராசை கடலிலே முடிந்தது.



அதற்கும் குடை!

"ஜிம்மி எனக்கும் குடை வேணும்னு அடம் பிடிச்சது...!"




அப்பாவின் வேலை

"வாரம் ஒரு புது பைலட் பேனா கொண்டு வர்றியே! உங்கப்பா எங்கே வேலை பண்றார்...?"

"'பைலட்டா' இருக்கார்...!"

சிறிது சிரிக்கலாம்!

பவித்ரா



பொருத்தமான படிப்பு

"'பால்' வியாபாரம் செய்து நான் உன்னை படிக்க வைக்கிறேண்டான்னு எங்கப்பா... அடிக்கடி சொல்லுவார்...

அப்ப 'பால்' டெக்னிக் படியேன்...!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



கணித மேதை இராமானுஜன்

பிறந்த நாள்: 22-12-1887 மறைந்த நாள்: 26-4-1920

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka